

கல்கி
KALKI
5.11.1967
40 காசு




Rêve d'or

an unforgettable French perfume...
from the house of Piver.



CROOKES INTERFRAN LIMITED, BOMBAY-25

CIL 22B



உஷ்... இருமலை நிறுத்தும் சக்திவாய்ந்த கஃப் மிக்சர் வேலை செய்கிறது

பார்முலா 44 இருமலை விரைவாக நிறுத்துகிறது... சளிக்கட்டை அகற்றுகிறது. அதன் துணைகொண்டு இரவு முழுவதும் அயர்ந்து தூங்குங்கள்.

விரைந்து செயல் புரியும் சக்தி வாய்ந்த பார்முலா 44, இருமலை அது ஆரம்பமாகும் இருமல் கட்டுப்பாடுக் கேந்திரத்திலேயே தடுத்து நிறுத்துகிறது. முதல் டோஸ்* சாப்பிட்டதும், இந்த கஃப் மிக்சர் நீடித்த இதத்தை அளிக்கவே தயாரிக்கப்பட்டதென்று நீங்கள் அறிவீர்கள். முக்கியமாக ஜலதோஷம், ஃப்ளு மற்றும் ப்ராங்கைடிஸினால் உண்டாகும் இருமலை அடக்க பார்முலா 44 மிகச்சிறந்தது.

• விரைவிலே நிச்சயமான நிவாரணம் பெற சரியான டோஸை பின்பற்றுங்கள்



விக்ஸ்
பார்முலா 44

உலகிலே மிக அதிகமாக விற்பனையாகும் கஃப் மிக்சர்

பெயிண்டு என்று கேட்காதீர்கள்



நேரோலாக் என்று கேளுங்கள்

மிகச் சிறந்ததுதான் பொருந்து மெனில், என்றும் குறிப்பிட்டுக் கேளுங்கள் நெரோலாக்—தரமான பெயிண்டு. தேர்ந்தெடுக்கப் பல்வேறு வகைகளிலே கொள்ளை அழகுச் சாயல்கள்—பல்லாண்டுகாலம் அழியா-திருந்து, என்றும் உங்கள் இல்லத்தை எழில்பட வைத்திருக்கும் வண்ணங்கள். குட்லாஸ் நெரோலாக் இந்தியாவிலேயே முதன் முதலாக அக்ரிலிக் அடிப்படை கொண்ட எமல்ஷன்—பெயிண்டை அறிமுகப் படுத்தியவர்கள்.

குட்லாஸ் நேரோலாக் பெயிண்டுகள்—வாங்கக் கிடைப்பவற்றுள மிகச் சிறந்தவை

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 29, பெரியண்ண மேஸ்திரி தெரு, சென்னை-1





வந்தவர்: என்ன பாகவதரே! வாயில் ஈ புகுந்தது கூடத் தெரியாமல் பாடிண்டிருக்கேள்!

பாகவதர்: நீங்கதான் சரியா கவனிக்கவில்லே வாயில் புகுந்தது ஈ இல்லே, கொசு!

கல்கி
பொருளடக்கம்

பிலவங்க, ஐப்பசி 19 - நவம்பர் 5


போயிட்டு வாய்யா!
தென் சென்னை
ஓட்டு
1967 பிப்ரவரி
இதோ வந்துவிட்டோம்!
ஓட்டு
1967 நவம்பர்


சாயும் கோபுரம்
இந்தத் தடையை அகற்றிவிடுவோம்
ப்ரதேச மொழிகள்
மொரார்ஜி
ஸேன்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 14

வாய்மையே எளிது, அதுவே வெல்லும்!

துறவு, தியாகம் இவற்றைப் போற்றியே வந்தாலும் பகவத்கீதையைப் போலவே திருக்குறளும் இல்லறத்தைச் சரிவர நடத்துவதே மக்களுக்கு நல்லது என்று வற்புறுத்துகின்றது. இதற்கு உதாரணம் மிகவும் அழகான ஒரு குறள் :

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

இந்தக் குறளின் பொருள்—பொய்யாமை என்கிற இல்லற விரதத்தை, பொய்யாமல் அதாவது உண்மையாக, உள்ளொன்று வெளியொன்றில்லாமல் தவறுமல் ஆற்றினுல், இல்லறத்தை விட்டுவிட்டுத் துறவறம் மேலான அறம் என்று எண்ணி, அதன் கடுமையான விரதங்களைச் சரிவர நடத்தாமல் துறவியாக இருக்க முயல்வது பிசகு. அப்படி முயலாமல் இருப்பது நன்று. துறவுக்குரிய விரதங்களைச் சுத்த உள்ளத்தோடு ஆற்றுவது மிகக் கடினம். உள்ளம் சுத்தமாக இல்லாமல் துறவு விரதங்களை வெளி நடவடிக்கைகளில் காத்தாலும் பயனில்லை. அதைத்தான் நன்றல்ல என்கிறுர் குறளாசிரியர். அந்த முயற்சியை விட்டுவிடுவது நலம் என்கிறுர். இல்லறத்தில் இருந்து கொண்டு பொய்யாமை என்கிற ஒரு விரதத்தை, பொய்யாமல், அதாவது குற்றமின்றியும் தவறுமலும் ஆற்றினுல் அதுவே மேலானது. 'அறம்பிற' அதாவது துறவு முறை வேண்டாம். முதலில் நிற்கும் பொய்யாமையில் 'மை' சற்றுத் தொழிற் பெயர். இரண்டாவதாக நிற்கும் 'பொய்யாமை' என்கிற சொல்லுக்கு 'பொய்யாமல்' என்று பொருள். வினையெச்சம்.

அதைப் போலவே இரண்டாவது அடியில் முதலில் நிற்கும் 'செய்யாமை' என்பது தொழிற் பெயர் உருவங் கொண்டதாயினும் அச் சொல்லின் பொருள் 'செய்யாமல்' என்று வினையெச்சமாகக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக நிற்கும் 'செய்யாமை' தொழிற் பெயர் — செய்யாதிருத்தல் என்பது அதன் பொருள். அந்த முயற்சி செய்யாதிருத்தல் நலம் என்பது இக் குறளின் உபதேசம்.

தொழிற் பெயரின் உருபு (மை) வினையெச்சப் பொருள் தருவதைத் திருவாய் மொழியிலும் சில இடங்களில் காணலாம்.

கடினமான முறையை மேற்கொண்டு அதைச் சரிவரச் செய்யாமல் செய்வதாகத் தோற்றம் காட்டுவதைவிட, இல்லறத்தில் இருந்து கொண்டு வாய்மையை உண்மை முறையில் காப்பாற்றிக் கடமை செலுத்தினுல் அது ஒன்றே போதும். 'ஸத்தியமேவ ஜயதே ந அந்ருதம்' — வாய்மையே வெல்லும் ; பொய்மை வெல்லாது.

வாய்மை உலகத்தை ஒன்றுக்கும். ஐம்பொறிகள் உடலுக்குப் பணி செய்வதைப் போல் வாய்மையும் இவற்றுடன் சேர்ந்தால் எல்லாருடைய உணர்ச்சிகளும் அறிவும் எல்லாருக்கும் பொதுவாகும். கண் பொய்யாது; நாக்கு பொய்யாது. அதைப் போல் ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சிகளையும் அடைந்த அறிவையும் உண்மையாக மற்றவர்களுக்கு எப்போதும் உணர்த்துவது கடமை என்று தவருத இல்லற தருமமாக ஏற்பட்டு விட்டால் பிறகு மக்களின் உணர்ச்சிகளும் அறிவும் எவ்வளவு விசாலப்பட்டுப் போகும்! மிகச் சிறந்த ஆருவதொரு புலனுக வாய்மை அனைவருக்கும் பணி செய்யும். மக்களுலகத்தை வாய்மை ஒன்றுக்கும். தனித் தனி உயிர்களாக வாழ்ந்து வரும் மக்கள் அனைவரும் ஆறு புலன்களுடன் ஒருயிர் ஆவார்கள்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

காமகோடியின் கருணை மொழி

தீபாவளி எல்லாப் பண்டிகைகளைக் காட்டிலும் அதிகக் கியாதி அடைந்திருக்கிறது. ஒரு பண்டிகை வடக்கே தெரியும்; தெற்கே தெரியாது. ஒரு ஜாதிக்காரர் ஒரு பண்டிகை கொண்டாடுவார்கள்; இன்னொரு ஜாதிக்காரர் கொண்டாட மாட்டார்கள். ஓணம் என்று மிகவும் விசேஷமாக மலையாளத்தில் ஒரு பண்டிகை கொண்டாடுகிறார்கள். நமக்கு அது தெரியாது. வடக்கே இருக்கிறவர்கள் சாயத் தண்ணீரை ஒருவர்மீது ஒருவர் அடித்துக் கொண்டு ஹோலிப் பண்டிகை கொண்டாடுகிறார்கள். அதுவும் நமக்குத் தெரியாது. இப்படி ஒவ்வொரு பிராந்தியத்தில் மட்டும் ஒவ்வொரு பண்டிகை முக்கியமாக இருக்கிறது. ஆனால் தீபாவளி ஒன்றுதான் நம் தேசம் முழுவதும் எல்லா ஜாதிக்காரர்களாலும் எல்லா மதஸ்தர்களாலும் கொண்டாடப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து வந்த மதங்கள் தவிர, நம் நாட்டிலேயே பிறந்த இதர மதஸ்தர்களான ஜைனர்களும் பௌத்தர்களும்கூட தீபாவளி கொண்டாடுகிறார்கள். 'எத்தனையோ பண்டிகைகள் இருக்கின்றன; கர்மாக்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும்விட தீபாவளிக்கு ஏன் அதிகக் கியாதி வந்திருக்கிறது?' என்று யோசித்துப் பார்த்தால் ஒரு காரணம் தெரிகிறது.

தீபாவளி எப்படி ஏற்பட்டது? அஸ்ஸாம் நாட்டில் பிராக் ஜோதிஷம் என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு பூமாதேவியின் மகன் பௌமன் ஆண்டு வந்தான். அவனுக்குத்தான் நரகாசுரன் என்று பெயர். அவன் அநேக அக்கிரமங்கள் செய்து வந்தான். நிறைய தபஸ் பண்ணியவன் என்றாலும், தாமசமான வரங்களையே வாங்கிக் கொண்டதால் எல்லாரையும் ஹிம்சை செய்து உலகத்தை அடக்கி ஆண்டு வந்தான். ஸ்திரீகளுக்கும் சாதுக்களுக்கும் மிகுந்த கொடுமை செய்து வந்தான். அக்கினிக் கோட்டை, வாயுக் கோட்டை எல்லாம் கட்டிக் கொண்டு எதிரிகளிடமிருந்து தன்னை ஜாக்கிரதை செய்து கொண்டான். இருந்த போதிலும் கடைசியில் ஸ்வாமியே கிருஷ்ண பரமாத்மாவாக அவதாரம் செய்து, பல யுக்திகளைக் கொண்டு அவனை சம்ஹாரம் பண்ணினார். அப்போது அவன் நல்ல புத்தி பெற்று, தான் இறந்த தினத்தில் எல்லாரும் பண்டிகை கொண்டாட வேண்டும் என்று சொன்னதாகவும் இதுவே தீபாவளிப் பண்டிகை என்றும் சொல்வதுண்டு.

இந்த முடிவை வேறுவிதமாகவும் சொல்வதுண்டு. நரகாசுரன் மரணமடைந்தவுடன் அவனது தாயான பூமி தேவியே அத்தினத்தை எல்லாரும் பண்டிகையாகக் கொண்டாட வேண்டும் என்று பகவானிடம் பிரார்த்தித்ததாகச் சொல்வதுண்டு. இந்த அம்சம்தான் தீபாவளிக்குத் தனிப் பெருமை தந்திருக்கிறது.

ஸ்திரீகளுக்குப் புத்திரசோகத்தைக் காட்டிலும் வேறு பெரிய சோகம் கிடையாது. என்றாலும் நரகாசுரன் மரணமடைந்தபோது அவனது தாய், லோகம் முழுவதையும் ஏக சக்ராதிபதியாகப் பரிபாலனம் செய்த புத்திரன் போய்விட்டானே என்ற துக்கத்துக்கு இடம் தரவில்லை. 'அவனுக்கு பகவானை நேரில் பார்க்கிற பாக்கியம் கிடைத்ததே; பகவான் கையால் மோக்ஷம் பெறும் பாக்கியம் கிடைத்ததே' என்று மனத்தை ஆறுதல் செய்து கொண்டு, லோக க்ஷேமமாக அன்று பண்டிகை கொண்டாட வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டாள். 'என் பிள்ளை போனது இருக்கட்டும். எனக்குப் பிள்ளை போன துக்கம் ஏற்பட்டாலும் லோகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு துக்கமும் ஏற்படக் கூடாது. என் பிள்ளை போன இன்றைக்கு எல்லோரும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு, புத்தாடை உடுத்திக் கொண்டு, நல்ல விருந்து உண்டு, சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்று பகவானிடம் வேண்டிக் கொண்டாள்.

'ஊரார் பிள்ளைகள் நன்றாக இருக்கிறார்களே! நம் பிள்ளை அப்படி இல்லையே' என்றுதான் பொதுவாகத் தாபம் எழுமேயன்றி, 'நம் பிள்ளை எப்படிப் போனாலும் போகட்டும், ஊர்ப் பிள்ளைகள் சந்தோஷமாக இருக்கட்டும்' என்று நினைப்பு யாருக்கேனும் வருமா?

நரகாசுரனுடைய தாய்க்குத்தான் தன்னுடைய புத்திர சோகத்திலும்கூட உலகம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற நினைப்பு வந்திருக்கிறது. அதனால்தான் தீபாவளிக்கு மற்ற எல்லாப் பண்டிகைகளையும்விட அதிகக் கியாதி.

நமக்கு அநேகத் துன்பங்கள் ஏற்படுகின்றன. நாம் பல தப்புக்கள் பண்ணுவதால் துன்பங்கள் வருகின்றன. 'இந்தத் தப்பைப் பண்ணினோம் அல்லவா? அதற்காகத்தான் இக்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது' என்று சில சமயங்களில் நமக்கே தெரிகிறது. சில சமயங்களிலோ, 'நான் ஒரு தப்பும் பண்ணவில்லையே! எனக்குக் கஷ்டம் வந்திருக்கிறதே' என்று வருத்தப்படுகிறோம். காரணம் தெரியும்போது நம்மை நாமே சமாதானம் செய்து கொள்ளப் பார்க்கிறோம். தெரியாத போது இன்னும் அதிகத் துக்கத்தை உண்டாக்கிக் கொள்கிறோம். எல்லாக் காரியங்களுக்குமே நமக்குக் காரணம் தெரிந்துதான் இருக்க வேண்டுமா, என்ன? நமக்குக் காரணம் தெரியாமலும் பல துன்பங்கள் உண்டாகலாம். எப்படி இருந்தாலும் நமக்கு ஏற்படுகிற துன்பம் ஏற்பட்டே தீரும். என்றாலும் நாம் துன்பப்படுகிறோமே என்பதற்காக மற்றவர்க

ளும் துன்பப்படட்டும் என்ற எண்ணம் நமக்கு வரக் கூடாது

மனிதர்களாகப் பிறந்து விட்டோம். எப்போதுமே கஷ்டம்தான் நமக்கு அதிகமாக இருக்கும். சுகம் எப்போதோ வரும். திண்ணையிலிருந்து விழுந்தால் சிராய்ப்பு அல்லது சுளுக்கோடு நின்று விடுகிறது. மாடியிலிருந்து விழுந்தாலோ கைகால் மண்டை எல்லாம் நொறுங்கிப் போகின்றன. அப்படியே எவ்வளவுக்கு எவ்வளவு பெரிய மனிதர்களாக இருக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு பெரிய கஷ்டமாக வரும். ஆனாலும் நம் கஷ்டத்தையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அதை மறந்து உலகத்தின் சுகத்துக்காகப் பாடுபட வேண்டும். 'பிள்ளை இறந்து விட்டான் என்று அழுது பயனில்லை. இந்த ஒரு காரணத்தைக் கொண்டாவது லோகமெல்லாம் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்று பகவானிடம் பிரார்த்தனை செய்வோம்' என்ற ஞானம் நரகாசுரனுடைய தாய்க்குப் புத்திர சோகத்திடையே தோன்றியதுதான் விசேஷம்.

ஒன்று எந்தச் சந்தர்ப்பத்தில் உண்டாகிறது என்பதாலேயே அதற்கு ஒரு விசேஷம். தீபாவளிக்கும் பகவத் கீதைக்கும் இப்படித்தான் விசேஷம். பொதுவாக, நல்ல அழகான மரங்கள் அடர்ந்த சோலைகளும் நதிகளும் நிறைந்த சாந்தமான இடத்தி ; ; லேயே இல்லாமல் குரு சாந்தமாக இருக்கும்போது, சிஷ்யனும் சௌகரியமா யிருக்கிற சமயத்தில்தான் ஞானோபதேசம் நடைபெறும். ஆனால் பகவத் கீதை உபதேசம் நடைபெறுகிற சமயத்திலோ சூழ்நிலை இதற்கு நேர் மாறாக இருந்தது. அடுத்த க்ஷணத்தில் யாருடைய கை கால் இருக்கப் போகிறதோ, தலை இருக்கப் போகிறதோ, உயிர் இருக்கப் போகிறதோ, அர்ஜுனன் தான் இருக்கப் போகிறானா, கிருஷ்ணனுமே இருப்பானா என்று சொல்ல முடியாத நிலை அது. அப்பேர்ப்பட்ட சமயத்தில் உயிர் போவதாக இருந்தாலும் ஞானத்தை அடைய வேண்டியதுதான் முக்கியம் என்ற உணர்ச்சியில் பகவத் கீதை என்ற ஞானோபதேசம் நடந்தது. உயிரின் மேல் ஆசை இல்லாமல், உடலின்மேல் ஆசை இல்லாமல், உற்றார்மேல் ஆசை இல்லாமல், தத்துவம் ஒன்றிடத்தில் மட்டும் ஆசை கொண்ட சமயத்தில்—வழக்கமான ஞானோபதேசச் சூழ்நிலைக்கு மாறான ரணகளத்தில் — கீதை பிறந்தது. அதனால்தான் எத்தனையோ ஞான நூல்கள் இருந்தாலும் பகவத் கீதைக்கு அவை எல்லாவற்றைக் காட்டிலும் விசேஷம் ஏற்பட்டிருக்கிறது.

ரணகளத்தில் தத்துவமே பெரிதாக அர்ஜுனன் நினைத்தது போலவே, புத்திர சோகத்திடையே உலக க்ஷேமத்தை பூமாதேவி பெரிதாக நினைத்தது விசேஷம். அதனால்தான் நூல்களில் பகவத் கீதை போல், பண்டிகைகளில் தீபாவளி தனிக் கியாதி பெற்றிருக்கிறது.

நாம் துன்பப்பட்டாலும் லோகம் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதுதான் தீபாவளி கொண்டாடுவதன் பயன். இந்தப் பண்டிகை விட்டுப் போகாமல், இது சம்பந்தப்பட்ட புராணக்கதையும் மறைந்து போகாமல் இவ்வளவு காலம் இருந்து வருவது இதற்காகத்தான்.

தீபாவளிப் பண்டிகை கொண்டாடி, பட்டாசு வெடித்து, விருந்துண்பதோடு நாம் நிற்கக் கூடாது. 'நம்மைக் காட்டிலும் லோக க்ஷேமம் தான் பெரிசு' என்ற ஞானத்தை இன்று பெற வேண்டும்.





நரக வாழ்வு நீங்கட்டும்!

கடந்த சில மாதங்களாகவே நாட்டில் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புக்களும், கேரோக்களும் பெருகி வருகின்றன. இப்போது இது ஓர் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. விவசாயம் — தொழில் இரு துறைகளிலுமே உரிமையாளருக்கும் தொழிலாளருக்குமிடையே ஐக்கியம் மிகவும் குலைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் நிதமும் நடந்து வருகின்றன. ஒரு புறம் தொழில் வளம் பெருக வேண்டும், உற்பத்தி உயர வேண்டும் என்ற கோஷம் வானைப் பிளக்கும் போது இன்னொருபுறம் ஆலைகளிலெல்லாம் வேலைக்குத் தடங்கல் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இடதுசாரிக் கம்யூனிஸ்ட்களின் வாலாட்டம் இப்போது மிகுந்திருப்பது நிதரிசனம். இந்தத் தூண்டுதல் மட்டுமின்றி, அரசாங்கம் தங்கள் பக்கத்தில் மட்டுமே இருக்கும் என்ற துணிச்சலும் தமிழகப் பாட்டாளி மக்களுக்கு ஏற்பட்டுள்ளதோ என்றும் நினைக்க வேண்டியிருக்கிறது. முதன் மந்திரி திரு அண்ணாதுரை, சட்ட மந்திரி திரு மாதவன் முதலியவர்களின் பேச்சிலிருந்து தமிழக அரசு நியாயம் ஒன்றின் பக்கத்தில்தான் இருக்கிறது, சொந்தக்காரர் பக்கத்திலோ, பாட்டாளிகள் பக்கத்திலோ அதற்கு எவ்வித பட்சபாதமும் இல்லை என்று தெரிகிறது. ஆனாலும் ஒவ்வொரு துறையாகத் தினமும் பெருகி வரும் வேலை நிறுத்தங்களைப் பார்க்கும்போது அரசாங்கத்தின் சமநோக்கை மக்கள் புரிந்து கொள்ளவில்லையோ என்றே தோன்றுகிறது. இச்சமயத்தில், 'சர்க்கார் எல்லாருக்கும் பொதுவானது; சிறுபான்மை, பெரும்பான்மை இரண்டின் நியாயமான உரிமைகளையும் பேணிக் காக்கவே அது உள்ளது; எந்த ஒரு தரப்பும் அரசாங்கத்திடம் அதிகப்படி சலுகைகளை எதிர்பார்ப்பதற்கில்லை' என்பதைத் தமிழக அரசு திட்டவட்டமாகத் தெளிவு செய்ய வேண்டும்.

ஆனால் இது அரசாங்கத்தின் பிரச்னை மட்டுமல்ல. 'அசம்பாவிதம்' நேராமல் காப்பது போலீஸின் பிரச்னை மட்டுமல்ல.

முதலாளி — தொழிலாளி உறவு என்பது ஒரு மானுட உறவேயாகும். மானுட உறவு இயந்திர கதியிலோ, வெறும் பொருளாதார அடிப்படையிலோ மட்டும் அமைவதில்லை. அன்பும் விசுவாசமுமே அதன் ஜீவநாடிகள். அன்பும் விசுவாசமும் கலக்காமல் மனிதர்கள் இருவேறு வர்க்கமாகப் பிரிந்து, அவரவரும் தமது லாபத்தை மட்டுமே நினைந்து, அந்த அடிப்படையிலே தொடர்பு கொண்டால், 'மனித இனம்' என்று நமக்குச் சூட்டப்பட்டுள்ள கௌரவமான பெயருக்கே அது பங்கம் விளைவிப்பதாகுமல்லவா? இரு தரப்பிலும் இந்த அன்பும் விசுவாசமும் எப்படி விளையப் போகின்றன? மத்தியஸ்தக் குழுக்களை வைத்துக்கொண்டு அவ்வப்போது தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் மீண்டும் தகராறுகள் ஏற்பட்டபடிதான் இருக்கும். அவரவர் இதயத்துக்கும் உள்ளே நடுநிலைமையில் நின்று மத்தியஸ்தம் சொல்கிற ஒரு குரல் உண்டு. அதை இருதரப்பினரும் கேட்டு அதன்படி நடக்கும் அதிசயத்தை உண்டாக்க ஓர் அவதார புருஷன் வரவேண்டும் என்றே தோன்றுகிறது.

இல்லாவிடில் நித்தியச் சண்டையுடன், பரஸ்பர சந்தேகத்துடன் தான் நாட்டு வாழ்வு நடைபெறும். உற்பத்தியும், விலைவாசியும், ஊதியமும் எப்படியானாலும், இத்தகைய பேத உணர்வுகளில் நாடு நரகமாக வேண்டியதுதான். இந்த நரகத்தைச் சுவர்க்கமாக்க நம்மால் காரிய ரீதியில் எதையும் செய்ய முடிந்தாலும், முடியாவிட்டாலும் ஒன்று செய்வோம். நரகாக்ரனை வதைத்த நாயகனிடம் தேசத்தைச் சூழ்ந்துள்ள இருள் விலகும்படி பிரார்த்திப்போம். பிரார்த்தனைக்குள்ள பலம் நம் பௌதிக ஆற்றலால் சாதிக்க முடிவதைவிடப் பெரிதல்லவா?

தமிழகத்தின் 'வீடோ'

ஹிந்திக்குத் தமிழகம் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு 'வீடோ' செய்வது என்ற பெரிய பெயரைத் தந்திருக்கிறார் ஸ்ரீமதி இந்திரா காந்தி. மற்ற எல்லா ராஜ்யங்களும் ஹிந்தியை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், தமிழகம் மட்டும் எதிர்க்குமானால், அதை 'வீடோ' பிரயோகம் போல மதித்து ஹிந்தித் திட்டத்தை விட்டுவிட முடியாது என்று பொருள்பட அவர் பேசியுள்ளார். 'எல்லா ராஜ்யங்களும் ஹிந்திக்கு மாற விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்பது அவரது தந்தை தமது பதவிக் காலத்தில் தெளிவாக, குழப்பத்துக்கிடமில்லாமல் தந்த வாக்குறுதி. ஒரு ராஜ்யம் விரும்பாவிடில் அதை 'வீடோ' என்று கூறிப் புறக்கணிக்கப் பார்ப்பது நேரு அவர்களின் வாக்குறுதியிலிருந்து விலகுவதேயாகும். 'வீடோ' என்பது நன்றாகத் தொனிக்கவில்லை. ஆனால் பாதிக்கப்படும் ஒரே ஒரு ராஜ்யத்துக்குக்கூட இவ்வுரிமை இருப்பதால்தான் இந்தியாவை ஒரு நாடாகக் கட்டிக் காக்க முடிகிறது. இந்திரா காந்தி கூறும் இவ்'வீடோ' உரிமையோ, அவரது தந்தையின் வாக்குறுதியோ இல்லாவிடில் இந்தியா இரண்டு துண்டாக வேண்டியதுதான்; உணர்ச்சி அடிப்படையில் மட்டுமின்றி, சட்ட சாஸனத்தின் அடிப்படையில் கூட இப்பிளவு ஏற்படும். இந்திய யூனியனுக்குள் சிறுபான்மையினரைப் பேணுவதற்கு 'வீடோ' சக்தி அத்தியாவசியமாகும். நீண்ட காலமாக அறிவு விளக்கத்துக்கு வழி திறந்து வரும் ஒரு நல்ல ஏற்பாட்டை நிர்ப்பந்தமாக மாற்றுவதற்குத் தமிழ்நாடு ஒப்பவே ஒப்பாது.

ராஜாஜியின் கருத்துக்கள்

ஹிந்தி ஆதரவாளர்கள் சிருஷ்டி செய்துள்ள ஹிந்தியிலிருந்து உருது, பஞ்சாபி, மைதிலி, ராஜஸ்தானி யாவுமே மாறுபட்டவை என்பது சமீபத்தில் சிம்லாவில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கிலிருந்து திட்டவட்டமாகத் தெரிகிறது. இன்று ஹிந்தி ஆதரவாளர்கள் விரும்பும் ஹிந்தி என்ற மொழிக்கு மாறாக, ஹிந்துஸ்தானிக்கே இக் கருத்தரங்கில் அதிக ஆதரவு தரப்பட்டது.

***

இந்திய நாடு எவ்வளவு எளிதில் துண்டு துண்டாகிவிடத் தயாராயிருக்கிறது என்பதைக் காண விசனமா யிருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யத்திலும் பெரும்பான்மையாயுள்ள மொழிக்காரர்கள் தாங்களே ஆட்சியாளர்கள் என்று எண்ணத் தொடங்கி விடுகின்றனர். ஒரு ராஜ்யத்துக்கும் மற்றொரு ராஜ்யத்துக்குமிடையே உள்ள தொடர்புகள் ஏதோ இரு அந்நிய தேசங்கள் தொடர்பு கொள்வது போன்ற ரீதியில் மேற்கொள்ளப் படுகின்றன. சில இடங்களில் இனப் போரின் உச்ச நிலையையே குறிக்கும் போக்குகளைக் கூடக் காண்கிறோம். மொழிவாரி ராஜ்யப் பிரிவினையால் ஏற்பட்ட விளைவே இது என்று உணர்ந்து, இதே அடிப்படையில்விவகாரங்கள் விருத்தியாவதை வெறுக்கும் அறிவாளிகள் பெருகி வருகின்றனர். இந்தத் துரதிர்ஷ்டவசமான போக்கைத் தடுக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று எனக்கு ஏராளமான கடிதங்கள் வருகின்றன.

***

கடந்த மே மாதத்தில் பட்ஜெட் வெளியானதற்குப் பிற்பாடு ரயில்வே வருமானம் 'சோகசித்திரமாகி' வருகிறது என்று யூனியன் ரயில்வே மந்திரி நிருபர் கூட்டத்தில் கூறியிருக்கிறார். வேறெப்படி இருக்க முடியும்? தேசிய வருமானத்தில் எவ்வளவு பகுதியைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு ஒரு வரம்பு உண்டு. அந்த வரம்பைத் தாண்டியபின் சர்க்காரின் வருமானம் குறைய வேண்டியதுதான். இவ்வாறு முன்பே எச்சரிக்கை செய்திருந்தும், எல்லை மீறி வரி போடப்பட்டது. அதன் விளைவை இப்போது காண்கிறோம்.

***

தலைசிறந்த விஞ்ஞானிகளும் நுட்பத் தொழில் நிபுணர்களும் பொதுமக்களைக் கவரும்படி பிரதேச மொழிகளில் எழுதுகிற நூல்களினால்தான் இம்மொழிகளின் வளம் பெருகும். கட்டாயமாகப் பிரதேச மொழியில் போதனை நடத்துவதை விடவும், ஆங்கிலத்திலுள்ள பாட புத்தகங்களை விளங்காத முறையில் மொழி பெயர்ப்பதை விடவும், பிரதேச மொழி வளர்ச்சிக்கு இத்தகைய நூல்களே உதவி செய்யும். தமிழக அரசாங்கமும், மற்ற ராஜ்ய அரசாங்கங்களும் இந்த உண்மையை உணர வேண்டுமென விரும்புகிறேன்.

***

பி. யு. ஸி. பரீட்சையில் டி-ப்ளஸ் வாங்கியும், வைத்தியக் கல்லூரி அநுமதிக்கான பேட்டியில் விடை தெரியாமல் படுதோல்வியடைந்த பல மாணவர் இருந்தனர் என்று முன்பு குறிப்பிட்டிருந்தேன். ஆனபடியால் அவர்கள் பி. யு. ஸி. பரீட்சையில் தவறான உபாயங்களைக் கொண்டே உயர்ந்த மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்றும் கூறியிருந்தேன்.

முன்பு தள்ளப்பட்ட பல மாணவ மனுதாரர்களை இப்போது ஒரு புதிய கமிட்டி மீண்டும் பரீட்சித்துப் பார்த்தது. பேராசிரியர் ரத்தினசாமியைத் தலைவராகக் கொண்ட இக்கமிட்டியில் டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியமும், டாக்டர் ஏ. எஸ். ராமகிருஷ்ணனும் அங்கம் வகித்தனர். இப் பரீட்சையிலிருந்து, முன்பு செய்த அநுமானம் உறுதியாகியுள்ளது. பி. யு. ஸி. பரீட்சையில் சில மாணவர்கள் வாங்கிய மார்க்குகள் உண்மைத் தகுதிக்கு உரியனவல்ல என்று தெரிகிறது. உயர்நிலைப்பள்ளியிலிருந்து பி. யு. ஸி. முடிகிறவரை மாணவர்கள் படித்த விஷயங்களில் — பி. யு. ஸி. சர்வகலாசாலைப் பரீட்சையில் அவர்கள் இருநூற்றுக்கு 140லிருந்து 155 வரை மார்க் வாங்கிய பாடங்களில் — அவர்களில் சிலரால் அடிப்படைக் கேள்விகளுக்குக்கூடப் பதில் தர முடியவில்லையாம்.

முன்பு கமிட்டிக்குத் தலைவராயிருந்த முன்னாள் நீதிபதி திரு சோமசுந்தரம், இப்போதைய தலைவர் திரு ரத்தினசாமி ஆகியோருடைய அறிக்கைகளைச் சட்டசபையின் முன் வைத்து விவாதிக்க வேண்டும். சர்வகலாசாலைப் பரீட்சைகள் யுக்தப்படி நடக்க வேண்டும் என்பதில் மக்களுக்கு ஈடுபாடு இருப்பதால் இதனைச் செய்ய வேண்டும். மார்க்குகள் போடப்பட்டதில் ஜாதி அடிப்படையிலோ, அரசியல் அடிப்படையிலோ, வேறு விதத்திலோ எவ்விதச் செல்வாக்கும் பிரயோகிக்கப்பட்டதா என்பதை ஆராய முடியுமானால் ரசமாயிருக்கும்.

***

எதிர்ப்பு எத்தனை யிருந்தாலும் சரி, ஹிந்திதான் அகில இந்திய ஆட்சி மொழியாக வரும் என்று ஸ்ரீ மொரார்ஜி தேசாய் பிரதிக்ஞை செய்கிறார். தென் சென்னை வாக்காளர்களே, இதைக் கவனியுங்கள்! ஸ்ரீ மொரார்ஜிக்குப் பதில் சொல்லும் விதத்தில் வாக்களியுங்கள்! வார்த்தைகளைவிட அழுத்தமாகப் பேசுவது வோட்டு. இது வெறும் இடைத் தேர்தல் அல்ல. மகத்தான முக்கியத்துவம் பொருந்திய ஒரு பரிசோதனைத் தேர்தல் இது.









1.2.: ராஜா அண்ணாமலைபுரத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகளின் முன்னிலையில் யக்ஞங்கள் நடைபெற்ற புண்ணிய பூமியில் கடந்த 12ந் தேதியன்று 'சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மண்டபம்' ஸ்ரீ கே.எம். முன்ஷியால் திறந்து வைக்கப் பட்டது. ஸ்ரீ வைத்திய சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீ டி. எல். வேங்கட ராமய்யர், ஸ்ரீ கே. ஆர். சுந்தரம் அய்யர், ஸ்ரீ டி. வி. விசுவநாத அய்யர் ஆகியோர் பங்குகொண்டனர்.

3. 4.: பாரதிய வித்யாபவனத்தின் முப்பதாம் ஆண்டையொட்டிச் சென்னையில் அமைக்கவிருக்கும் கலியாண மண்டப நிருமாணம் ஸ்ரீ முன்ஷி அவர்களின் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது. சித்ரா ஸ்ரீ நாராயணசுவாமி இவ்விழாவில் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

5. கலாக்ஷேத்திரத்தின் சர்வதேச விடுதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்பு லக்ஷ்மி பாலர் அரங்கில் நிகழ்த்திய அற்புதமான உதவிக் கச்சேரியின்போது கலாக்ஷேத்திரத் தலைவி ஸ்ரீமதி ருக்மிணிதேவி எம். எஸ்ஸுக்கு மலர் மாலையும் புகழ்மாலையும் சூட்டினார். கச்சேரிக்குத் தலைமைவகித்த ஸ்ரீமதி சந்திரகாந்தி கோவிந்த ராஜுலு அவர்கள் வழங்கிய ரூ. 10,000 நன் கொடை உள்பட ரூ. 70,000 வசூலாயிற்று.



என்ன சேதி?

- ☐ மீண்டும் குமுறல்!
- ☐ திரைப்படம் தூய்மைபெற...
- ☐ சைவ உணவு மகாநாடு

மேற்காசியாவில் மீண்டும் குண்டுகள் வெடிக்கத் தொடங்கி விட்டன! ஐக்கிய அரபுக் குடியரசின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் இஸ்ரேல் குண்டுகள் வீசியதாக அரபு நாடுகளும் அவற்றின் கூற்றுக்களை வேதவாக்காக எடுத்துக் கொள்ளும் பாரதம் உள்ளிட்ட வேறு சில நாடுகளும் குற்றம் சாட்டுகின்றன. இஸ்ரேலின் மாபெரும் யுத்தக் கப்பலை ஐ. அ. குடியரசு மூழ்கடித்திருப்பதே போர் நிறுத்த முறிவுக்குக் காரணம் என்று மற்ற நாடுகள் கருதுகின்றன. ஐ. நா. இவ்விரு கட்சிகளில் எதையும் ஆதரியாமல், பொதுவில் போர் நிறுத்தம் மீறப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்துள்ளது. யுத்தத்துக்குத் தூண்டியது யாராயிருப்பினும், சூயஸ் பகுதியில் சமாதான நிலை மீண்டும் குலைந்துவிட்டது. மனமாற்றத்தின் மீதன்றி, ஐ. நா. ஸ்தாபனத்துடைய ஆணைக்காகவும், தங்களது வெற்றி-தோல்வி வாய்ப்பை முன்விட்டுமே உண்டாக்கப்பட்ட சமாதானம் எவ்வளவு நாள் நீடிக்கும்? இஸ்ரேல் என்று ஒரு நாடே இருக்கக் கூடாது என்று அரபு நாடுகள் இதய அடிவாரத்தில் தீவிரமாகக் கருதும் வரையில் உண்மைச் சமாதானம் நிலவ வழியிருப்பதாகத் தெரியவில்லை. 'இன்றைய இஸ்ரேலை உலக நாடுகளால் காக்க முடியாவிடில், அம் மக்களுக்காகப் புதிய இஸ்ரேலொன்றை ஏற்படுத்தித்தர வேண்டும்' என்று ராஜாஜி கூறியது எவ்வளவு உண்மை என்பது நாளுக்கு நாள் நன்கு புலனாகி வருகிறது.

சினிமா பார்ப்பது நல்லதோ, கெட்டதோ ஆனால் சினிமா எடுப்பது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் ஒரு தொழிலாகும். அத்தொழிலில் லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்துவிட்டு, போட்ட முதல் திரும்பி வருமா வராதா என்று ஏங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு வருகிறது. சினிமா எடுப்பதில் முதலீடு செய்துவிட்டுப் பெரும் நஷ்டம் அடைந்து, எழும்ப முடியாமலே போனவர் பலர். இதையெல்லாம் பார்த்துத்தான், ஆந்திர சர்க்கார் தமாஷா வரியிலிருந்து ஒரு பகுதியை நொடித்துப் போகும் திரைப்பட ஸ்தாபனங்களுக்கு உதவ ஒதுக்கியிருக்கிறது. இது ஒரு நல்ல யோசனை. மற்ற ராஜ்ய சர்க்கார்களும் கடைப்பிடிக்கலாம். எந்த ஒரு நல்ல திட்டத்திலும் சுயநலமிகளும் ஏமாற்று வித்தைகளில் கை தேர்ந்தவர்களும் சேர்ந்தால், அது பாழாகப் போகும் என்பது தெரிந்ததே! ஆகவே, ஆட்சியாளர்கள் எச்சரிக்கையோடு இருந்து இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற முன்வருவது நல்லது. பட அதிபர்கள் எப்படிப்பட்ட ஆபாசக் காட்சிகளைப் புகுத்தினால் போட்ட முதல் திரும்பி வரும் என்ற சிந்தனையைக் கைவிட்டு, நல்ல மனோபாவங்களையும் நல்ல பண்பாட்டையும் பிரதிபலிக்கும் படங்களை எடுத்தால் சர்க்கார் உதவி கிடைக்கும் என்ற உறுதியைப் பெற்றால், திரைப்படமும் ஓர் உண்மைக் கலையாகவே இருக்க வழி உண்டு.

சுத்த சைவ உணவே மானுடர்களின் உடல் வலிமைக்கும், ஆத்ம லாபத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் நல்லது என்ற பண்டைக்கால உண்மையை உலக மக்களிடையே பரப்ப ஓர் உலக இயக்கம் சுமார் அறுபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்கம், புலால் உணவு சாப்பிட்டே வளர்ந்து பழக்கப்பட்டுள்ள மேல்நாட்டு மக்களிடையே முதலில் தோன்றிற்று என்றால் ஆச்சரியம் உண்டாகும். லண்டன் மாநகரில் இதன் தலைமை ஸ்தாபனம் உள்ளது. முப்பதுக்கு மேற்பட்ட நாடுகள் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருக்கின்றன. ஐ. நா. ஸ்தாபனத்துடன் இது இணைக்கப்பட்டிருக்கிறது. உலகத் தலை நகரங்களில் இரண்டாண்டுக்கு ஒரு முறை இந்த இயக்கம் மகாநாடுகள் நடத்தித் தனது கொள்கைகளைப் பரப்பி வருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்னர் இதன் மகாநாடு இந்தியாவில் நடந்தது. இப்போது மீண்டும் இரண்டாவது முறையாக உலக மகாநாட்டை இந்தியாவில் பல இடங்களில் நவம்பர் 18-ந் தேதியிலிருந்து நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. சென்னையில் நவம்பர் 28 லிருந்து டிசம்பர் 1 வரை மாநாடு நடக்கிறது. இம் மகாநாட்டின் அம்சங்களாக ஒரு சமையல் கலைக் கண்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும், கல்லூரி மாணவர்களிடையே கூட்டங்களும், பல அறிஞர்களால் சொற்பொழிவுகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இருபத்து நான்கு வெளி நாடுகளிலிருந்து சுமார் 150 டெலிகேட்டுகள் இம்மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இந்திய சைவ உணவு ஸ்தாபனம் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது. பத்தாண்டுகளுக்குமுன் உலக இயக்கத்தின் இந்தியக் கிளையாக இது தொடங்கப்பட்டது. பரதக் கலையுடனும் பாரத கலாசாரத்துடனும் இணைந்துவிட்ட ஸ்ரீமதி ருக்மிணிதேவி இந்த ஸ்தாபனத்தின் தலைவியாகச் செயலாற்றுவது பெருமிதத்துக்குரிய விஷயம். உயர்பண்பும், உள்ளத் தூய்மையும், ஜீவகாருண்ய உணர்ச்சியும் கொண்ட ஸ்ரீமதி ருக்மிணிதேவி விலங்குகள் நல போர்டுக்குத் தலைவியாகப் பணியாற்றி வருவதோடு சைவ உணவு ஸ்தாபனத்துக்கும் தலைமை தாங்குகிறார்.


இந்தியப் பண்பாட்டிலும் அஹிம்ஸா தருமத்திலும் பற்றுள்ள நன்மக்கள் இந்த இயக்கத்துக்கு ஆதரவு தருவது அவசியம். வரவேற்புக் கமிட்டியில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து தமது ஆதரவை அளிக்க வேண்டும். கட்டணம் ரூபாய் பதினைந்துதான்.

போற்றத்தக்க உதாரணம்

கோவையிலிருந்து ஓர் இனிய செய்தி வந்துள்ளது. தொழிலாளிகளும் முதலாளிகளும் தகராறுகளைச் சமரசமாகத் தீர்த்துக் கொண்டு அமைதி குலையாது தொழில் நடக்க வகை செய்து கொண்டுள்ளனர். தென்னிந்திய ஆலை முதலாளிகள் சங்கமும் கோவை மாவட்டத்தில் உள்ள (கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் தொழிலாளர் சங்கத்தைத் தவிர மற்ற) எல்லாத் தொழிற் சங்கங்களும் கூடிப் பேசி 1963, 1964, 1966 ஆகிய ஆண்டுகளுக்குப் போனஸ் பட்டுவாடா விஷயமாகச் சமரச உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ளனர். இந்த உடன்படிக்கை 86 பஞ்சாலைகளையும், அவற்றில் வேலை செய்யும் 63,000 தொழிலாளிகளையும் குறித்தது. பஞ்சாலைகளில் தொழில்மந்தம் காரணமாகப் பல ஆலைகள் போனஸ் சட்டப்படி விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு போனஸ் மட்டுமே கொடுக்கக் கூடிய நிலையிலிருந்தன. 1963, 1964 ஆண்டுகளுக்கு முன்பணமாக இத்தொகை கொடுக்கப்பட்டது. இப்போது செய்து கொண்ட உடன்பாட்டின்படி ஏற்கனவே கொடுக்கப்பட்ட தொகையை ஈடு செய்து கொண்டு, 1966ம் ஆண்டுக்குத் தொழிலாளர்களின் ஆண்டு ஊதியத்தில் குறைந்த பட்சமாக 4 சத விகிதம் போனஸாகவோ, முன் பணமாகவோ, அல்லது இரண்டும் கலந்தோ பட்டுவாடா செய்யப்படுவதென்று ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. முன்பணமாகத் தொகைகள் 1968ம் ஆண்டு ஏப்ரலிலிருந்து டிசம்பர் வரையுள்ள மாதச் சம்பளங்களில் தவணை முறையில் பிடித்துக் கொள்ளப்படும். பட்டுவாடா செய்யப்படும் தொகை அக்டோபர் 21ந் தேதிக்குள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டனர். 1963 – 64 ஆண்டுக்குச் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையைக் கோர்ட்டுக்கு வெளியே செய்துகொண்ட ஒப்பந்தமாக மதித்துத் தொழில் கோர்ட்டுக்கு அறிவிப்பும் செய்யப்பட்டது.

நீண்ட நாளாகப் பைசலாகாதிருந்த இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்ந்து விட்டதால் நல்லெண்ணத்தின் அறிகுறியாகத் தொழிற் சங்கங்கள் மற்றொரு ஆலோசனையைத் தெரிவித்தன. எல்லாத் தொழிலாளர்களிடமிருந்தும் ஒரு நாள் ஊதியத்தை ஆலை முதலாளிகள் சங்கமே வசூலித்து, அதைப் பொதுப் பணமாக வைத்து அதிலிருந்து சென்ற ஆண்டில் மூடிக் கிடந்த ஆலைகளின் வேலையில்லாத தொழிலாளர்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டன. (அக்டோபர் மாதத்தில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் இரண்டு நாள் லீவு கிடைத்தது- காந்தி ஜயந்திக்காக ஒரு நாள்— ஆயுத பூஜைக்காக ஒரு நாள்) வேலையிழந்தவர்களுடைய நலனுக்காகத் தொழிலாளர் சங்கங்கள் காட்டும் பரிவு போற்றத் தக்கது. இதன் மூலம் சராசரி ரூ. 7 வசூலிப்பதிலிருந்து 5000 வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 50 கிடைக்கும். இது நல்ல யோசனை. இதனை நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டனர். ஆட்சேபம் சொல்லாத தொழிலாளிகள் சம்பளத்தில் மட்டுமே இந்த ஒரு நாளைய ஊதிய வசூல் செய்யப்படும்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட்டுகள் சங்க அங்கத்தினர்களை இந்த வசூலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்படி சிபாரிசு செய்தும், பெரும்பான்மைத் தொழிலாளர்கள் வசூலுக்கு இணங்கியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவ் விவரங்களையெல்லாம் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ஜி.கே. சுந்தரம் அவர்கள் பெருமிதத்துடன் தெரிவிக்கிறார். நாமும் மகிழ்ச்சியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறோம்.









பாளையங்கோட்டை நகராட்சி மண்டபத்தில் டாக்டர் சந்தோஷத்தின் தலைமையில் டாக்டர் ஹண்டே, ராஜாஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

அடையாறு பாஸ்கர நிலையத்தில் நடைபெற்ற 'தமிழ் வட்டம்' ஆண்டு விழாவில் கொத்தமங்கலம் திரு சுப்பு கவிதை வழங்குகிறார். அ. சீ. ரா., எஸ். மகராஜன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

செய்திப் படங்கள்

மான்ட்ரீல் நகரில் நடைபெறும் எக்ஸ்போ' 67 என்ற உலகக் கண் காட்சி சாலையிலுள்ள இந்தியப் பகுதியில் ஸ்ரீமதி ஜாக்லின் கென்னடிக்கு விருந்துபசாரம் அளிக்கப் பட்டது.

நாமக்கல் கவிஞரின் எண்பதாம் பிறந்த நாள் விழா கோவையில் சென்ற 19ந் தேதி சிறப்புற நடை பெற்றது. அன்று மாலை பேரூர் பட்டீசுவரர் கோவிலில் கவிஞர் தம்பதிக்குக் கோயில் மரியாதைகள் செய்யப்பட்டன.





'ஆங்கர்' மார்க் நூல் தயாரிப்பாளரான ஜே அன்ட் பி கோட்ஸ் கம்பெனியாரின் கண்காட்சியில் பரிசு பெற்ற பூத் தையல் வேலைப்பாட்டுச் சித்திரம். போட்டிக்கு மொத்தம் 10867 பூத் தையல் காட்சிப் பொருட்கள் வந்திருந்தன!

திருமணம்



செல்வன்	செல்வி
அனந்தநாராயணன்	**வசந்தா**

பம்பாய், ஆக்பா - கேவர்ட் நிறுவனத்தைச் சார்ந்த திரு **அனந்தநாராயணன்** அவர்களுக்கும், பன்னிபுரம், திரு P.S. சுப்ரமணிய அய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. **வசந்தா**வுக்கும் பம்பாயில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

திருமணம்



செல்வன்		செல்வி
R. பிரகாஷ்	—	**வசந்தா**

சென்னை, இந்தியன் எக்ஸ்பிரஸ் குரூப் பத்திரிகைகளின் மானேஜர் திரு S. V. ஸ்வாமி அவர்கள் குமாரத்தி சௌ. **வசந்தா**வுக்கும், புது தில்லி, திரு N. R. அய்யர் அவர்கள் குமாரர் திரு **R. பிரகாஷ்** அவர்களுக்கும் திருமணம் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

யாரோ இவர் யாரோ?

'சோ'



அத்தியாயம் 14

ரவியின் ஆலோசனைப்படி அடுத்த நாள் முத்து ஒரு மிருக வைத்தியரைச் சென்று சந்தித்தான். அன்றைய தினம் மாலை ஆறு மணிக்கு அவரை ராஜ ரத்தினம் வீட்டுக்கு வந்து அசோக்கைக் குணப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். நான் ராஜரத்தினத்துக்கு ஒரு நெருங்கிய நண்பன் என்று அவன் கூறிக் கொண்டதை மிருக வைத்தியர் நம்பினார்.

சுமார் ஐந்தரை மணியிலிருந்து ராஜ ரத்தினத்தைப் 'பீச்சுக்குப் போகலியா?' என்று கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தான் முத்து. அவரோ, ''அசோக் முன்னேயைவிட இப்ப சோர்ந்து போயிருக்கிறான். முன்னமே உங்களையாவது துரத்திக்கிட்டிருப்பான். இப்ப ரெண்டு நாட்களா அதுகூட இல்லே. படுக்கையிலேயே கிடக்கிறான். இந்த நிலைமையிலே எனக்கு மட்டும் என்ன பீச் வேண்டிக் கிடக்குது?'' என்று கூறி விட்டார். முத்துவுக்கு மிருகவைத்தியரை எப்படி வரவழைத்து அசோக்கைக் காட்டுவது என்று திண்டாட்டமாகி விட்டது. ராஜரத்தினத்தைக் கெஞ்சினான். ''ஸார்! இன்னிக்கு ஒரு நாள் பீச்சுக்குப் போயிட்டு வாங்க ஸார்!''

''ஏன் டாக்டர் இப்படி என்னைப் பீச்சுக்குத் துரத்தறதிலேயே கண்ணா இருக்கீங்க?''

''நான் நல்லதைத்தான் சொல்கிறேன்'' என்றான் முத்து.

''அசோக் குணமாகாமல் நான் பீச்சுக்குப் போக மாட்டேன்.''

''நீங்க பீச்சுக்குப் போனாத்தான் அசோக்குக்குக் குணமாகும்.''

இவனிடம் பேசுவதைவிட ஒரு சுவரில் போய் முட்டிக் கொள்ளலாம் என்று தீர்மானித்த ராஜரத்தினம் பதிலே பேசாமல் எழுந்து உள்ளே போய் விட்டார். மணி ஆறு அடிக்க ஐந்து நிமிடங்களே இருந்தன.

''மிருக வைத்தியர் வந்து விடுவார். அவர் வைத்தியர் என்று தெரிந்து விட்டால் தன் குட்டு அம்பலமாகி விடும். அவரை வீட்டினுள் வராமல் வாசலோடு திருப்பி அனுப்பிவிட்டால் அசோக்கைக் குணப்படுத்த முடியாது. இப்போது என்ன செய்வது?'' என்று முத்துவின் மூளை குழம்பிக் கொண்டிருந்தது.

ஒரு தீர்மானத்துக்கு வந்தான் முத்து. 'ராஜரத்தினம் எதிரிலேயே இருந்தாலும் சரி. மிருக வைத்தியரைக் கூப்பிட்டு அசோக்கைக் காண்பிப்பது. அவர் மிருக வைத்தியர் என்பது ராஜ ரத்தினத்துக்குத் தெரியாமல் எப்படியாவது பார்த்துக் கொள்ள வேண்டியது!' என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.

மணி ஆறடித்தது. ஆறுமுகனை மனதார வேண்டிக் கொண்டு வாசற் பக்கம் சென்றான் முத்து. மிருக வைத்தியர் வந்தார். வீட்டை மேலும் கீழும் ஒரு முறை பார்த்து முத்துவிடம், ''இது தானே நகை வியாபாரி, ராஜரத்தினம் வீடு?'' என்று கேட்டார்.

''ஆமாம், டாக்டர்!'' என்றான் முத்து.

''நான் டாக்டர்னு உனக்கு எப்படித் தெரியும்?''

அவர் ஏதோ தமாஷ் செய்வதாக எண்ணிச் சிரித்தான் முத்து.

''எதுக்குச் சிரிச்சே?'' என்றார் அவர்.

''சும்மாத்தான்!''

''சும்மா சிரிக்கக் கூடாது. அதுக்கு அர்த்தமே வேறே. ஜாக்கிரதை!''

''ஸார்! நான் உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கிறேன்.''

''நீ யாரு ?''

''என்ன ஸார் இது? நான்தானே காலையிலே உங்களைப் பார்த்து இங்கே வரச் சொன்னேன்.''

டாக்டர் யோசித்தார். ''ஓ!... ஆமாம்! ஆமாம்! . உன் பேர் முத்து இல்லே? மறந்தே போச்சு. எனக்கு முகங்களை ஞாபகம் வெச்சுக்கிறது ரொம்பக் கஷ்டம். திடீர் திடீர்னு மறந்து விடுவேன்.''

''அடிக்கடி மறக்காதிங்க ஸார். அதுக்கு அர்த்தமே வேறே!'' என்று கூறி முத்து பழிக்குப் பழி தீர்த்துக் கொண்டான்.

அவனை முறைத்துப் பார்த்தார், திருவாளர் மிருக வைத்தியர். அவரைப் பார்த்தவுடனேயே மிருக வைத்தியர்தான் என்று அடித்துச் சொல்லி விடலாம். அந்த மாதிரி இருந்தன அவருடைய அங்க அமைப்புக்கள். முள்ளம்பன்றி மயிர், காக்கைக் கண்கள், கருடன் மூக்கு, ஒட்டைச் சிவிங்கி கழுத்து, குயிலின் குரல், இப்படி மிருக ரீதியாகவே அமைந்திருந்தது அவரது சரீரம். ''இவரிடம் இப்போதே முன்னேற்பாடு செய்து கொண்டால்தான் ராஜரத்தினத்திடம் இவர் டாக்டர் என்ற விஷயமே தெரியாமல் சமாளிக்க முடியும்'' என்று சிந்தித்தான் முத்து. அவரைப் பார்த்தான். ''ஸார்! ஒரு விஷயம்'' என்று சற்றுத் தயக்கத்தோடு கூறினான்.

''என்ன?''

''இந்த ராஜரத்தினம் இருக்காரே, அவர் ஒரு மாதிரி மனுஷன். அவர் நாய் அசோக் ஏதோ நோயினாலே அவதிப்படுது. ஆனால் இவரோ ஒரே பிடிவாதமாயிருக்கிறார்.''

''என்ன பிடிவாதம்?''

''அசோக்கை எந்த மிருக வைத்தியரும் பார்க்கக் கூடாதாம். ஏன்னா, முன்னே அவர்கிட்டே ஒரு நாய் இருந்துதாம். அதுக்கு உடம்பு ஆகலேன்னு ஒரு வைத்தியர்கிட்டே காட்டினாராம். அவர் ஏதோ மருந்து கொடுத்திருக்காரு. இரண்டே நாட்களிலே நாய் கோவிந்தா! அதனாலே வைத்தியர்கிட்டே காமிச்சா இந்த நாயும் போயிடும் அப்படின்னு கத்தறாரு!''

''நான்ஸென்ஸ்! பேத்தல்!'' என்று கோபத்தில் பாடிய குயில் போல் கத்தினார் வைத்தியர்.



உள்ளே ராஜரத்தினம் இந்தச் சத்தத்தை கேட்டுக் கிரிஜாவிடம், ''அம்மா! யாரோ கதவைத் திறக்கிற சப்தம் கேட்குது. யாருன்னு பார்க்கச் சொல்லு. அந்தக் 'கேட்'டுக்குக் கொஞ்சம் எண்ணெய் போடச் சொல்லணும். எப்ப திறந்தாலும் கீச் கீச்னு கத்துது!'' என்றார்.

வெளியே முத்து டாக்டரிடம் மேலே பேசிக் கொண்டிருந்தான். ''அவர் சொல்றது சுத்த பேத்தல் தான் ஸார். இருந்தாலும் அவர் அதைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறாரு... மிருக வைத்தியனைக் கண்டாலே உதைக்கிறேங்கிறாரு !''

''என்ன? என்ன? ஆ....! ஓ!'' என்று வைத்தியரின் குரல்கள் சப்த ஜாலங்கள் செய்தன.

வீட்டினுள் ராஜரத்தினம் பொறுமையை இழந்தார். ''கிரிஜா! யாரோ கிறுக்குப் பசங்க சும்மா கேட்டைத் திறந்து மூடி விளையாடறாங்க! இப்பவே போய்ப் பிச்சுக் கட்டறேன்'' என்று கூறிப் புறப்பட்டார்.

முத்து தொடர்ந்தான். ''ஸார்! அவரை இப்படியே விடக் கூடாது. அவருடைய இந்த அபிப்பிராயத்தை மாத்தணும். அதுக்குத்தான் உங்க உதவியை நாடியிருக்கிறேன்.''

''எனக்கு இதுதான் வேலையா?''


''அப்படியில்லே ஸார்! நீங்க மிருக வைத்தியர்னு அவருக்குத் தெரியாமல் அசோக்கைப் பரிசோதிச்சுக் குணப்படுத்த என்ன மருந்து கொடுக்கணும்னு எழுதிக் கொடுத்திடுங்க. நான் அந்த மருந்தை வாங்கிக் குடுத்துடறேன். அசோக் குணமாயிடும். உங்களுக்கு எவ்வளவு பீஸ் வேணும்னுலும் வாங்கித் தரேன். அவருக்கும் மிருக வைத்தியர்கள் மேலே நல்ல அபிப்பிராயம் வந்துடும். என்ன சொல்கிறீங்க?''

டாக்டர் யோசித்தார். பேசவில்லை.

வாசலை நோக்கி வந்து கொண்டிருந்த ராஜரத்தினம் ஒரு கணம் நின்றார். ''சில நிமிடங்களாகக் கேட் திறந்து மூடும் சத்தம் கேட்கவில்லையே. ஒருவேளை அந்தக் கிறுக்குப் பிடித்த பயல்கள் ஓடி விட்டார்களா?'' என்று யோசித்தபடி நின்றார்.

டாக்டர் ஒரு முடிவுக்கு வந்தார். ஒட்டைச் சிவிங்கிக் கழுத்தைச் சற்றே நீட்டிக் காக்கைக் கண்களைச் சிறிது உருட்டி, கருடன் மூக்கை ஒரு தடவு தடவி விட்டுக் கொண்டார்.

''முத்து ! விஷயம் தெரிஞ்ச மிருக வைத்தியர்களும் இருக்காங்கன்றதை அந்த ராஜரத்தினத்துக்குக் காட்ட



றேன். பீஸ் கரெக்டா குடுத்துடுவா ரில்லே?'' என்றார்.

''கண்டிப்பா! நீங்க ஒத்துக்கிட்ட துக்கு ரொம்ப தாங்க்ஸ் ஸார்!'' என்று அவர் கையைப் பிடித்துக் குலுக்கினன். டாக்டர் சிரித்தார். ''ஹீஹீ! ஹீஹீ...!'' ஆண் குயிலும் பெண் குயிலும் மகிழ்வு பொங்கப் பாடிப் பறந்து சப்தமிட்டமாதிரி இருந்தது.

சற்றே நின்ற ராஜரத்தினம், ''ஓகோ! எனக்குப் பாய்ச்சல் காட்டறானுகளா அந்தப் பசங்கள்! தொலேச்சுப்பிடறேன் தொலேச்சு! இப்பவே அந்த 'கேட்' இல்லே எண்ணெயை ஊத்தறேன். அப்புறம் எப்படி இந்த மாதிரி சத்தம் பண்றாங்க, பார்க்கலாம்!'' என்று தீர்மானித்து மாடிப் படியின் கீழிருந்த அலமாரியிலிருந்த எண்ணெய் சீசாவை எடுத்துக் கொண்டு வாயிற்புறம் விரைந்தார்.

முத்துவும், மிருக வைத்தியரும், 'கேட்' அருகில் நின்று கொண்டிருப்ப தைக் கண்டவுடன் ராஜரத்தினத்துக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''இந்த டாக்டர் பயல் அசோக்கைக் குணப்படுத்தாமல் தன் பிராணனே வாங்குவது போதாதென்று, யாரோ ஒருவனே அழைத்து வந்து கேட்டைத் திறந்து மூடித் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறனே! இவன் உருப் படுவானு?'' என்று மனம் நொந்தார்.

முத்து அவரிடம் வந்து மிருக வைத் தியரைக் காட்டி, ''இவர் என் சிநேகி தர்'' என்றான்.

மிருக வைத்தியர் சிரித்தார். ராஜ ரத்தினம் ஒன்றும் புரியாமல் விழித்தார். 'இது என்ன மாயா ஜாலம். திறந்த கேட் திறந்தபடியே இருக்கிறது. ஆனல் 'கீச் கீச்' சத்தம் மட்டும் வருகிறதே!' என்று வியந்தார்.

''பிறவியிலேயே என் குரல் அப்படித் தான்!'' என்று பாடினர் டாக்டர்.

''பரவாயில்லே. இநத எண்ணெ யைத் தொண்டையிலே ஊத்துங்க. சரியாய்ப் போயிடும்!'' என்று தம்மை அறியாமல் கூறிக் கையிலிருந்த எண் ணெய் சீசாவை நீட்டினர் ராஜ ரத்தினம். இந்த ஹாஸ்யத்தை ரசித் துச் சிரித்தார் வைத்தியர்.

அந்தச் சிரிப்பில் கோபம் எக்காள மிடுவதாகப் படவே, ராஜரத்தினம் பயந்து, ''வேண்டாம்ணு விட்டுடுங்க. அதுக்கு ஏன் இப்படிக் கோவிக்கிறீங்க?'' என்று கேட்டவாறு, அவர்களை உள்ளே அழைத்துச் சென்றர். உள்ளே போகும் போது ராஜரத்தினம் கேட்டை இழுத்து மூட, அது 'கீச் கீச்' என்று சத்தமிட்டது. டாக்டர் திரும்பி ராஜரத்தினத்தை ஒரு முறை பார்த்தார். தம் சிரிப்பையும் குரலே யும் இந்த மனிதன் கிண்டல் செய் யவே அம்மாதிரி சத்தம் போட்டுச் சாத் தியிருக்கிறன் என்று நினைத்தார்.

கிரிஜா இவர்களை எதிர் கொண்டு அழைத்தாள். ராஜரத்தினம் அவளைப் பார்த்து, ''எங்க மூணு பேருக்கும் காப்பி கொண்டாம்மா'' என்று கூற அவள் மீண்டும் உள்ளே சென்றள். ராஜரத்தினம் முத்துவிடம் அந்த மூன்றாவது மனிதர், மிருக வைத்தியர் யார், என்ன பெயர், வந்த காரணம் என்ன என்பது பற்றி ஒன்றுமே விசாரிக்கவில்லே. 'எவனே ஓர் உதவாக் கரை. இந்த டாக்டர் மேகநாதனுக்குச் சிநேகிதனுக வந்திருப்பவன், வேறு எப் படி இருக்க முடியும்? அசல் உதவாக் கரையாகத்தான் இருப்பான். வந்தது வந்து விட்டான். காப்பியைக் குடித்து விட்டுத் தொலேயட்டும்' என்று எண்ணித்தான் காப்பியைக் கொண்டு வரச் சொன்னர்.

கிரிஜா காப்பியோடு வந்தாள். மூவரும் காப்பி குடித்தாயிற்று. ஒருவ ரும் ஒன்றும் பேசவில்லே. அசோக்கிடம் இவரை எப்படி அழைத்துச் செல்ல லாம் என்று சிந்தித்துக் கொண்டிருந் தான் முத்து. மிருக வைத்தியரோ தன் குரலேக் கிண்டல் செய்த ராஜரத் தினத்தைப் பதிலுக்கு என்ன செய்ய லாம் என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். இந்தப் புது நபர் எப்போது எழுந்து வெளியே போவார் என்று ராஜரத்தினம் காத்துக் கொண் டிருந்தார். கிரிஜாவோ வைத்த கண் வாங்காமல் மிருக வைத்தியரையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு மிருகக் காட்சிசாலேயே எதிரில் வந்து நின்றற்போல் இருந்த அவரது தோற் றம் அவளேப் பிரமிக்க வைத்தது.

முத்து கிரிஜாவிடம், ''அசோக் எங்கே? நான் போய்ப் பார்க்கணும்'' என்றான்.

கிரிஜா, ''வாங்க மேலே அறையிலே தான் இருக்கான்'' என்று கூறி முன் செல்ல, முத்துவும் மிருக வைத்தியரும் அவளேப் பின்தொடர்ந்தனர். 'ராஜ ரத்தினத்தைச் சுலபமாக ஏமாற்றிவிட் டோம். அவருக்குத் தெரியாமல் வைத் தியரை விட்டு அசோக்கைக் கவனிக்கச் சொல்லி, மருந்துச் சீட்டு எழுதிப்பெற்று விடலாம்' என்று எண்ணி முத்து மகிழும் போது ராஜரத்தினம், ''இருங்க, நானும் வரேன்'' என்று கூறி அவர்களோடு தாமும் மாடிக்குக் கிளம்பினர்.


விசேஷ அளிப்பு !
ஸ்டாக் உள்ளவரை
60 பைசா
மதிப்புள்ள அழகான
பிளாஸ்டிக் டம்ளர் இந்த
டப்பாவினுள் உங்களுக்காக
10 பைசாவிற்கு
மட்டுமே!
Cadbury's
Bournvita
Bournvita
FOR STRENGTH AND VIGOUR
OFFER !
Attractive
Plastic Tumbler
Inside!
இந்த லேபிலைக் கவனியுங்கள்
சக்திக்கும் வலிமைக்கும் — கேட்பரிஸ் போர்ன் விடா !

அசோக் ஒரு மூலையில் படுத்திருந்தது. முத்து மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அதன் அருகே சென்றான். மிருக வைத்தியர் நேரே அசோக்கிடம் சென்று, கண்களைப் பிதுக்குவதும், நாக்கைப் பார்ப்பதும், காதைப் புரட்டிப் பார்ப்பதுமாகத் தமது வேலையை ஆரம்பித்து விட்டார்.

ராஜரத்தினம் பயந்து போய், "மிஸ்டர்! அசோக்கை என்ன செய்யறீங்க?" என்று கத்தினார். மிருக வைத்தியர் வாய் தவறி, "டெஸ்ட் பண்ணறேன்" என்று பதிலும் கூறிவிட்டார்.

முத்துவுக்கு ஷாக் அடித்தது. ராஜரத்தினம், "டெஸ்ட் பண்றீங்களா? என்ன டெஸ்ட்? நீங்க என்ன டாக்டரா?" என்றார்.

முத்து குறுக்கிட்டான். "அவர் என்ன டாக்டரா? சும்மா 'டெஸ்ட்' பண்ணறார். அவருக்கு இந்த நாயை விலைக்கு வாங்கிக்கணும்னு ஒரு ஆசை. அதுதான் விலை பேசறதுக்கு முன்னாலே எவ்வளவு ரூபாய் பெறும்னு 'டெஸ்ட்' பண்ணுகிறார்" என்று சமாளித்தான்.

"என்னது? விலைக்கு வாங்கப் போறாரா? நான் என்ன நாய் வியாபாரமா செய்யறேன்?"

முத்து உடனே, "ஸார்! நான் அவருக்கு எவ்வளவோ சொன்னேன். நீங்க அசோக்கை எவ்வளவு பணம் தந்தாலும் தரமாட்டீங்கன்னு சொன்னேன். அவர் கேக்கலே" என்றான்.

மிருக வைத்தியருக்கு இப்போது தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது.

"மிஸ்டர்! என்ன இது? நான் யார் தெரியுமா? தெரியுமான்னேன்! உம்...?" உச்ச ஸ்தாயியில் அவர் கத்தினார். அசோக் உடலை ஒரு முறை சிலிர்த்து விட்டுக் கொண்டது. என்னதான் உடல் சோர்வுற்றிருந்தாலும், பல பட்சிகள் கூவும் சத்தம் கேட்ட பிறகும் சும்மா இருக்குமா? எழுந்து நின்று ஒரு முறை மிருக வைத்தியரைப் பார்த்தது. அசோக்கின் இந்த முஸ்தீபுகளைப் பார்த்தவுடன் முத்து நடுங்கி ஓட ஆரம்பித்தான். மிருக வைத்தியர் ஒன்றும் புரியாமல் அவனைப் பின் தொடர அசோக் அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு கீழே ஹாலைத் தாண்டி வாசலுக்கு வந்துவிட்டது.

மேலே ராஜரத்தினம், "நல்லா வேணும் அந்த ரெண்டு பேருக்கும்" என்று சபித்துவிட்டு அங்கிருந்த சோபாவில் சாய்ந்தார். கிரிஜா, முத்துவின் மீதிருந்த அக்கறையினால், "டாக்டர் என்ன ஆனாரோ?" என்று கூறிக் கொண்டே மாடிப் படியில் இறங்கினாள்.



எப்படிப் போதிப்பார்?

வேலையில்லாத் திண்டாட்ட காலத்தில் ஓர் ஏழை உபாத்தியாயர் ஒரு வேலைக்கு மனுச் செய்திருந்தார். பள்ளிக்கூட நிர்வாகக் குழுவினர் அவரிடம், 'நாங்கள் உங்களையே வைத்துக் கொள்கிறோம். ஆனால் எங்களுக்குள் உள்ள சந்தேகத்தைத் தீர்த்து விடுங்கள். எங்களில் சிலர் பூமி உருண்டையானது என்றும், மற்றும் சிலர் தட்டையானது என்றும் கூறுகிறார்கள். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? எப்படி மாணவர்களுக்குப் போதிப்பீர்கள்?' என்று கேட்டார்கள். உடனே அந்த உபாத்தியாயர் சிறிதும் தயங்காமல் 'நான் இரண்டு விதமாகவும் போதிக்கும் திறமை உள்ளவன்' என்று கூறினார்.

ஆதாரம்: ஜனாதிபதி ஜான்ஸனின் ஹாஸ்யம்
தகவல்: நா. சுப்பிரமணியன்

இதற்குள் முத்து வைத்தியரைச் சமாதானப்படுத்திப் பீஸ் விஷயத்தையும் நினைவுபடுத்தினான். ராஜரத்தினம் கண்களில் படாமல், அசோக் அவரிடம் இப்போது தனியாகக் கிடைத்ததால் அவர் அதை லாகவமாகப் பிடித்து நிறுத்தி அதைப் பரிசோதனை செய்தார்.

அசோக்கை மிருக வைத்தியர் பரிசீலனை செய்ததையும், அதற்கான மருந்துகளையும், அவைகளைத் தரவேண்டிய முறைகளையும், அவர் முத்துவிடம் எழுதிக் கொடுத்ததையும் பற்றியெல்லாம் ஒன்றுமே அறியாமல் ராஜரத்தினம் நிம்மதியாகச் சோபாவில் சாய்ந்தார். அசோக் அவர் காலை வருடியது. பின்னாலேயே முத்து வந்தான்.

"டாக்டர், அந்த ஆள் எங்கே?" என்றார் ராஜரத்தினம்.

"அவர் போய் விட்டார்."

"அசோக்கை விலைக்குப் பேசற அளவுக்கு எப்படி டாக்டர் உங்களுக்கு மனசு வந்தது?" ராஜரத்தினத்தின் குரல் தழுதழுத்தது.

"ஸார்! இப்போ அதெல்லாம் எதுக்கு? அந்த ஆள் பிராணனை வாங்கினான். கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டேன். இப்போ போய் ஒரு புது மருந்து வாங்கிட்டு வந்து அசோக்

குக் கொடுக்கப் போகிறேன். இரண்டே நாள்ளே குணமாயிடுதா இல்லையான்னு பாருங்க.''

''நிஜமாவா?''

''நீங்க பாருங்களேன்'' என்று கூறி வெளியேறினன் முத்து. வழியில் கிரிஜா நின்று கொண்டிருந்தாள். பெருமிதத்தோடு முத்துவைப் பார்த்தாள். ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துவிடுவதாக அவன் சவால் விட்டுச் செல்வதுபோல், அவ்வளவு ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள், கிரிஜா.

ராஜரத்தினம் மெய்மறந்து நிற்க, கிரிஜா தனது மான் விழிகளை மிரளமிரள விழித்து நிற்க, ஒரு மாவீரனைப் போல் வீரநடை போட்டுக் கொண்டு வெளியேறினன் முத்து.

காலட்சேபத்தில் நடந்த கலாட்டாவினல் தன்மீது சித்ராவுக்கு ஏற்பட்ட கோபம் சுலபமாக நீங்காது என்று நன்கு உணர்ந்திருந்த ரவி அன்று தன் வீட்டின் அருகில் இருந்த வெற்றிலை பாக்குக் கடையில் சோடா குடித்துக்கொண்டிருக்கும்போது அவன் அருகில் ஓர் உருவம் வந்து நின்றது. கடைக்காரனிடம் ''டாய் சோமாறி! ஒரு சோடா உடைச்சுக் குடுரா'' என்று அதட்டக் கடைக்காரன் மிகவும் பணிவுடன் அந்த உருவத்தின் ஆணையை நிறைவேற்றி வைத்தான். சோடாவை ஒரே விழுங்கில் குடித்து விட்டு அந்த உருவம் நகர்ந்தது. கலைந்த கிராப், முறுக்கிவிடப்பட்ட மீசை, கையிலே காப்பு, கழுத்திலே கர்ச்சிப், மேலே பனியன், இடுப்பிலே லுங்கி ஆக அந்த உருவத்தைப் பார்த்தாலே ஒரு ரௌடி என்பது தெரிந்தது. ரவி கடைக்காரனிடம் 'அவன் யாரப்பா?' என்று கேட்டான். கடைக்காரன், ''அவனைத் தெரியாது? அவன்தான் ஸார் மந்தவெளி மகாதேவன். பெரிய ரௌடி'' என்றான். அந்த மகாதேவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் ரவி. திடீரென்று அவன் மனத்தில் ஒரு யோசனை உதிக்க, ஓடிச் சென்று மகாதேவனை நெருங்கினன். ''மிஸ்டர்...''

ரௌடி மகாதேவன் திரும்பி நின்று, ''என்னையா கூப்பிட்டே?'' என்றான்.

''ஆமாம்! உங்களாலே ஒரு உதவி ஆகணும். எவ்வளவு பணம் வேணுமின்னாலும் தரேன்.''

''என்ன அது?''

''வாங்க! இந்த ஹோட்டல்லே போய் டிபன் சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம்'' என்று கூறி ரவி அந்த ரௌடியோடு பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

ஹோட்டலில் சிற்றுண்டி அருந்திக் கொண்டே ரவி, அந்த ரௌடி மகாதேவனிடம் செய்து கொண்ட ஏற்பாட்டின் சாராம்சம் இதுதான். அடுத்த நாள் இரவு சுமார் எட்டு மணிக்கு அடையாறு பக்கத்தில் எலியட்ஸ் பீச் சமீபம் உள்ள அமானுஷ்யமான தெருவில் ரவி எப்படியாவது சித்ராவை அழைத்துக் கொண்டு காரில் வரவேண்டியது. அந்தச் சமயம் ரௌடி மகாதேவன் இன்னும் இரண்டு ரௌடிகளோடு திடீரென்று தோன்றிக் காரை மறித்து, கத்தியைக் காட்டி மிரட்டிச் சித்ராவை நகைகளைக் கழற்றும்படி சொல்ல வேண்டியது. உடனே ரவி வீராவேசமாகச் சண்டை போடுவது போல் நாலு உதை உதைக்க, மகாதேவனும், அவன் சகாக்களும் மூலைக்கு ஒருவராக ஓட வேண்டியது. இந்த உதவிக்கு மகாதேவனுக்கு ரவி இருநூற்றி ஐம்பது ரூபாய் தரவேண்டும்.

சித்ராவுக்குத் தன் மீது மறுபடியும் நல்ல அபிப்பிராயம் வர இதைத் தவிர வேறு வழி எதுவும் ரவிக்குத் தோன்றாததால் இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்து மகாதேவன் கையில் அட்வான்ஸாக ரூபாய் ஐம்பதும் தந்துவிட்டான். எப்படியாவது ஏதாவது ஒரு காரணம் கூறிச் சித்ராவோடு அடுத்த நாள் இரவு எட்டு மணிக்குக் குறிப்பிட்ட இடத்தில் காரிலே வந்து சேருவதாக மகாதேவனிடம் கூறி ரவி தன் வீட்டை நோக்கிச் சென்றான்.

மகாதேவன் ஐம்பது ரூபாயைப் பைக்குள் போட்டுக் கொண்டவாறே ஒரு தீர்மானத்துக்கு வந்தான். ''இதைவிட நல்ல சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்குமா? இந்தப் பயலே எல்லா ஏற்பாட்டையும் செய்து தருகிறான். நிஜமாகவே இவனையும் பிடித்துப் போட்டுவிட்டு, அந்தப் பெண்ணிடமிருக்கும் நகைகளை அப்படியே 'அபேஸ்' செய்துவிட வேண்டும். இந்தச் சமயத்தை விட்டால் இதைப் போல் வேறு கிட்டாது. நாளை இரவு உண்மையிலேயே ரவியை அடித்துப் போட்டு அந்தப் பெண்ணின் நகைகளைக் கொள்ளை அடிப்பதுதான் விவேகம் இருப்பவன் செய்யக் கூடிய காரியம். அப்படியே செய்துவிடுவது!'' என்று முடிவு செய்தான் மகாதேவன்.

அவனுடைய இந்தத் தீர்மானத்தை அறியாத ரவி அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினன். 'மனிதன் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்' என்ற பெரியோர்கள் வாக்கு உண்மைதான்! மனிதன் ஒன்று நினைக்க மகாதேவன் ஒன்று நினைக்கிறான்! **(தொடரும்)**

மழலைகளுக்கு ஒரு பொன் விழா

பிறவி என்று எடுத்துவிட்ட எந்த ஜீவராசியும் தன் பிறவிப் பயனை நேரிய முறையில் அநுபவித்த வண்ணம், பரம்பரை அறுமல், தன் இனத்தைப் பேணி வளர்த்துச் செயல்படுகிறது. இது இயற்கை நியதி; விதி. இந்த நியதியை ஒட்டித்தான் மனித சமுதாயமும் இன்றளவும் செயல்பட்டு வந்திருக்கிறது. ஏழை பணக்காரன், எளியவன் வலியவன் என்ற பாகுபாடின்றி மக்கட் சமுதாயம் மழலைச் செல்வத்தைப் பெறத் துடிக்கிறது. அது கிட்டாவிட்டால் 'குழல் இனிது யாழ் இனிது' என்று வேறு எதில் எல்லாமோ இன்பம் காண முயல்கிறது. ஆனால் அத்தனை இன்பங்களிலும் மழலை இல்லாத் துன்பம் இழையோடவே செய்கிறது.

இந்த மழலைச் செல்வத்தைப் பெறத் தாய்மார்கள் தவம் கிடக்கின்றனர்; தவமிருந்து பெற்றுப் பிழைக்கின்றனர். தாயும் சேயும் வேறுகி நலமுற்றால் மறு பிறவி எடுத்ததாகவே மதித்து மகிழ்கிறோம்.

இந்த மகிழ்ச்சிப் பணியைச் சென்னை நகரசபை மேற்கொண்டு ஐம்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த ஆண்டு அந்தப் பணிக்குப் பொன் விழா ஆண்டு.

1917ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு மகப்பேறு மருத்துவ மனையைத் தொடங்கிய நகர சபை, சிறுகச் சிறுக இப்பணியை வளர்த்து இன்று 50 மகப்பேறு மருத்துவ மனைகளை நடத்தி வருகிறது. பொன் விழா ஆண்டில், பொன் விழா எண்ணிக்கையை எட்டிப் பிடித்துள்ள காரியமே சிறந்ததொரு பொற்பணியாகும்தானே?

ஸ்ரீமதி வீரசிங் சின்னப்பா என்பவர் மக்கள் நலத் திட்டத்துக்கான பொறுப்பை அந்த நாட்களில் ஏற்றிருந்தார். அந்த ஆண்டு 681 குழந்தைகள் அவ்விடுதியில் பிறந்தன. 1966 ஆம் ஆண்டு 27476 மழலைச் செல்வங்களைத் தந்த பெருமையைச் சென்னை நகரசபையின் மருத்துவ மனைகள் பெற்றுள்ளன. சென்னை மாநகரில் பிறவியெடுத்த 76612 குழந்தைகளில் மூன்றில் ஒரு பகுதி ஆகும் இது. குழந்தை நலத் திட்டத்தின் சூபரிண்டெண்டாக ஸ்ரீமதி வி. எஸ். கிருஷ்ணசுவாமி அவர்கள் 1960 ஆம் ஆண்டு முதற்கொண்டு பணியாற்றி வருகிறார்கள். இதற்கு முன் பல நிலையங்களிலும் டாக்டராக இருந்து பணியாற்றி அநுபவம் பெற்ற இவரது மேற்பார்வையிலே 38 அஸிஸ்டெண்ட் சர்ஜன்கள், 73 சுகாதாரப் பார்வையாளர்கள், 15 தேர்ச்சி பெற்ற நர்சுகள், 290 மகப் பேறு மருத்துவத்தில் தேர்ந்த பணிப் பெண்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள்.

ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லாருக்குமே இந்த மகப்பேறு மருத்துவ மனைகள் இடம் தருகின்றன. இலவசமாகப் பேறு பார்க்கின்றன; மருந்துகள் வழங்குகின்றன. ஏழை எளியவர்களுக்கு இலவசமாகப் பாலும் விநியோகிக்கின்றன. இவற்றைத் தவிர, பேற்றினை எதிர்நோக்கும் தாய்மார்களுக்கு தாய்மை பற்றிப் போதிக்கின்றன. குழந்தைகளை ஆரோக்கியத்தோடு வளர்க்க வழி வகை சொல்லித் தருகின்றன. பலரைச் சேர்த்து அளவளாவ வைத்து அவர்களுடைய அநுபவங்களைப் பிறருக்கும் பயன்படுமாறு செய்கின்றன. சிறு குழந்தைகள் காட்சிகளுக்கு ஏற்பாடு செய்து, தாய்மார்களை நல்ல ஆரோக்கியமுள்ள குழந்தைகளாகத் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதற்கும் தூண்டுகின்றன. இன்னும் சொல்லப் போனால் தாய்மார்களுக்குத் திட்டமிட்ட குடும்பத்துக்கான ஆலோசனைகளைக் கூறி நாட்டின் நலனிலும் அக்கறை கொள்ளுமாறு ஊக்குவிக்கின்றன. இப்படியாகக் காலத்துக் கேற்ப இம் மகப்பேறு மனைகளும் முன்னேற்றம் கண்டிருக்கின்றன.

இவ்வாறு பல வகையிலும் பணியாற்றும் குழந்தைகள் நலத் திட்டம் சிறப்பாக முன்னேறி விருப்பதற்கு அத்தாட்சி வேண்டுமா? தாய் — சேய்களின் மரண விகிதம் மிக மிகக் குறைந்திருப்பது ஒன்று போதாதா?

பெற்றோர் விரும்புவதென்ன? நீண்ட ஆயுளும் நல்லறிவும் பெற்றுத் தம் மக்கள் வாழ வேண்டும் என்பதுதானே? அந்தப் பணியைத் திறம்படச் செய்ய முயலும் இந்தக் குழந்தை நலத் திட்டத்துக்கு எத்தனை தாய்மார்களுடைய ஆசி கிட்டியிருக்கும்? அந்த ஆசிகளின் பலத்தில் இது பொன் விழா, வைர விழா, வைடூரிய விழா வெல்லாம் கொண்டாடிச் சிறப்புற முடியுமே? இங்கே பிறந்து பூரணாயுசில் பாதியைத் தாண்டிவிட்ட எத்தனை குழந்தைகள், தாத்தா — பாட்டிகளாகி இந்த வைபவத்தைக் கண்டு களிப்பார்கள்! இத்தகைய பொன்னாள் நினைவே பொன் விழாவுக்கு மெருகூட்டுமே! ஒவ்வொரு நாளும் பல குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இம் மகப்பேறு மனைகளுக்கு எந்நாளுமே திருநாள்தான் என்றாலும், பொன் விழா நாள் பெரும் திருவிழா நாள் அல்லவா? —**ரா. வீ.**



இந்த உலகில் வாழும் நம்மைக் கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறாரோ, இல்லையோ மூன்றரைக் கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள சிலர் நம்மைக் கவனித்த வண்ணமாகத் தான் இருக்கிறார்கள் என்பதற்கு எனக்குச் சமீபத்தில் சான்றுகள் கிடைத்துள்ளன.

அன்று ஒரு நாள் மௌண்ட்ரோட்டில் ஒரு சினிமாக் கொட்டகைக்கு முன்னால் கியூ வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த இருவரை நான் கவனிக்க நேர்ந்தது. மாணவர்களைப் போலத் தோற்றமளித்தாலும் அவர்கள் இந்த உலகத்து மாணவர்களாகத் தோன்றவில்லை. முதலில் அவர்கள் முகத்தில் நம் மாணவர்கள் முகங்களில் காணப்படும் கால் அங்குல மீசை இல்லை. டெரீலின்-பாண்டோ, டெரீலின் ஸ்லாக்கோ அவர்கள் அணிந்திருக்கவில்லை. அந்த பாண்டும் உடம்போடு ஒட்டியதாகவும், விலாவுக்கு இரண்டு அங்குலத்துக்குக் கீழ் இருந்து ஆரம்பிப்பதாகவும் இருக்கவில்லை. அதற்குப் பதில் தொள தொளவென்று இருந்ததுடன், விலாவுக்கு மேலே இரண்டு அங்குலம் சென்றது. நம் மாணவர்களின் ஸ்லாக்கைப் பார்த்தால் ஸ்திரீகளின் ஜாக்கெட் துணியோ என்கிற சந்தேகம் வருமே, அந்தச் சந்தேகமும் இவர்கள் சட்டையைப் பார்த்தால் வரவில்லை. அதோடு அது கிட்டத்தட்ட முழங்கால் வரை நீண்டிருந்தது. அவர்கள் தங்கள் தலை முடியை வெட்டியிருந்த விதமும், நம் ஊர் சிகை அலங்காரக்காரர்கள் கையில் அவர்கள் சிண்டு அகப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டியது. அவர்கள் வாயில் சிகரெட்டு காணப்படவில்லை.

ஏதோ மலை உச்சியில் இருப்பது போல் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள். இருவருக்கு மிடையே ஒரே ஒரு தோல் பை இருந்தது. அதைத் தூக்க முடியாமல் ''நீ வைத்துக்கொள்'', ''நான் வைத்துக் கொள்கிறேன்'' என்று மாறி, மாறித் தூக்கிக் கொண்டு நின்றார்கள்.

'பார்ப்பதற்கு அந்தத் தோல் பை மிகவும் சின்னதாக இருக்கிறது. இருந்தும் தூக்க முடியவில்லை என்று தவித்துக் கொண்டிருக்கிறார்களே!' என்று ஆச்சரியப்பட்டேன். ''அதில் ஏதாவது இரும்புக் குண்டு, ஈயக் குண்டுகளோ உள்ளனவோ?'' என்று பேச்சுத் தொடுத்தேன்.

இருவரும் என்னைத் திரும்பிப் பார்த்தனர். தங்களுக்குள் ஏதோ ஒரு மொழியில் பேசிக் கொண்டார்கள். அது எனக்கு இந்த உலகத்து மொழியாகவே தோன்றவில்லை. பிறகு அவர்கள் என்னைப் பார்த்துத் தமிழில், ''அதில் வெறும் காகிதங்கள்தான் இருக்கின்றன'' என்றார்கள்.

''வெறும் காகிதமாக இருந்தால் அத்தனை கனக்காதே!''

''ஏன் கனக்காது! உங்கள் உலகின் ஈர்ப்புச் சக்தி எங்கள் உலகின் ஈர்ப்புச் சக்தியை விட அதிகமாயிற்றே!'' என்றார்கள்.

''உங்கள் உலகமா? அப்படியானால் நீங்கள் இந்த உலகத்தவர் இல்லையா?''

''இல்லை.''

''பின் எந்த உலகத்தவர்?''

''இங்கிருந்து மூன்றரைக் கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள செவ்வாய் கிரகத்தைச் சேர்ந்தவர்கள்!''

இந்தப் பதிலைக் கேட்டதும், இவர்கள் செவ்வாய் கிரகவாசிகள் இல்லை, கீழ்ப்பாக்கம்வாசிகள்தான் தவறிப்போய் இங்கு வந்து விட்டார்கள் என்று ஒருகணம் நினைத்தேன்.

நான் சந்தேகப்பட்டதை அவர்கள் புரிந்து கொண்டு, தங்கள் சட்டையைச் சற்று விலக்கி, தங்கள் உடம்போடு வளர்ந்திருந்த சிறகுகளைக் காட்டினார்கள்.

''இந்தச் சிறகுகளைக் கவனித்தீர்களா?''

''கவனித்தேன்.''


''அப்படியானால் உங்களுக்கு ஏன் இன்னும் சந்தேகம்? நாங்கள் செவ்வாய் கிரகத்திலிருந்து பறந்து வந்தவர்கள்தாம்.''

''அங்கிருந்து வர உங்களுக்கு எத்தனை வருஷங்கள் பிடித்தன?''

''வருஷங்களா! மூன்றரை நிமிடங்களில் வந்துவிட்டோம். வெளிச்சம் போகும் வேகத்தில் எங்களால் பறக்க முடியும். அந்த வேகத்தில் வந்தால் மூன்றரை நிமிடங்களுக்கு மேல் ஆகாது.''

''ஆமாம், எதற்காக உங்கள் உலகை விட்டு இந்த உலகத்துக்கு வந்தீர்கள்?''





கிரகத்திலிருந்து

நாடோடி

''இந்த உலகத்தைப் பற்றி ஓர் அறிக்கை தயாரிப்பதற்காகத்தான்.''

''என்ன அறிக்கை?''

''படம் முடியட்டும். நாங்கள் உங்கள் வீட்டுக்கே வந்து அந்த அறிக்கையை நீங்களே படித்துப் பார்க்கக் கொடுக்கிறோம்'' என்று கூறினார்கள்.

படம் முடிந்ததும், நான் அவர்களை என் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தேன். அவர்கள் தயாரித்திருந்த அறிக்கையைப் படிக்க ஆரம்பித்தேன்.

செவ்வாய் கிரக நிபுணர்களான டமாகும் போபாகும் பூவுலகத்துக்கு மூன்றரைக் கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள பூமி என்னும் கிரகத்தைப் பற்றித் தயாரித்த அறிக்கை இது.

பூமிக்கு நாங்கள் கிளம்பும் முன்னர், இரண்டு முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆராயும்படி எங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு விஷயங்களாவன:

1. நம் கிரகத்தில் ஜனநெருக்கடி அதிகமாகி விட்டதால், நம் மக்களின் ஒரு பகுதியினரைப் பூமிக்கு அனுப்பி வைக்க முடியுமா? அங்குள்ளவர்கள் ஜன நெருக்கடி அதிகரிப்பதை விரும்புவார்களா?

2. அப்படி அனுப்பி வைத்தால் அந்த மக்கள் நம்மோடு ஒத்துப் போவார்களா?


இந்த இரண்டு கேள்விகளுக்கும் எங்கள் விடை கீழ்க்கண்டவாறு:

1. முதல் கேள்விக்கு விடை கண்டு பிடிப்பதற்காக நாங்கள் பூமியின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தோம். பல பாகங்களில் தயாராகும் தினசரிப் பத்திரிகைகளையும் வாரப் பத்திரிகைகளையும் படித்துப் பார்த்தோம். பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களை ஆராய்ந்தோம். ரேடியோப் பாடல்களைக் கேட்டோம். மனிதர்களின் நடை உடை பாவனைகளைக் கவனித்தோம்.

இவற்றிலிருந்து நாங்கள் கொண்டுள்ள முடிவு யாதெனில், பூமியின் மக்கள், ஜனத் தொகை அதிகரிக்க வேண்டும் என்று வெகு துடிப்பாக இருக்கிறார்கள் என்பதாகும். அதற்காக அவர்கள் பல காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்த ஆசை மிகவும் அதிகம் என்று தோன்றுகிறது. ஆகவே நாம் குடியேற வேண்டுமானால், தமிழ்நாட்டில் குடியேறுவது நல்லது என்று சிபாரிசு செய்வோம்.

நாங்கள் இந்த முடிவுக்கு வந்ததன் காரணங்களைக் கீழே ஐந்து பிரிவுகளாகப் பிரித்துக் கூறியுள்ளோம்:

(அ) இந்த உலகத்துப் பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக, தமிழ் நாட்டில் உள்ள பத்திரிகைகள் காதல் கதைகளைத்தான் பெரும்பாலும் வெளியிடுகின்றன. பருவப் பெண்களின் வருணனைகளையும், அவர்கள் காதல்



நோயினுல் பீடிக்கப்பட்டு எப்படி அவதிப் படுகிருர்கள் என்பதையும் பற்றித்தான் கதைகள் நிறைய வருகின்றன.

பாரத நாட்டில் உணவுப் பிரச்னே மிகவும் கடினமாக இருக்கிறது. நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பிரச்னேயும் இருக்கிறது. இருந்தும், இங்குள்ள பத்திரிகைகளில் இந்த இரு விஷயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், காதல் பிரச்னேக்கே மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதால் ஜனத்தொகையைக் கூடிய சீக்கிரம் அதிகரிக்க வேண்டும் என்கிற லட்சியம்தான் இவர்களே உந்துகிறது என்றும் அதற்காகத்தான் இத்தனே பகீரதப் பிரயத்தனத்துடன் வேலே செய்து வருகிருர்கள் என்பதும் தெளிவாகிறது.

இங்குள்ள பத்திரிகைகளில் எழுத்தாளர்களேவிடச் சித்திரக்காரர்களுக்கு மகத்துவம் அதிகம். ஸ்திரீகளே எத்தனே கவர்ச்சிகரமாக வரைய முடியுமோ அத்தனே கவர்ச்சிகரமாக வரைவதுதான் இந்தச் சித்திரக்காரர்களின் வேலே.

காதல் உணர்ச்சி அதிகரித்தால் ஜனத்தொகை பெருகத்தானே செய்யும்? எனவே இந்த ஒரே உயர்ந்த லட்சியத்தோடுதான் அந்த உலகப் பத்திரிகைகள் வேலே செய்து வருகின்றன என்று கருதுகிருேம்.

(ஆ) பத்திரிகை விளம்பரங்கள்: படிக்கத் தெரிந்தவர்கள் பத்திரிகைக் கதைகளேப் படித்துத் தங்கள் நாட்டின் இலட்சியம் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப ஒழுகலாம். ஆனுல் படிக்கத் தெரியாதவர்கள் என்ன செய்வார்கள் என்பதை மனத்தில் கொண்டுதான் இந்தப் பத்திரிகை விளம்பரங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று நினேக்கிருேம்.

விளம்பரம் செய்கிறவர்கள் எல்லோருமே அவர்கள் என்ன பொருளே விற்பனே செய்கிறவர்களாக இருந்தாலும் சரி, நாட்டின் லட்சியத்தை மனத்தில் கொண்டு, தங்களுக்குள் ஓர் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்கள் என்று நினேக்கிருேம். எந்த விளம்பரமாக இருந்தாலும் சரி, அதில் ஒரு கவர்ச்சிகரமான யுவதியின் படத்தைச் சேர்க்காமல் இருப்பதில்லே. விளம்பரம் செய்யப்படும் பொருள் ஆண்களே உபயோகப்படுத்தும் க்ஷவரக் கத்தியாக இருந்தால் கூட அதை ஓர் அழகிய பெண் எடுத்துக் கொடுப்பது போலவோ, அல்லது தன் கணவர் உபயோகப்படுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்வது போலவோதான் விளம்பரங்கள் இருக்கும்.

இந்த அழகிகளின் படங்கள் பெரிதாகவும், விற்பனேப் பொருள்களின் படங்கள் சிறிதாகவும்தான் அமையும். சில சமயங்களில் விற்பனேப் பொருள் என்ன என்று கூடக் கண்டுபிடிக்க முடியாது. இருந்தும் நாட்டின் இலட்சியத்துக்காக, இப்பெரும் தியாகத்தைச் செய்ய இந்த உலக விற்பனேயாளர்கள் முன்வந்துள்ளார்கள் என்றே தோன்றுகிறது.

(இ) சினிமாப் படங்கள்: காதல் உணர்ச்சியை அதிகரிப்பதில் சினிமாப் படங்கள் அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் படங்கள், பத்திரிகைகளே விடப் பன்மடங்கு தீவிரமாக உள்ளன.

இப்படங்களில் பாடப்படும் பாடல்கள் எல்லாம் வெகு சிரமப்பட்டு ஆண், பெண் உறவை அடிப்படையாக வைத்துத்தான் இயற்றப்படுகின்றன.

நம் நாட்டில் உள்ளது போல் இங்கு பள்ளிகளில் காம சாஸ்திரம் ஒரு பாடமாகப் போதிக்கப் படுவதில்லே. அதனுல்தான் போலும் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளேகளே இந்தப் படங்களுக்குத் தாங்களே அழைத்துக் கொண்டு போகிருர்கள்.

காம உணர்ச்சியை அதிகரிக்கும் விஷயத்தில் முதல் பரிசு சினிமாப் படங்களுக்கு, அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் படங்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யலாம்.

(ஈ) ரேடியோ: இந்தப் பெரும் காரியத்தில் ரேடியோக்களும் பின்வாங்கவில்லே என்பதைக் கண்டோம். மற்ற நாட்டு ரேடியோக்களே நாங்கள் அதிகம் கேட்கவில்லே. தமிழ் நாட்டு ரேடியோப் பாடல்களேத்தான் கேட்டோம். இங்கு, சயனத்துக்குப் போகும் இரவு பத்தரை மணி சமயமாகப் பார்த்து, சினிமாப் பாட்டுக்கள் என்கிற பெயரில் காதல் பாட்டுக்களாக ஒலிபெருக்குகிருர்கள்.

(உ) ஸ்திரீகளின் நடை, உடை, பாவனேகள்: கடைசியாக, ஸ்திரீகளின் நடை, உடை, பாவனேகளேக் கொண்டும், இந்த உலகத்து மக்கள் ஜனத்தொகையை அதிகரிக்க விரும்புகிருர்கள் என்ற முடிவுக்கு வந்தோம். இங்கு மேல் நாடுகளில் ஸ்திரீகள் எவ்வளவு குறைவாக ஆடைகள் அணிய முடியுமோ அத்தனே குறைவாக அணிந்து, ஆடவர்களேத் தங்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிருர்கள். ஆனுல் பாரத நாட்டில் குறைவான ஆடைகள் அணியும் வழக்கம் இன்னும் ஏற்படவில்லே. அதற்குப் பதில் மெல்லிய ஆடைகள் அணிவது வழக்கமாகிக் கொண்டு வருகிறது. இந்த மெல்லிய ஆடைகளுக்கு உள்ள ஈர்ப்புச் சக்தி, மேல் நாட்டுக் குறைவான ஆடைகளுக்கு உள்ள ஈர்ப்புச் சக்தியைவிட அதிகம் எனலாம்.

ஆக, மேலே சொன்ன காரணங்களேக் கொண்டு இந்த உலகத்தவர் ஜனத்

தொகையை அதிகரிக்க விரும்புகிறார்கள் என்றும், நாம் குடியேறினால் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் முடிவுக்கு வந்தோம்.

இப்போது எங்களுக்குக் கொடுக்கப்பட்ட இரண்டாவது கேள்விக்கு விடைகூறுவோம்.

2. இந்தப் பூலோக வாசிகள் நம்மோடு ஒத்துப் போவார்களா என்பதுதான் இரண்டாவது கேள்வி.

இது விஷயம்தான் எங்களுக்குப் பெருத்த சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில் ஒத்துப் போகும் வழக்கம் இந்தப் பூலோகவாசிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டு ஒருவரையொருவர் அழித்த வண்ணமே இருக்கிறார்கள். ஆகவே இவர்களோடு ஒத்துப் போவது கடினம்.

ஆனால் நாம் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னும் சிறிது காலத்துக்குள் இவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு விடுவார்கள் என்பதற்கு அறிகுறிகள் காண்கின்றன. அப்பொழுது நாம் பெரும் அளவில் பூலோகத்துக்குக் குடியேறலாம்.

அறிக்கையைப் படித்து முடித்ததும், "என்ன தம்பிமார்களே? முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லியிருக்கிறீர்கள்? நாங்கள் ஜனத்தொகையை அதிகரிப்பதற்கே சகலமும் செய்து வருவதாகவே முதலிலெல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில் ஜன சமுதாயத்தையே அடியோடு அழித்துவிடும் காரியத்தில் நாங்கள் ஈடுபட்டிருப்பதாகக் கூறுகிறீர்களே!" என்றேன்.

செவ்வாய் கிரக வாசிகள் வாய் விட்டுச் சிரித்தார்கள். "உங்கள் உலகில் மட்டும் தான் நிபுணர்கள் தயாரிக்கும் அறிக்கை முன்னுக்குப் பின் முரணாயிருக்கும் என்று நினைத்தீர்களா?" என்று கேட்டுவிட்டுப் பறந்தே விட்டார்கள்.

தீபங்கள் ஏந்துங்கடி!

திருமார்பன்



மங்கையரே, ஒன்று கூடுங்கடி; — நல்ல
மங்களத் தீம்புனல் ஆடுங்கடி;
துங்கவப் புத்தாடை நாடுங்கடி; — வாசத்
தூயம லர்ச்சரம் சூடுங்கடி!

குத்துவி ளக்கில்நெய் ஊற்றுங்கடி; — அதில்
கோலச் சுடரொளி ஏற்றுங்கடி;
முத்துச் சுடரினைப் போற்றுங்கடி — நெஞ்சில்
மொய்த்த துயரினை மாற்றுங்கடி!

தூய எழிற்சுடர் மூண்டதடி; — அதில்
தொல்லை இருட்பகை மாண்டதடி;
நேய பெருவாழ்வு மீண்டதடி; — உயர்
நீதியே அம்புவி ஆண்டதடி!

'வெற்றியோ, வெற்றி'யென் றூதுங்கடி; — கண்ணன்
வீரக் கரங்களைப் பாடுங்கடி;
வெற்றிநன் னூலைக்கொண் டாடுங்கடி; — கோ
விந்தனின் நல்லாசி தேடுங்கடி!

எங்கும்வி யாபித்த வெங்கொடுமை — தன்னை
எற்றிய வெற்றிமு குந்தனுக்கு
அங்கையில் தீபங்கள் ஏந்துங்கடி; — சுற்றி
ஆவலி செய்தின்பம் நீந்துங்கடி!



கல்லுக்குள் ஈரம்

அத்தியாயம் 43

பச்சைக் கல் மோதிரம்

ரங்கமணி பலத்த சிந்தனையில் மூழ்கியிருப்பதைக் கண்டதும், ''என்ன, மிஸ்டர் ரங்கமணி! பகற்கனவு காண்கிறீர்களா? அப்படி என் முகத்தில் என்ன இருக்கிறது, கண்கொட்டாமல் பார்க்கிறீர்களே? எதைப் பற்றிய சிந்தனையோ?'' என்று கேட்டுக் கொண்டே அவன் தோள்மீது சிவானந்தம் கையை வளைத்துப் போட்ட போதுதான், ரங்கமணி சுய நினைவை அடைந்தான்.

''எதையோ நினைத்துக் கொண்டிருந்து விட்டேன்'' என்று கூறிச் சிரித்துச் சமாளித்தான் ரங்கமணி.

''எந்தப் பக்கம் போகிறீர்கள்?'' — சிவானந்தம் கேட்டான்.

''அச்சாபீசுக்குத்தான்.''

''காரில் ஏறுங்கள். கொண்டு விட்டு விட்டுப் போகிறேன்..... ஏறுங்கள்.''

''வேண்டாம், வேண்டாம். நீங்கள் எதிர்த் திசையில் அல்லவா செல்கிறீர்கள்?''

''அதனால் என்ன? எனக்கு இப்போது வேலை ஒன்றும் இல்லை. உங்களோடு சிறிது நேரம் பேசவாவது சந்தர்ப்பம் கிடைக்கும். வாருங்கள், போகலாம்'' என்று கூறிக்கொண்டே காரின் முன் பக்கத்துக் கதவைத் திறந்தான் சிவானந்தம். ரங்கமணி காருக்குள் ஏறிச் சிவானந்தத்துக்குப் பக்கத்தில் அமர்ந்தான். சிவானந்தம் காரை முடுக்கி விட்டான்.

''உங்களுக்கு வேலை இல்லையென்றால் என் வீட்டுக்குப் போகலாம். வருகிறீர்களா...?'' என்று கேட்டான் சிவானந்தம்.

''ஐயோ, வேண்டாம், வேண்டாம்; எனக்கு வேலை இருக்கிறது. மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றான் ரங்கமணி பரபரப்புடன்.

''அடேயப்பா! என் வீட்டுக்கு வருவதென்றால் அவ்வளவு பயமா? ஏன் இந்தப் பதற்றம்? போலீஸ் அதிகாரி என்றால் சிங்கமோ புலியோ அல்ல. மிஸ்டர் ரங்கமணி, நானும் மனிதன்தான்.''

''நான் பயப்படவில்லையே. நண்பரிடம் என்ன பயம்? எனக்கு இப்போது வர நேரமில்லை'' என்றான் ரங்கமணி.


கார் மறுபக்கம் திரும்பிச் சிக்கநரசையன் கிராமத்தை நோக்கிச் சென்றது. அச்சாபீசுக்குப் பக்கத்திலிருந்த அரச மரத்துக்குப் பக்கத்தில் காரை நிறுத்தச் சொன்னான் ரங்கமணி. மரத்து நிழலில் கார் நின்றது. இருவரும் காருக்குள்ளிருந்தவாறே பேசிக் கொண்டிருந்தார்கள்.

''உங்கள் பக்கத்திலேயே இருந்து பேசிக் கொண்டிருக்க எனக்கு எவ்வளவோ ஆசைதான். சில சமயங்களில் மனத்துக்கு நிம்மதி இல்லையென்றால் உங்களைத்தான் நினைத்துக் கொள்வேன்; ஆறுதலாகப் பேசிக்கொண்டிருக்கலாமே என்று. ஒன்றிரண்டு முறை கூட உங்களுக்குப் போன் செய்தேன். நீங்கள் ஊருக்குப் போயிருந்தீர்கள். சௌகரியப்படும்போதெல்லாம் என் வீட்டுக்கு வாருங்களேன்.'' — மிகுந்த ஆவலோடு கூப்பிட்டான் சிவானந்தம்.

''கட்டாயம் வருகிறேன். ஆனால் ஓய்வுதான் கிடைப்பதில்லை.... மிஸ்டர்



ர.சு.நல்லபெருமாள்



சிவானந்தம், உங்களுக்கு ஒரு பரிசு தரப் போகிறேன்'' என்றான் ரங்கமணி. அவனை வியப்புடன் கண் கொட்டாமல் பார்த்தான் சிவானந்தம்.

''ஏற்க மறுக்க மாட்டீர்களே....?''

''ஊஹூம், நண்பருடைய அன்பளிப்பை மறுக்க முடியுமா?'' என்றான் சிவானந்தம்.

ரங்கமணி தன் விரலில் கிடந்த பச்சைக் கல் மோதிரத்தைக் கழற்றிச் சிவானந்தத்தின் மோதிர விரலில் போட்டான். இதை எதிர் பாராத சிவானந்தம் திகைத்தான்.

''என்ன மிஸ்டர் ரங்கமணி! இதை என் விரலில் போட்டு விட்டீர்கள்?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''இது உங்களுக்குத்தான் பொருத்தமா யிருக்கிறது. மேலும் இந்த மோதிரம் அழகா யிருக்கிறது என்று நீங்கள் அடிக்கடி சொல்லி யிருக்கிறீர்கள்!'' என்றான் ரங்கமணி.

''ஆனால்.... இது உங்கள்.... உங்கள் காதலியின் பரிசு என்றல்லவா....?''

''சேச்சே.... அதெல்லாம் வெறும் கதை ; கற்பனைக் கதைதான்'' என்று கூறிவிட்டுச் சிவானந்தத்தின் கையைப் பிடித்துத் தூக்கி அப்படியும் இப்படியும் புரட்டி மோதிரத்தை அழகு பார்த்தான் ரங்கமணி.

''மோதிரம் போய்ச் சேர வேண்டிய விர லுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது'' என்றான் சிரித்துக் கொண்டே.

''எனக்கு எதற்கு இது? உங்கள் விரலுக் குத்தான் அழகா யிருந்தது'' என்றான் சிவானந்தம்.

''இல்லை... இல்லை... எனக்கு இந்த மோதிரம் பொருத்தமே இல்லை. உங்கள் விரலுக்குத்தான் எடுப்பாக இருக்கிறது. உங்கள் விரலில்தான் இது அதிகமாக ஜொலிக்கிறது'' என்றான் ரங்கமணி மோதி ரத்தைப் பார்த்துக் கொண்டே. பச்சைக் கல்லில் கமலவாசகியின் முகம் தோன்றிச் சிரிப்பது போல் பிரமை தட்டியது. அதையே முறைத்துப் பார்த்தான்.

''உங்கள் பரிசுக்கு ரொம்ப வந்தனம். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?'' என்றான் சிவானந்தம் நன்றிப் பெருக்குடன்.

''நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த மோதிரத்தைப் பத்திரமாகப் பாது காத்து வாருங்கள், அது போதும்'' என்றான் ரங்கமணி. பிறகு கார் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

''நேரம் கிடைத்தால் வீட்டுக்குக் கட் டாயம் வாருங்கள்'' என்றான் சிவானந்தம்.

''ஓ....கட்டாயம் வருவேன்'' என்றான் ரங்கமணி.

சிவானந்தம் விடைபெற்றுக் கொண்டு காரைத் திருப்பியபோது ஸ்டீயரிங் மீதிருந்த அவனுடைய விரலில் கிடந்த பச்சைக் கல் மோதிரம் பளிச் பளிச்சென்று மின்னியது. அவன் மறையும்வரையில் மரத்தடியிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தான் ரங்க மணி. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அடைக்கலப் பொருளைத் திரும்ப ஒப்படைத்து விட்டது போன்ற மனத் திருப்தி ஏற்பட்டது. மனத்திலிருந்து ஏதோ ஒரு பாரம் இறங் கியது போன்ற உணர்ச்சி தோன்றியது. பழைய நினைவுகளையும் நெஞ்சிலிருந்து இறக்கி விட முடியவில்லையே என்ற ஆற்றாமை யுடன் அச்சகத்தை நோக்கி நடந்தான்.

அன்று இரவு சுயேச்சை அச்சகத்தில் பாரதமாதா சங்கத்தார் மிக முக்கியமான விஷயம் பற்றி முடிவு செய்யக் கூடியிருந் தார்கள். சர்தாரின் அறைக்குள்ளிருந்த அனைவரும் சர்தாரையே கவனமாகப் பார்த் துக்கொண்டிருந்தனர். மிக முக்கியமான விஷயம் பற்றி விவாதிக்க அங்கு கூடியிருக் கிறார்கள் என்பது அங்கு கூடியிருந்தவர்களின் முகத்திலிருந்தே தெரிய வந்தது. சொக்க லிங்கம் பிள்ளை சொன்னார்:

''நேற்று இரகசிய ரேடியோ மூலம் பம்பாயிலிருந்து நமக்குச் செய்தி வந்தது. இந்தப் பாதையில் திருவனந்தபுரத்திலிருந்து இன்னும் பத்து நாட்களில் ஒரு ரயில் வண்டி நிறைய வெள்ளைக்காரப் படை வருகிறது. கிட்டத்தட்ட அறுநூறு வெள்ளைக்காரர்கள் இருப்பார்களாம். நல்ல சந்தர்ப்பம். அத்தனை பேரையும் பரமண்டலத்துக்கு அனுப்பி விட்டால் அரசாங்கத்துக்குப் பெரிய அதிர்ச்சியா யிருக்கும். நாடு முழுவதும் புரட்சித் தீ பற்றி எரியும். இந்த நேரத்தில் இந்தக் காரியத்தை நாம் முடித்து வைத்தால் பிரமாதமாக இருக்கும்.''

இதைக் கேட்டு அனைவரும் உற்சாகத்தால் ஆரவாரம் செய்தார்கள். ரங்கமணியின் உற்சாகம் கரை புரண்டது.

''அறுநூறு பேரா...? ஆகா, ஒரே அடியில் தீர்த்து விடலாம்...'' என்றான் ரங்கமணி.

''எப்படி....? அதைப் பற்றி யோசிக்கத் தான் நாம் கூடியிருக்கிறோம்'' என்றார் சர்தார்.

''அந்தப் படை வரும் வண்டி எப்போது இந்தப் பாதையில் வரும்?'' — சோமு கேட்டான்.

''தென்காசி ஜங்ஷனுக்கு இரவு எட்டு மணிக்கு வருமாம். அங்கிருந்து எட்டே முக்கால் லுக்குப் புறப்பட்டு வழியில் எங்கும் நிற்காமல் நேரே திருநெல்வேலி ஜங்ஷ னில்தான் தண்ணீர் பிடிப்பதற்காக ரயில் நிற்குமாம். இங்கு அரை மணி நேரம் நின்றுவிட்டுப் புறப்பட்டு அடுத்ததாக விருதுநகரில்தான் போய் நிற்குமாம்...''

''எனக்கு ஒரு வழி தோன்றுகிறது'' என்றான் சோமு.

''என்ன?'' என்று சர்தார் ஆவலோடு கேட்டார்.

''அந்த வண்டி சேர்மாதேவியை நெருங் கும்போது இரவு பத்து மணி ஆகிவிடும். அதைச் சேர்மாதேவி ஆற்றுப் பாலத்தில் உருட்டி விட்டால்....?''

''பேஷ்... அருமையான திட்டம்'' என்று இரைந்து கத்தினான் ரங்கமணி.

''என்ன மீனாட்சிநாதா! உன் அபிப்பி ராயம் என்ன?'' என்று கேட்டார் சர்தார்.

''ஓ... பாலத்தைத் தகர்த்து விடலாம். இரண்டு வெடிகளை ஒரே சமயத்தில் வெடிக் கும்படி செய்தால் பாலம் தகர்ந்துவிடும்'' என்றான் மீனாட்சிநாதன்.

''இன்னும் பத்து நாட்கள்தான் இருக் கின்றன. அதாவது இந்தத் திங்கட் கிழமை




தீபாவளி வெளியீடு!
நவம்பர் 1ம் முதல்
சென்னை
கெயிட்டி
கிரௌன்
உமா
மற்றும்
தென்னாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பு
காதலித்தால் போதுமா?
இசை
M.K. தேவராசன் - A.L. நாராயணன் கவிஞர் கண்ணதாசன் வேதா
K.V. ஸ்ரீநிவாஸ் B.A. • R. சுந்தரம் B.E

போய், அடுத்த திங்கட் கிழமை. அதற்குள் எல்லாம் தயாராகி விடவேண்டும்'' என்றார் சர்தார்.

''இந்தக் காரியத்தை யாரிடம் ஒப்படைக்கிறீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டான் இரகசியப் போலீஸ் வடிவேலு.

''நானே ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான் ரங்கமணி குறுக்கிட்டு. எல்லாரும் அவனைப் பார்த்தார்கள்.

''நீ எதற்கு?'' என்றான் காசிலிங்கம் அலட்சியமாக.



''ஒரு பெண்ணையே கடத்தி வரத் தைரியமில்லையே; இந்தக் காரியத்தில்...'' என்று வடிவேலு சொல்லி முடிப்பதற்குள் சர்தார் குறுக்கிட்டார்.

''அது முடிந்துவிட்ட விஷயம். அதை இனி கிண்டுவதில் அர்த்தமில்லை'' என்றார் சற்றுக் கோபமாக. பிறகு ரங்கமணியைத் திரும்பிப் பார்த்து, ''ரங்கமணி! நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''என்மீது நம்பிக்கை இருந்தால், நான் துணிவுடன் செயலாற்றுவேன் என்று நம்பினால் இந்தப் பொறுப்பில் எனக்கும் பங்கு கொடுங்கள்'' என்றான் ரங்கமணி. சர்தார் இலேசாகச் சிரித்தார்.

''உன் மீது நம்பிக்கை இல்லாமலா உன்னிடம் கேட்கிறேன்? நீ அன்று தவறி விட்டாயே என்று மற்றவர்களுக்குத்தான் உன்மீது சந்தேகம். இந்த முறை உன் திறமையை நிரூபித்து விடேன். அவர்களுக்குத் திருப்தியாகி விடும்'' என்றார். ரங்கமணி தலையை ஆட்டினான். எல்லோரையும் பார்த்துச் சர்தார் சொன்னார்:

''இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நானே தலைமை தாங்குகிறேன். மீனாட்சிநாதா! நீயும் ரங்கமணியும் நாளை சேர்மாதேவிக்குப் புறப்படுங்கள். எல்லாவற்றையும் ஏற்பாடு செய்துவிட்டு எனக்குத் தகவல் கொடுக்க வேண்டும். மற்றவர்கள் உங்களுக்கு வேண்டியவைகளை அப்போதைக்கப்போது கவனித்துக் கொள்வார்கள். ஜாக்கிரதையாக இருங்கள். எங்கு பார்த்தாலும் கலவரம் நடக்கிறது. இந்தச் சமயத்தில் போலீசின் கெடுபிடி அதிகமாக இருக்கும். போலீஸின் கவனத்தைத் திருப்பத் திருநெல்வேலிக்கு வடக்கே நாச வேலைகளில் ஈடுபடுங்கள். போலீசின் கவனம் அந்தப் பக்கம் இருக்கும் போது சேர்மாதேவியில் நம் வேலை நடப்பது சுலபம்.''

இரவு இரண்டு மணிக்குக் கூட்டம் முடிந்தது. அதற்குப் பிறகு ரங்கமணிக்குத் தூக்கம் வரவில்லை. பழி வாங்கச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்ற உற்சாகத்தில் மூழ்கியிருந்தான்.

ஒன்று இரண்டா.....அறுநூறு வெள்ளைக்காரர்கள்! சென்னை வீதியில் ரங்கமணியின் தந்தையை ஒரு வெள்ளைக்காரன் அடித்துக் கொன்றதற்கு இப்போது அறுநூறு வெள்ளைக்காரர்களைப் பலியிடப் போகிறான்...ஆகா! எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்! ரங்கமணி அத்தனை வருஷங்கள் காத்திருப்பதற்கு நல்ல பலன் கிடைத்து விட்டது!

மறுநாள் காலையில் சேர்மாதேவிக்குப் புறப்படுவதற்காக வேண்டிய சாமான்களை எடுப்பதற்காகச் சர்தாரின் வீட்டுக்கு வந்தான் ரங்கமணி. ஒரு சிறு பைக்குள் வேண்டிய துணி மணிகளைத் திணித்துக்கொண்டான். பெட்டிக்குள்ளிருந்த கைத்துப்பாக்கியையும் எடுத்துப் பைக்குள் திணித்துக் கொண்டான். பெட்டியை மூடப் போகும் போது, உள்ளே இருந்த சிலுவைப் பொம்மை தென்பட்டது. அதை எடுத்து உற்றுப் பார்த்தான்.

''மறு கன்னத்தைக் காட்டப் போகவில்லை. அடித்த கையை முறித்து எறியப் போகிறேன். என்னிடம் வந்து அகப்பட்டுக் கொண்டீரே. பொருத்தமில்லாத இடத்தில் மகாத்மா காந்தி உம்மை ஒப்படைத்து விட்டார்.....பாவம்....'' என்று முனகினான். சிலுவையிலிருந்த இயேசு கண்களை மூடிச் சாந்தமாயிருந்தார். இயேசுவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவருடைய முகத்தில் பொலிந்த சாந்தம் அவன் மனத்தை என்னவோ செய்தது.

''அறுநூறு உயிர்களைப் பலி வாங்கத் துடிக்கிறாயே, தன்னைப் பலி வாங்கியவர்களையே நேசித்த மகானைப் பார்...''

யாரோ அவன் காதில் மெதுவாக முணுமுணுப்பது போலிருந்தது. ஒரு கணம் அவன் உடல் சிலிர்த்தது.

''சேச்சே, இந்தச் சிலுவை பக்கத்தில் இருந்தால் கோழையாகத்தான் ஆகிவிடுவேன்...'' என்று முனகிக்கொண்டே சிலுவைப் பொம்மையைப் பெட்டிக்குள் வீசி எறிந்து விட்டுப் பெட்டியைப் 'படார்' என்று அறைந்து சாத்தினான்.

''அடேயப்பா, யார்மீதுள்ள கோபம் இப்படிப் பெட்டியைத் தாக்குகிறது?''

என்று கேட்டுக் கொண்டே அறைக்குள் வந்தாள் திரிவேணி.

''வெள்ளைக்காரன் மீதுள்ள கோபம்தான்'' என்று கூறிக்கொண்டே பெட்டியைப் பூட்டி மேஜைக்குக் கீழே வைத்தான் ரங்கமணி.

''பையில் என்ன துணிமணி எல்லாம்? எந்த ஊருக்கு?'' — திரிவேணி வியப்புடன் கேட்டாள்.

''ஒரு வேலையாகப் போகிறேன்'' என்றான் ரங்கமணி.

''அதுதான் தெரிகிறதே...எந்த ஊருக்கு?'' ஆவலோடு கேட்டாள்.

ரங்கமணி இலேசாகச் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை... கேள்விகளைக் கேட்டு என்னை அனாவசியமாகப் பொய் சொல்லத் தூண்டுகிறாய்'' என்றான் ரங்கமணி.

''இப்படி எத்தனை நாளைக்குத்தான் மறைந்து மறைந்து வாழப் போகிறீர்களோ! கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத் தான்... சரி, சாப்பிட வாருங்கள்.''

''இல்லை... நான் சீக்கிரமாகப் போக வேண்டும்.''

''அதெல்லாம் முடியாது. நீங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும். இலை போட்டு விட்டேன்.''

''எனக்கு வேலை இருக்கிறதே...''

''எப்போதுதான் உங்களுக்கு வேலை இல்லை... அத்தை போன பிறகு நீங்கள் என்னை மறந்துவிடத் தொடங்கிவிட்டீர்கள்'' என்றாள் திரிவேணி. அவள் குரல் கம்மியது. மிகுந்த சிரமத்துடன் கண்ணீர் வராமல் தடுத்துக் கொண்டாள். வலியச் சிரிப்பை வர வழைத்துக் கொண்டாள். சிரிப்பில் சோகந் தான் நிறைந்திருந்தது. அவளைக் கூர்ந்து பார்த்தான் ரங்கமணி.

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை, திரிவேணி... சரி, வா, சாப்பிடலாம்'' என்று கூறிக்கொண்டே சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தான்.

சாப்பாட்டு அறையில் ஓர் இலை மட்டும் போடப்பட்டிருந்ததும், ''நீயும் வாயேன், சாப்பிடலாம்'' என்றான் ரங்கமணி.

''நீங்கள் சாப்பிடுங்கள். நான் பரிமாறு கிறேன்'' என்றாள் திரிவேணி மிகுந்த ஆர்வத்துடன்.

''ஏன், குமார் எங்கே?''

''வாசலில் உட்கார்ந்திருக்கிறான்.''

''அவனைக் கூப்பிடேன், பரிமாறுவான்.''

''ஊஹூம், வேண்டாம். நான்தான் பரி மாறப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே தோசையை எடுத்து இலையில் போட்டாள் திரிவேணி. ரங்கமணி இலேசாகச் சிரித்தான்.

''அத்தை ஊட்டியது போல் நீயும் என்னை ஊட்டி வளர்க்க நினைக்கிறாயா?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங் களேன்'' என்றாள். அவள் முகம் குபீ ரென்று சிவந்தது. அவன் பார்வை, ஓரத் தில் நின்று அவளைக் கண்காணித்தது. இருவர் பார்வையும் ஒரு முறை முட்டி மோதிக் கொண்டன.

அவள் பரிமாற, அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அது அவனுக்குப் புது அனுபவம். திரி வேணி பரிமாறி அவன் சாப்பிட்டதே யில்லை. அவன் பக்கத்தில் அவள் உட்கார்ந்து கொண்டு சாம்பாரை அள்ளித் தோசை மீது ஊற்றினாள். அவளுடைய பரிவும் பாசமும் கண்கள் பேசிய மொழியும், அவன் நெஞ் சில் குறுகுறுத்தன. இடையிடையே அவளைப் பார்த்துக் கொண்டே சாப்பிட்டான்.

''இனிமேல் நான்தான் தினமும் பரி மாறுவேன்'' என்றாள் திரிவேணி.

''ஏனோ?''

''அது அப்படித்தான்... சரியாகச் சாப் பிடாமல் மெலிந்து விட்டீர்களே. அத்தை இருக்கும்வரையில் உங்களைக் கவனித்துக் கொண்டார்கள். இனி... இனி...'' மேலே சொல்ல முடியாமல் தவித்தாள். அவளைச் சொல்ல விடாமல் தடுத்தது, வெட்கமா? அல்லது வேதனையா?

அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் ரங்கமணி. அவள் கண்களை உற்றுப் பார்த் தான். என்னென்ன உறவுகளோ அவள் முகத்தில் தோன்றி அவன் நெஞ்சைத் தொடுவது போலிருந்தது.

அத்தை போன பிறகு தனியளாகி விட்ட திரிவேணியின் முகத்தில் உற்சாகம் இல்லை என்பதை முன்பே உணர்ந்திருந்தான். அவளைக் காணும்போதெல்லாம் அவள் முகத்தில் படர்ந்திருந்த சோகத் திரை விலகுவதையும் உணர்ந்திருந்தான்.

''இனி கவனிக்க ஆள் இல்லை என்கிறாயா? ஏன், நீதான் இருக்கிறாயே...?'' என்றான் ரங்கமணி.

இதைக் கேட்டதும் திரிவேணியின் முகம் மலர்ந்தது. கண்களில் ஒளி வீசியது. மிகுந்த ஆர்வத்துடன் அவன் முகத்தையே அவள் கண்கள் மொய்த்தன. கண்களில் நீர் படர்ந்தது. கண்ணீரின் ஊடே அவன் உரு வம் மங்கலாகத் தெரிந்தது. முகத்தை வேறு பக்கம் திருப்பிச் சமாளித்துக் கொண் டாள். சிறிது நேரத்துக்குப் பிறகு கேட்டாள்:

''ஊருக்குப் போய் விட்டு எப்போது திரும்புவீர்கள்?''

''இரண்டு மூன்று நாட்களில் வந்துவிடு வேன்.''

''எனக்கு ஒரு வாக்குக் கொடுங்கள்.''

''என்னவென்று...?'' — வியப்புடன் கேட் டான் ரங்கமணி.

''நாச வேலை எதையும் செய்வதில்லை என்று.''

ரங்கமணி சற்றுத் திகைத்தான். பிறகு சிரித்துக் கொண்டே கேட்டான். ''என்ன திரிவேணி! புலியிடம் மாமிசம் சாப்பிடுவ தில்லை என்று வாக்குறுதி கேட்கலாமா?''

''உயிருக்கு ஆபத்து விளைவிப்பதில்லை என்றாவது வாக்குறுதி கொடுங்கள்'' என்றாள் திரிவேணி, கெஞ்சும் குரலில்.


''விடுதலை இயக்கம் எப்படியெல்லாம் மாறுமோ? ஒருவேளை ஆயுதம் ஏந்திப் போர் புரியக்கூட நேரிடலாம். போர்க்களத்தில் இருப்பவனிடம் அஹிம்சையைப்பற்றிப் பேசு கிறாயே!'' என்றான் ரங்கமணி. **(தொடரும்)**

தலைவலியா?

ஸாரிடான்


'ரோஷ்' சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான் ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை போதும்.




தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான நாட்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு **ஸாரிடான்** போதும்!

'ரோஷ்' தயாரிப்பு:

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

VT. 5626.(A)



FDSAGM834TMA

அபூ நவாஸ் குட்டிக் கதைகள்



அபூ நவாஸ் தெனாலிராமனைப் போன்ற ஒரு கோமாளி. அதே சமயத்தில் பெருங் கவிஞனாகவும் திகழ்ந்தவன். இவன் ஈராக்கில் பிறந்து பாரசீகம், அரேபியா, எதியோப்பியா போன்ற நாடுகளிலும் வாழ்ந்தவன் என்று இவனைப் பற்றிய நாடோடிக் கதைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

எதியோப்பியாவில் அபூ நவாஸ் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் சக்கரவர்த்தியிடம் வந்து வேலை கேட்டான். அவனுடைய திடமான உடம்பைப் பார்த்த சக்கரவர்த்தி, ''உனக்குக் காவற்காரன் வேலை தருகிறேன்'' என்று சொல்லி, ஆயுதங்கள் கொடுத்து, அரண்மனையின் திட்டி வாசல் ஒன்றைக் காட்டி, ''இந்த வாசலுக்கு நீதான் காவல். பத்திரமாக வாசலைப் பார்த்துக் கொள்'' என்று கட்டளையிட்டார்.

அபூ நவாஸும் அங்கே நின்று கொண்டான். இரவானதும் தூரத்தில் பாட்டும் கூத்தும் நடைபெறும் சப்தம் கேட்டது... அதைப் பார்க்க ஆசைப்பட்ட அபூ நவாஸ் அரண்மனையின் திட்டி வாசலைக் கதவோடு பெயர்த்துத் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். விடிய விடிய நாட்டியம் பார்த்துவிட்டு, விடிந்ததும் கதவு நிலையோடு அரண்மனைக்குத் திரும்பினான். அப்பொழுது அரண்மனைச் சேவகர்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அபூ நவாஸைப் பார்த்ததும் அவனைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துச் சென்றார்கள்.



''அடே, அபூ நவாஸ்! இதுதான் நீ காவல் காக்கிற லட்சணமா? இரவில் அரண்மனைக்குள் திருடர்கள் புகுந்து கோடிக்கணக்கான பொன்னைத் திருடிக் கொண்டு போய்விட்டார்களே?'' என்று கோபமாகப் பேசினார் சக்கரவர்த்தி.

''அதற்கு நான் என்ன செய்வது? சக்கரவர்த்தியவர்களே?'' என்று கேட்டான் அபூ நவாஸ்.

''நீ திட்டி வாசலைக் காவல் செய்யாமல் அந்த இடத்தை விட்டு ஏன் போனாய்?''

''போனால் என்ன? வாசலையும் பெயர்த்து எடுத்துக்கொண்டுதானே போனேன்? அதைப் பத்திரமாகக் கொண்டு வந்துவிட்டேனே! வாசலைக் காவல் காக்க வேண்டும் என்பது தானே தாங்கள் எனக்கு இட்ட கட்டளை? திருடர்கள் வாசலைக் கொண்டு போய்விடவில்லையே?'' என்றான் அபூநவாஸ்.

அபூ நவாஸ் வருகை

ஒரு சமயம் அரசன் அபூ நவாஸ்மீது கோபம் அடைந்து, ''இங்கே வரும் போது அவன் உடை உடுத்தாமல் வரக் கூடாது; உடுத்துக் கொண்டும் வரக்கூடாது; நடந்தும் வரக் கூடாது; குதிரையில் ஏறிக் கொண்டும் வரக் கூடாது'' என்று உத்தரவிட்டார்.

உடையில்லாமலும் அதே சமயத்தில் நிர்வாணமாக இல்லாமலும், நடக்காமலும் அதே சமயத்தில் குதிரையில் ஏறாமலும் அபூ நவாஸ் எப்படி வரப் போகிறான் என்று பார்க்க ஊர் மக்களெல்லாம் ஆவலோடு அரண்மனைக்கு ஓடினார்கள். சிறிது நேரத்தில் 'அதோ வருகிறான்!' என்ற கூச்சலும் ஆரவாரமும் கேட்டன. எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். அபூநவாஸ் அங்கே காட்சியளித்தான். எப்படி?

அபூ நவாஸ் உடை உடுத்தாமல், மீன் பிடிக்கும் வலை ஒன்றை உடம்பில் சுற்றியிருந்தான். தான் ஓட்டிக் கொண்டு வந்த குதிரையின் மிதி வளையத்தில் ஒரு காலையும் தரையில் ஒரு காலையும் ஊன்றி நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்தான்.

ஊர் ஜனங்களெல்லாம் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சக்கரவர்த்தி அவமானமடைந்து ''இனி என் முகத்தில் விழிக்காதே'' என்றார்.



முகத்தில் விழிக்காத அபூ நவாஸ்

சில நாட்கள் சென்றபின் சக்கரவர்த்தி குதிரையில் ஏறி நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். தெருவில் இருந்த அனைவரும் எழுந்து சக்கரவர்த்தியைப் பார்த்துத் திரும்பி, தலை குனிந்து வணங்கினார்கள். ஒரே ஒருவன் மட்டும் முதுகைக் காட்டிக் கொண்டு மறுபக்கம் திரும்பி நின்றான்.



''அவனைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்'' என்று கோபத்தோடு கட்டளையிட்டார் சக்கரவர்த்தி. அவன் வேறு யாருமல்ல; அபூ நவாஸ்தான்!

''எனக்கு நேராக முதுகைக் காட்டிக் கொண்டு நிற்க வேண்டும் என்றால் உனக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

''தங்கள் கட்டளைப்படி தங்களுடைய முகத்தில் விழிக்காமல் நின்றேன். இதற்காக என்னைக் கோபிக்கிறீர்களே!'' என்றான் அபூ நவாஸ்.

''அடே, அபூநவாஸ்! இனி நீ இந்த எதியோப்பிய நாட்டு மண்ணிலேயே நடமாடக் கூடாது. இப்பொழுதே வேறு தேசத்துக்கு ஓடிவிடு. இல்லையென்றால் உன் தலையை வெட்டி விடுவேன்'' என்று சக்கரவர்த்தி பயங்கரமாக எச்சரித்தார்.

நடமாடிய மண்

சில மாதங்கள் சென்றபின் அந்த நகரில் ஒரு திருவிழா நடைபெற்றது. சக்கரவர்த்தி விழா பார்க்க வந்தபோது, அபூ நவாஸ் ஓர் ஓரத்தில் நிற்பதைப் பார்த்துக் கொண்டார். ''என் கட்டளையை மீறிய உன்னை இப்போதே தூக்கிலிடப் போகிறேன்'' என்றார்.

''தங்கள் கட்டளையை நான் மீறவே இல்லை. நான் எதியோப்பிய மண்ணில் நடமாடக் கூடாது என்றுதானே கட்டளை?''

''இப்போது நீ எதியோப்பிய மண்ணில் தானே நிற்கிறாய்?''

''இல்லையே! நான் அன்றே எதியோப்பியாவை விட்டு எகிப்துக்குப் போய்விட்டேன். அந்த நாட்டு மண்ணை என் காலணிகளுக்குள் போட்டு அதன்மீது கால்களை ஊன்றிக்கொண்டேன். அன்றிலிருந்து எகிப்திய மண்ணில் தான் நடமாடுகிறேனே ஒழிய, எதியோப்பிய மண்ணில் அல்ல'' என்றான் அபூ நவாஸ்.

பெருங் குற்றம் செய்து தப்பியது

ஒரு சமயம் அபூ நவாஸ் பாரசீக நாட்டுக்குச் சென்று அந்நாட்டுச் சுல்தானின் ஆதரவில் இருந்து வந்தான். சுல்தான் ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, அபூ நவாஸ் அங்கே கம்பீரமாகக் கை வீசிக் கொண்டு வந்தான். அப்போது அவனுடைய கைபட்டு ஒரு குழம்புப் பாத்திரம் சாய்ந்து சுல்தானின் விலை உயர்ந்த உடையிலே சில துளிகள் விழுந்து விட்டன. சுல்தான் மிகவும் கோபம் கொண்டு, ''இவனைக் கொண்டு போய்த் தலையை வெட்டி விடுங்கள்'' என்று சேவகர்களுக்கு உத்தரவிட்டார். சேவகர்கள் அவனைப் பிடிக்க வந்த போது, அவன் அவசரம் அவசரமாக வேறொரு பெரிய குழம்புச் சட்டியை எடுத்துச் சுல்தானின் தலையில் கொட்டி விட்டான்.

''அடே, அபூ நவாஸ்! உனக்கு இவ்வளவு துணிச்சலா? உன் நெஞ்சைப் பிளக்கிறேன்'' என்று கர்ஜித்துக் கொண்டே எழுந்தார் சுல்தான்.

''சுல்தான் அவர்களே! கொஞ்சம் பொறுங்கள். தங்களுக்கு நான் நல்லதுதான் செய்தேன். நான் தெரியாமல் செய்த சிறு தவறுக்குத் தலையை வெட்டச் சொல்லித் தண்டனை விதித்து விட்டீர்கள். இதை நாட்டு மக்கள் கேள்விப்பட்டால், 'இந்தச்



சிறிய தவறுக்கு இவ்வளவு கொடிய தண்டனையா? சுல்தான் கொடுமைக்காரர்' என்று பேசுவார்கள். ஆண்டவனும் உங்களைத் தண்டிக்காமல் விடமாட்டான். அதனால்தான் வேண்டுமென்றே ஒரு பெருங் குற்றத்தைச் செய்தேன். இந்தக் குற்றம் செய்த எனக்கு மரண தண்டனை விதித்தது நியாயம்தான் என்று ஜனங்களும் கூறுவார்கள். ஆண்டவனும் கருதுவான்'' என்று அபூநவாஸ் சொன்னான்.

சுல்தான் வியந்து, ''பெருங் குற்றம் செய்து சிறு குற்றத்திலிருந்து விடுபட்ட உன்னை எவனும் வெல்ல முடியாது'' என்றார்.

மூன்றாவது பரிசு நாவல்

மௌனக் கோலம்

அத்தியாயம் 6

அகிலாவின் பேச்சைக் கேட்டதும், மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தான் சந்தானம். கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

''ஏன் உங்களுக்கு இதிலே இஷ்ட மில்லையா ?''

கண்களைத் திறந்த சந்தானம், ''அதெல்லாம் இல்லே! அது சரி, இப்போ போய் உன்னுடைய அப்பா வைப் பார்த்தால் என்ன?'' என்று கேட்டான்.

''பேச்சு மூச்சு இல்லாமல் கிடக் கிறார்...... நாளைக்குக் காத்தாலே பிழைச்சுக் கிடந்தால் போய்ப் பார்ப் போம்....''

''சரி'' என்றான் சந்தானம்.

வீட்டை அடைந்ததும் இருவரும் ஹாலிலேயே உட்கார்ந்து கொண் டார்கள். ஆறுமுகமும் சீமாச்சு வும் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு நச்சரித்தார்கள். பிறகு சீமாச்சு, ''ராஜாகிட்டே கேட் டேன். அவன்கூட ஒண்ணும் சொல்லாமல் தலைவலி மாத்தி ரையும் சோடாவும் வாங்கிக் கொண்டு வான்னு அனுப்பி னான்'' என்றான்.

திடுக்கிட்டுப்போன அகிலா, ''ராஜா வந்தானா? எப்போ வந்தான் இங்கே?'' என்று கேட்டாள்.

''ஒன்பது ஒன்பதேகால் மணி இருக்கும்.''



''அப்போ நானும் அம்மாவும் ஆஸ்பத்திரியில் இருந்தோம். ஆமாமாம்....ராஜாவைக் கூட அங்கே அப்போ காணவில்லை.....''

''சொல்லாமல் கொள்ளாமல் போயிருக்கிறான் போலிருக்கு'' என்றான் சந்தானம்.

ஏன் ராஜா வந்து போன விவரத்தைச் சொன்னேனும் என்று தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறவனைப் போல் சிறிது நேரம் நின்று விட்டு, சிமாச்சு உள்ளுக்கு விரைந்தான். இந்தச் சிறிய தவறால், தடுமாற்றத்தால் உண்டான வாய்ப் பிசகால், ஆபத்து சம்பவித்து விடுமோ என்ற பயம் அவனுடைய உள்ளத்தில் விசுவரூபம் எடுத்தது.

ஏன் ராஜா வந்தான், என்ன செய்தான் என்றெல்லாம் அகிலாவின் மனத்தில் எழுந்த கேள்விகள் திடீரென்று மறந்து போகும்



வண்ணம், ஃபோன் மணி அலறியது. அப்போது மணி சரியாக ஒன்று.

''பம்பாய் கால் ரெடியாக இருக்கும்.''

மெதுவாக எழுந்த அகிலா, ஹாலின் கோடியில் ஒரு மூலையில் இருந்த ஃபோனை நோக்கிச் சென்றாள். இந்த வேளையிலும் நெருக்கடியிலும் பதற்றம் அடையாமல், நிதானத்தை இழக்காமல் அவள் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டு சந்தானம் ஆச்சரியம் அடைந்தான். பெண் மனத்தின் ஆணவமா அல்லது பக்குவப்படுத்திக் கொண்ட சகிப்புத் தன்மையா இதற்குக் காரணம்? அவனுக்கு...?

''யெஸ்.. கோதண்டராமன்ஸ் ஹவுஸ்..... ஹிஸ் டாட்டர் அகிலா ஸ்பீக்கிங்.... என்ன...? பத்து நிமிஷங்களாச்சா?''

ஃபோனை டக்கென்று வைத்த அகிலா, இருந்த இடத்திலிருந்தே சந்தானத்தைப் பார்த்தாள்.

அவளைப் புரிந்து கொண்ட சந்தானம் மெதுவாக அவள் அருகே சென்று, அவளுடைய இடையைப் பற்றிக் கொண்டே மெல்ல இழுத்துக் கொண்டு சோபாவுக்குத் திரும்பினான். அவளுடைய கண்களிலிருந்து பெருகி வந்த கண்ணீர் அவன் கையில் விழுந்தது.

அதன் வெப்பத்தைக் கண நேரம் உணர்ந்த அவன், ''நம் கையிலே ஒண்ணும் இல்லை, அகிலா!'' என்றான்.

அவளுடைய இலேசான விசும்பல் ஒலியை மீறிக் கொண்டு மீண்டும் ஃபோன் மணி அலறியது. 'இது பம்பாய்' என்று முணுமுணுத்துக் கொண்டே சந்தானம் எழுந்தான்.

''ஐயோ!'' என்ற ஒரே ஓர் அலறல்தான் கேட்டது. அதன் பின் வலியின் கொடூரம் தாள மாட்டாமல், மார்பை இரு கைகளாலும் அழுந்தப் பிடித்துக் கொண்டே, கோதண்டராமன் தாம் உட்கார்ந்திருந்த சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து

பி.வி.ஆர்

நிற்க முயன்றார்! இருதயத்தையே யாரோ நசுக்குவது போன்ற வேதனையில் அவர் துடிதுடித்துப் போனார். கால்கள் நடுங்கி ஒன்றுக்கொன்று எதிர்த் திசையில் தடுமாறினர்.

அவருடைய உடல் சாய்ந்தது.

எல்லாம் கண் இமைக்கும் நேரத்துக்குள் நடந்து விட்டது என்ற பிரமை ஏற்பட ராஜா, சாய்வு நாற்காலியின் மேல் சாய்ந்த அவருடைய உடலைத் தூக்க முயன்றான். செய்வதறியாத பயமும் பரபரப்பும் உடலெல்லாம் வியாபித்து நிற்கும் சீமாச்சுவைப் பார்த்து, ''சீக்கிரம் வாடா, ஒரு கை கொடு!'' என்று அவன் கத்தினான்.

இருவரும் சேர்ந்து கோதண்டராமனைப் படுக்கையில் கிடத்தவும், அலறல் கேட்டு அகிலா அங்கே ஓடோடி வரவும் சரியாக இருந்தது.

அடுத்த நிமிஷம் ராஜா ஃபோனுக்கு விரைந்தான். அருகேயே இருந்த ஒரு டாக்டர் கால் மணி நேரத்துக்குள் வர, மற்றும் இருவர் ஏழேகால் மணிக்கு வந்தார்கள். முதல் டாக்டரே வந்ததும் ஆம்புலன்ஸுக்கு ஏற்பாடு செய்தார். அவர் கோதண்டராமனைப் பார்த்ததுமே, கொடுத்த இஞ்செக்ஷனில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

இரவு எட்டு மணிக்குக் கோதண்டராமனை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். பிரக்ஞையற்றுப் போனவரின் நாசித் துவாரம் வழியாகப் பிராண வாயு சென்றது. அறைக்கு வெளியே அம்மா புலம்ப, பெண் தேற்ற, ராஜா அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தான்.

ஃ ஃ ஃ

கோதண்டராமனைப் பிராண வாயுவிடம் ஒப்படைத்த ராஜா, ராயப்பேட்டை ஆஸ்பத்திரியைவிட்டுவெளியே வந்தான். ரவி ஊரில் இல்லை. அம்மாவும் பெண்ணும் ஆஸ்பத்திரியில் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். சமையல்காரி பாலம்மாள் சமையலறை வேலை முடிந்தால் தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டிருப்பாள். ஆறுமுகம் உள்ளே அநாவசியமாக வர மாட்டான். வந்தாலும் வெளியே அனுப்பி விடலாம், அவனுடைய மனத்தில் சந்தேகம் தோன்றாத வகையில்! அப்புறம் சீமாச்சு தானே? எத்தனையோ வெள்ளித் தம்ளர்களையும், ஸ்பூன்களையும் எடுத்துப் பழகிப் போன கையில் எதையாவது வைத்தால் போதும்!

தெம்பும் நம்பிக்கையும் ஊற்று எடுத்துப் பெருக, அவன் உடனே ஒரு டாக்ஸி பிடித்து ஏறினான்.

''ஆழ்வார்ப் பேட்டை.... கொஞ்சம் அவசரமாகப் போகணும். ஆஸ்பத்திரி கேஸு....'' என்றான் ராஜா.

''எழுபது பைசா கிராக்கி!'' என்று முணுமுணுத்துக் கொண்டே டிரைவர் மீட்டரைப் போட்டு விட்டுத் தன் இடத்துக்கு நிதானமாக வந்தான். ராஜாவின் பொறுமை தீர்ந்து போய், மனத்தின் அவசரத்தில் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''கொஞ்சம் சீக்கிரம் அப்பா....!''

''இரு சாமி... மீட்டரைப் போடத் தாலே?.... சாவுக் கிராக்கி டிரிப்புக்கு இம்மாம் அவசரப்படறியே?''

ராஜா மௌனமாக அவன் கொடுத்ததை வாங்கிக் கொண்டான். வேளை சரியில்லை.

கேட்டுக்குச் சில கஜ தூரத்திலேயே இறங்கிக் கொண்டவன், தயாராக வைத்துக் கொண்டிருந்த சில்லறையைக் கொடுத்துவிட்டு நடந்தான்.

''பெரிய சீமான்! அவசரப்படுத்தின ஜோரிலே டீக்குப் பத்து பைசா போட்டுக் கொடுப்பாருன்னு பார்த்தேன்....''

டிரைவரின் முணுமுணுப்பைக் காதில் வாங்கிக் கொள்ள ராஜாவுக்கு ஏது நேரம்? அவன் விரைந்தான்.

போர்ட்டிகோ, திண்ணை, ஹால் வெறிச்சோடின. கோதண்டராமன் படுத்திருந்த அறைக்குள் அவன் தாவினான். அடுத்த கணம் இலேசாகக் கதவுகளைச் சத்தம் செய்யாமல் சாத்தினான். கட்டிலுக்கருகே மேஜையின் மீது மருந்துப் புட்டிகளும், மாத்திரைக் குப்பிகளும் கிடந்தன. அவன் சாயங்காலமே பார்த்திருந்த செக்குப் புத்தகமும் இருந்தது. பிரித்துப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. இரண்டு தாள்களில் பெயரையும் தொகையையும் குறிக்காமல், தேதியற்ற கையெழுத்துக்கள் மட்டும் போட்டிருந்தார் கோதண்டராமன். இது அவருடைய வழக்கம் என்று அவனுக்குத் தெரியும். அவனோ பாக்கியமோ அல்லது அகிலாவோதான் மற்றதைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இரண்டு தாள்களையும் கிழித்து மடித்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். வருமான வரி இலாகாவுக்கு ஒன்றரை லட்சம் ரூபாயை மறு நாளே கொடுத்துத் தீர்த்துவிட வேண்டும் என்று அவர் அன்று சாயங்காலம் சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது.

அடுத்தபடியாக அலமாரியைத் தேடினான். அவனுடைய பரபரப்பில் சாவி கிடைக்கவில்லை. உடம்பு வியர்த்து

உங்களுக்கே... பருவ மங்கையின் பைந்தளிர் மேனியெழில்.



இளமை கொஞ்சிப் புதுமெருகு மிளிரும் எழிலுக்கே... ஜேய் அழகு சோப்! சரும நெகிழ்ச்சிக்கான எண்ணெய்கள் கொழித்திட, ஆழ ஊடுருவிச் சுத்தமிடும் அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. விலை உள்ளளவும் எல்லை மீறிய செழிப்புடன் கமழும் அதன் மல்லிகை மணம் உங்களைக் கொள்ளைகொள்ளும். மறவாதீர்கள், நவீனமான உலோக ஜிகினாத் தாளுறை தரித்தது ஜேய் ஒன்றுதான்.

ஜேய்—நீங்கள் நினைப்பதை விடக் குறைவான விலை உள்ள அதி விசேஷ அழகுசாதன சோப்!

உங்கள் எழில் பெருக

ஜேய்

அழகு சோப்

உங்கள் மணங்கவர் மணங்கமழ்வது.



டாடா
தயாரிப்பு

235A TM.

இரட்டிப்பு அபராதம்



ஒருமுறை இரண்டு மாஜிஸ்டிரேட்டுகள் சைக்கிளில் விளக்கு இல்லாமல் இரவில் தங்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் போலீஸால் பிடிக்கப்பட்டு வழக்குப் பதிவாகியது. அடுத்த நாள் அந்த வழக்கு இவர்கள் கோர்ட்டுக்கே வந்தது. உடனே அவர்களில் ஒருவர் மாஜிஸ்டிரேட் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு மற்றவரை விசாரணை செய்து அவருக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தார். பிறகு ஆசனத்தை விட்டு எழுந்து வந்து குற்றவாளிக் கூண்டில் நின்றார். இரண்டாவது மாஜிஸ்டிரேட் ஆசனத்துக்குச் சென்று அவரை விசாரித்து அவருக்கு இருபது ரூபாய் அபராதம் விதித்தார். முதல் மாஜிஸ்டிரேட் திடுக்கிட்டு, ''நான் உங்களுக்குப் பத்து ரூபாய்தானே அபராதம் விதித்தேன்?'' என்றார். இரண்டாவது மாஜிஸ்டிரேட் சற்றும் தயங்காமல் ''எனக்குத் தெரியும். ஆனால் இதைப் போன்ற வழக்குகள் இப்போது மிகவும் அதிகமாகிவிட்டன. இது இன்று இக்கோர்ட்டிலே விசாரிக்கப்படும் இரண்டாவது வழக்கு'' என்றார்.

என். சுப்பிரமணியம்

அந்த வியர்வையில் அவனுடைய பனியன் ஒட்டிக் கொண்டது. கையின் கசிவைப் பாண்டிலேயே அழுத்தித் தேய்த்துவிட்டு, அலமாரியின் ஒவ்வொரு படியாக வந்தான். மூன்றாவது படியில் இரு லெட்ஜர்களுக்கிடையே மூன்று சாவிகள் கொண்ட ஒரு கொத்து இருந்தது.

மெதுவாக நின்ற ராஜா ஒரு நிமிஷம் தன்னைத் தானே நிதானித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். ஆள் அரவம் ஏதும் கேட்கவில்லை. கண்டிப்பாகச் சாகுந் தறுவாயில் இருக்கிற கோதண்டராமனை விட்டு விட்டுப் பாக்கியமும் அகிலாவும் வரமாட்டார்கள். ஆறுமுகத்துக்கும் சீமாச்சுவுக்கும் அவன் அங்கு வந்திருப்பதே தெரியாது.

கோதண்டராமனின் கட்டிலை ஓசைப்படாமல் நகர்த்திவிட்டு, அவன் அறிந்து வைத்திருக்கும் இடத்தை ஆள்காட்டி விரலால் நெருடினான். தரையின் நிறத்திலேயே தரையிலிருந்து மயிரிழை உயரத்துக்கு மேலே நீட்டியிருந்த ஓர் அங்குலச் சதுரத்துக்கு, ஓர் இரும்புத் தகடு விரலில் இடித்தது.

அதன்பின் சாவி கொண்டு திறப்பது அவனுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. மெள்ளப் பெட்டியைத் திறந்தான். அவன் மனம் லட்சம் லட்சமாக இருக்கும் என்று கணக்குப் போட்டதற்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பழையதும் புதியதுமாகப் பத்து ரூபாய் நோட்டுக்கள் தாறுமாறாகக் கிடந்தன.

இரு கைகளாலும் அள்ளிப் போட்டவன், பெட்டி காலிதான் என்பதை நிச்சயப்படுத்தி விட்டுப் பூட்டினான். பழையபடி அவன் கட்டிலை ஒழுங்காக வைத்தான்.

கட்டுக்களை அவசரம் அவசரமாக எண்ணினான். நாற்பத்தாறு. ஒவ்வொரு கட்டிலும் ஆயிரம் ரூபாய்! நாற்பத்தாறாயிரம்.... அவனுக்கு ஆஸ்பத்திரியில் உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் கோதண்டராமன் மீது எரிச்சலும் ஆத்திரமும் வெடித்தன.

மீண்டும் அலமாரியில் தேடினான். ஒரு பழைய தோல் பை உண்டு என்று அவனுக்குத் தெரியும். நாற்பத்தாறு கட்டுக்களை அவன் வேறு எதில் அடைத்துக் கொண்டு போக முடியும்?

மிகப் பழைய காகிதங்களைத் தாங்கிக் கொண்டு அந்தத் தோல் பை வீங்கிக் கிடந்தது. என்ன செய்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் அவ்வளவு காகிதங்களையும் கீழே தரையில் கொட்டினான். திசைக்கு ஒன்றாக, காகிதங்கள் சிறிதும் பெரிதுமாய் வெள்ளையும் நீலமுமாய்ப் பரவி விழுந்தன. ஒவ்வொரு கட்டாகப் பையில் திணித்தான்.

இப்போது அவனுடைய உடல் வியர்வையில் மூழ்கிக் கொண்டிருந்தது. மனத்தளத்தில் கேவலம் நாற்பத்தாறாயிரம்தான் என்ற ஏமாற்றம் நிமிடத்துக்கொரு தடவை எழுந்து அவனை வாட்டிய போதிலும், செய்து கொண்டிருக்கிற காரியத்தை எண்ணி நடுக்கமும் பீதியும் அவனை ஆசுவாசப் படுத்திக் கொள்ளவும் முடியாமல் அடித்தன.

கீழே சிதறிக் கிடந்த காகிதங்களை என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவற்றைப் பொறுக்கி, ஒழுங்காக எடுத்து வைப்பதில் முனைந்தால் பொழுது விடிந்து விடும். கண்கள் கைக் கடிகாரத்தைப் பார்த்தன. பதினைந்து நிமிஷங்களில் அவன் தனது காரியத்தை முடித்திருந்தான்! ஆனால் அவை பதினைந்து யுகங்கள் போல அல்லவா பயமுறுத்துகின்றன. அதிகாலையில் சிதறின காகிதங்களை எடுத்து வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவோடு, அவன் மெதுவாகக் கதவண்டை வந்து, ஒரு நிமிடம் நின்ற பிறகு திறந்தான்.

அடுத்தகணம் அவன் சிலேயாக நின்ருன்.

சிமாச்சு தனக்கே உரித்தான குறும்புச் சிரிப்புடன், ''என்ன ராஜா ஸார்! ரூமிலே மாமா இல்லேயே?'' என்ருன். பிறகு, ''கையிலே என்ன பை?.... இன்ஷூரன்ஸ் ஏஜண்டு மாதிரி?'' என்ருன்.

''சிமாச்சு.... எல்லாம் அப்புறம் சொல்றேன், வழியை விடு!''

''ஊஹூம்...! இருபது வருஷமா நான் இங்கே இருக்கிறவன். அதிலே என்னன்னு தெரியணும்.... இந்தக் கதவோட்டை வழியாக, நீ கட்டிலே நீக்கினதும், சாவியாலே.....''

''உஸ்.... பேசாமல் இரு.... அதிகம் ஒண்ணும் இல்லே....''

''எவ்வளவு இருந்தது?''

''கொஞ்சம்தான்..... நான் உன்னேக் கவனிச்சுக்கிறேன்.''

''கொஞ்சம்னு எவ்வளவு..... பை கனமாயிருக்கே......''

''ஒன்பதாயிரத்துச் சொச்சம்.....''

''அப்பப்பா... கிட்டத்தட்ட பத்தாயிரமாகிறதே...இதைப் போய்க் கொஞ்சம் என்கிருயே....!''

''இந்தா உனக்கு!'' அவசரம் அவசரமாகத் தோல் பையிலிருந்து ஒரு கட்டை எடுத்து அவன்கிட்டே கொடுத்தான்.

''எத்தனே இது.... ஐந்நூரு.... ஆயிரமா?''

''எத்தனேயோ.... வழி விடு!''

''மாட்டேன்.... இது மாதிரி இன்னும் வேணும்....''

''தொந்தரவு பண்ணுதே....!''

''சரி..... நீ போறத்தை நான் பார்த்துடறேன்.''

பொறுமை இழந்த ராஜா மேலும் ஒரு கட்டை எடுத்துக் கொடுத்தான்.

''இன்னும் ஒண்ணே ஒண்ணு.....!''

மிரட்டலும் கெஞ்சலும் குழைய நின்ற சிமாச்சுவைப் பார்த்த போது, அங்கேயே அவனேத் தீர்த்துவிடலாமா என்ற ஆத்திரம் பிறிட்டது ராஜாவுக்கு.

''இந்தா!'' என்று மூன்ருவது கட்டை அவன் முகத்தில் எறிவது போல் கையில் விசிறின ராஜா, ''காரியமெல்லாம் காரியம்தான்..... இதைப் பத்தி நீ வெளியிலே மூச்சு விட்டாயோ அவ்வளவுதான்... புரிஞ்சுதா.....'' என்ருன்.

''புரியறது!''

''எங்கேயாவது போய் ராவோடு ராவா ஒளிச்சு வை.... இங்கேயே எங்காவது வைச்சுத் தொலேக்காதே!''

''எனக்குச் சொல்லித் தரேளா...!''

பெண்வாடை இல்லாத சங்கம்



நியூயார்க்கில் உள்ள தாமரைக் கழகத்தின் (Lotus Club) தனிப் பெருமை அதில் பெண்களுக்கு இடமே தரப்படாததுதான். தொண்ணூறு ஆண்டுகளாகக் கலே நிலேயமாக உள்ள இந்தக் கழகத்தில் ட்ருமன், ஐஸன் ஹோவர் உள்ளிட்ட பல ஜனுதிபதிகள் அங்கத்தினர்களா யிருந்திருக்கின்றனர்.

இதன் அங்கத்தினர் தத்தம் கலேகளேச் சர்வ சுதந்திரமாகப் பின்பற்றி வருவதற்குக் காரணம் இதில் ஆரம்பத்திலிருந்தே பெண்களே அனுமதிக்காததுதான் என்கிருர்கள்! பெண்கள் இச் சங்கத்தில் நுழைந்துவிடக் கூடாதே என்பதற்காக அதன் சுவர்களில் பரம ஆபாசமான படங்களே மாட்டி வைத்திருக்கிருர்களாம்.

ஆனல் இந்தக் காலத்து அமெரிக்கப் பெண்கள் ஆபாசத்துக்கு நாணுவார்களா? அவர்களேயும் சேர்த்துக் கொண்டால் சங்கத்தின் வரும்படி உயருமே என்று நிருவாகக் கமிட்டி கருதிவிட்டது. பெண்களேயும் அநுமதிக்கலாமெனக் கடந்த ஜுலேயில் விதியை மாற்றி விட்டது. இதை ஆட்சேபித்துக் கழக அங்கத்தினர்கள் வழக்குத் தொடுக்கப் போவதாக வதந்தி.

'எஸ்கொயரி' லிருந்து
'வி' எடுத்தெழுதியது

''சரி போ... போ... ஜாக்கிரதை! அதுக்கு முன்னுடி, அங்கே பேப்பரெல்லாம் இறைஞ்சு கிடக்கு... யாராவது பார்க்கிறதுக்கு முன்னுடி எடுத்துவை!'' என்று சிமாச்சுவிடம் சொல்லி விட்டு ராஜா படுவேகமாகத் திருவான்மியூர் சென்ருன். தன் வீட்டில் அம்மாவுக்கும் தெரியாமல் பையைப் பத்திரப்படுத்தி விட்டு, வந்த டாக்ஸியிலேயே திரும்பி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரியை அடைந்தான். அப்போது மணி பத்தேமுக்கால். அகிலா வீட்டுக்குப் போய் விட்டாள் என்பதைக் கேட்டதும் மனம் துணுக்குற்றது.

கோதண்டராமன் உயிரோடிருந்த நாட்களில் அவரைப் பார்க்க வெறுத்த நெருங்கிய உறவினரில் பலரும், பயந்த தூரபந்துக்களில் சிலரும் பத்து நாட்களுக்கு வந்தபடி இருந்தார்கள். மஞ்சளேயும் குங்குமத்தையும் இழந்த பாக்கியம், கணவரின் மரணம் எதிர்பார்த்ததொன்றே என்று அடிக்கடி எண்ணி மனம் தேற முயன்ருலும் சமூ

கத்தில் இனித் தனக்கு சுமங்கலித்துவம் இல்லாமல் போய் விட்டதைக் குறித்து நொந்து கொண்டாள். எல்லாப் பெண்களையும் போலல்லாமல், அகிலா தன் சோகத்தைத் தன்னுள்ளேயே அடக்கிக் கொண்டு விட்டு நிர்வாகம் குலைந்து போய் விடாதவண்ணம் பார்த்துக் கொண்டாள். துக்கம் விசாரிக்க வருகிறவர்களிடம், பாக்கியம் மௌனமாய்த் தன்னுடைய துயரத்தைக் காட்டி, தலை குனிந்து உட்கார்ந்தபோதெல்லாம் அகிலா தான் இரண்டு வார்த்தைகள் பேசி அனுப்பினாள்.

பம்பாயிலிருந்து விமானத்தில் வந்த ரவியைத் தகப்பனாரின் மரணம் தாங்க முடியாத துயரத்தில் ஆழ்த்திவிடவில்லை. அவரைக் குறித்து ஒருவித வேதனைதான் அவன் உள்ளத்தில் எழுந்தது. தந்தையின் சடலத்தைக் கண்டபோது, அதன் முகத்தில் நிலவிய அமைதி அவனைக் கவர்ந்தது. இந்த அமைதி அவர் உயிரோடிருக்கையில் அவருடைய மனத்தில் இருந்ததே கிடையாது என்ற ஞாபகமும் அவ்வேளையில் அவனுள் எழுந்தது.

என்றைக்குமே ரவிக்குத் தன் தந்தையைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது. பள்ளிக்கூட நாட்களிலும் கல்லூரி வாழ்க்கையின் போதும் அவன் அவரை ஒரு சமூகத் துரோகி, ஏழைகளின் நெஞ்சைப் பிழிந்தெடுத்தவர் என்று பழித்துக் கூறியதோடு நில்லாமல், அவரிடமே இடித்துக்காட்டியும் இருக்கிறான். அவருடைய வியாபார தந்திரங்களும், முறைகளும் அவனுள் வெறுப்பைத்தான் வளர்த்திருக்கின்றன. இரக்கம் பச்சாத்தாபம் முதலான உணர்ச்சிகள் இல்லாதவன் மனித ஜாதியே இல்லை என்று நினைக்கிற ரவி, கோதண்டராமனை மனித உருவில் இருக்கிற நடமாடும் அரக்கன் என்றே கருதியிருக்கிறான்.

இவ்வளவெல்லாம் அவன் தந்தையின் மீது வெறுப்புக் கொண்டிருந்தாலும் அவனையும் மீறி அவர் மீது ஒருவித இரக்கம் எழத்தான் எழுந்தது. அவர் தகப்பனார் என்ற உறவின் அடிப்படையில், பாசத்தின் மலராக அந்த இரக்கம் தோன்றவில்லை. அவருடன் அவன் குழந்தைப் பருவத்திலிருந்து பழகிய பழக்கமே, இரக்கத்துக்குக் காரணமாக இருந்தது. ஒரு நண்பனின் அறிவீனத்துக்காகப் பரிதாபப்படுவதுபோல் தான் அவனும் தந்தையின் பேராசைக்குக் காரணமான அறியாமையைக்கண்டு பரிதாபம் கொண்டான்.


இப்போது அந்தத் தந்தை பிணமாக அவன் காலடியில் கிடந்த போது, வாழ்நாள் முழுவதும் அறியாமையிலேயே உழன்று உழன்று விவேகம் பெறாமல், நல்லவர் என்ற பெயரெடுக்காமலேயே உயிர் நீத்தாரே என்ற வேதனைதான் தலைதூக்கி நின்றது. தன்னுடைய வேதனை மனத்தினுள் புதைக்கப்பட வேண்டியதொன்று என்று எண்ணிய அவன், சலனமற்ற முகத்தோடு ஆக வேண்டிய லௌகிக காரியங்களில் ஈடுபடலானான். ராஜா கோதண்டராமனின் சடலத்தின் மீது விழுந்து அழுத போது, அவனுக்கு அச்செயல் வேடிக்கையாகக்கூட இருந்தது. உண்மையில் தகப்பனாரின் மரணத்தால் ராஜாவுக்குத்தான் ஈடுசெய்ய முடியாத நஷ்டமோ என்று ரவி தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

ரவி ஏற்கனவே அகிலாவிடம் சொல்லி வைத்தபடி சந்தானம் 'பாக்கிய நிலைய'த்துக்கு வந்திருந்தாலும் முழுப் பொறுப்பையும் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. டைபாய்டு ஜுரம் காரணமாக, சமீபத்தில்தான் அவன் பல வாரங்கள் கம்பெனிக்குப் போகாமலேயே இருந்திருந்தான். இனியும் 'லீவ்' எடுப்பது முடியாத காரியமாகப் பட்டது.... கோதண்டராமனின் இறுதி யாத்திரை முடிந்ததும், தான் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் வந்து போவதாகச் சொன்னான். ரவிக்கும் அது சரியாகப்பட்டது. என்னதான் கொஞ்ச நாட்களாக, அவனுக்கு ராஜாவின் போக்கில் இருந்த மாறுதலைக் கண்டு பிடிக்க முடியாமலிருந்தாலும், அவனை உடனேயே அனுப்பிவிட மனம் இடம் கொடுக்கவில்லை. மூன்று வருடங்களாக ராஜா ஒருவன்தான் கம்பெனிக் காரியங்கள் முழுவதையும் அறிந்து வைத்திருக்கிறான். மேலும், சொன்ன காரியங்களைச் செய்து முடிப்பதில் (அதனால் ராஜா பொய்க் கணக்கு எழுதிச் சில்லறை சில்லறையாகச் சம்பாதித்தாலும்) சமர்த்தன் அவன். கம்பெனியை ஒரு வழியாய் மூடி, வரவேண்டிய வரவுகளை வாங்கி, கொடுக்க வேண்டிய பாக்கிகளைக் கொடுத்து, சிப்பந்திகளையும் அனுப்பும் வரையில் (இதற்கு மூன்று மாதங்களாவது ஆகாதா ?) ரவி ராஜாவை வைத்துக் கொள்ள வேண்டியதுதான். ராஜா இருக்கும் போது சந்தானம் அநாவசியமாகத் தன் வேலையையும் விட்டு விட்டுக் கஷ்டப்படுவானேன் ?

ஆக, சந்தானத்துக்கு விடுதலை கிடைத்தது.

(தொடரும்)

'மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள். அங்கே ஆகா வென்றெழுந்தது பார் யுகப்புரட்சி' என்று மகாகவி பாரதி போற்றிய நிகழ்ச்சிதான். அதற்குப் பின் எப்படியெல்லாம் உரு வெடுத்து விட்டது? ❁



புரட்சியின் பொன்னாண்டு

பி. ஸ்ப்ராட்

இம்மாதம் ஏழாந் தேதியன்று ருஷ்யப் புரட்சியின் பொன் விழா கொண்டாடப்படுகிறது. கொடுங்கோலனான ஸார் மன்னனின் ஆட்சியை ருஷிய மக்கள் கவிழ்த்துக் குடியரசு ஸ்தாபித்த தினத்துக்கே இது பொன் விழா என்று பொதுவில் கருதப்படுகிறது. உண்மை அதுவல்ல. ஸார் மன்னனின் ஆட்சி 1917 மார்ச்சிலேயே முடிக்கப்பட்டது. அப்போது கெரென்ஸ்கியின் தலைமையில் ஏற்பட்ட தாற்காலிக அரசாங்கத்தை, போல்ஷெவிக் எனப்படும் கம்யூனிஸ்ட் கட்சியினர் அவ்வாண்டு நவம்பரில் கவிழ்த்தனர். இதற்கே இப்போது பொன்னாண்டு கொண்டாடப்படுகிறது.

லெனின் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சி செய்து 1917 நவம்பர் ஏழாந் தேதி கெரென்ஸ்கி அரசாங்கத்தைத் தலை சாயச் செய்து, அப்போது பெட்ரோ கிராட் என்று பெயர் பெற்றிருந்த ருஷியத் தலை நகரையும் தன்வசமாக்கிக் கொண்டது. (கம்யூனிஸ்ட் ஆதிபத்தியத்தில் பெட்ரோ கிராட் நகரம் லெனின் கிராட் என்று புதுப் பெயர் பெற்றது.) சிறிது காலத்துக்குள்ளேயே மாஸ்கோவும் மற்ற பல நகரங்களும் கம்யூனிஸ்ட் ஆளுகைக்குள் வந்தன. இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான நிகழ்ச்சி இப்புரட்சியே என்று பலர் கருதுகிறார்கள். உலகத்தை நல்ல முறையிலும் தீய முறையிலும் மிகவும் பாதித்துள்ள ஒரு நிகழ்ச்சி இது.

இப்புரட்சிக்கு எட்டு மாதங்களுக்கு முன்பு 1917 மார்ச் மாதத்தில் மக்கள் தாமாகவே இயல்பாகக் கிளர்ந்தெழுந்து ருஷியச் சக்கரவர்த்தி ஸாரின் ஆட்சியைத் தகர்த்தனர். ஸார் பலவீனமானவர். திறமையற்றவர். 1914லிருந்து 1917 வரை ஜெர்மனியுடன் நடைபெற்ற போரில் அவரது ராணுவம் படுமோசமான தோல்வி அடைந்திருந்தது. துருப்புக்களின் தோல்வியும், உணவுத் தட்டுப்பாடும், விலைவாசி உயர்வும் மக்களைப் புரட்சிக்குத் தூண்டியது. ஸார் ஆட்சி விழுந்ததும், டூமா என்கிற பார்லிமென்டில் அங்கம் வகித்த லிபரல் கட்சியும் மித சோஷலிஸ்ட் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஓர் அரசாங்கத்தை உருவாக்கின. தான் ஒரு தாற்காலிக அரசாங்கமே என்றும், புதிய அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்கத் தேர்தல்கள் நடத்தப் போவதாகவும் இந்தச் சர்க்கார் வாக்களித்தது. என்றாலும் இந்த அரசாங்கத்தின் தலைவர்கள் அநுபவம் படைத்திராதிருந்ததால் விரைவிலேயே மக்களின் ஆதரவை இழந்தனர். குறிப்பாக, அவர்கள் ஜெர்மனிச் சண்டையை நீடிக்க முயன்று புதுத் தோல்விகள் அடைந்ததால் மக்களின் ஆதரவை இழந்தனர். ஜெர்மனி அரசாங்கத்திடமிருந்து ரகசியமாகப் பண உதவி பெற்று வளர்ந்து வந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு இச்சமயத்தில் தாற்காலிக அரசாங்கத்தைக் கவிழ்ப்பது எளிதாக இருந்தது.

அதிகாரத்துக்கு வந்த கம்யூனிஸ்ட்களும் தாங்கள் புதிய அரசியல் நிர்ணயச் சபைக்காகத் தேர்தல் நடத்தப் போவதாகக் கூறினர். 1917 டிசம்பரில் தேர்தல் நடக்கவும் அநுமதித்தனர். ஆனால் இத்தேர்தலில் அவர்களுக்கு இருபத்தைந்து சதவிகித வாக்குகளே கிடைத்தன. ஆயினும் அவர்கள் ஆட்சியதிகாரத்தைவிட மனம் கொள்ளவில்லை. மற்ற சோஷலிஸ்ட் கட்சிகளுடன் ஆட்சிப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ளவும் அவர்கள்

மேலே: ருஷிய அரசின் தலைமை பீடம் க்ரெம்லின்.

விரும்பவில்லை. இந்த மற்ற சோஷலிஸ்ட் கட்சிகள் யாவுமாகச் சேர்ந்து அறுபத்தைந்து சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (மென்ஷெவிக் என்ற சோஷலிஸ்ட்கள் பத்துச் சதமும், சோஷலிஸப் புரட்சியாளர் ஐம்பத்தைந்து சதமும் வாக்குப் பெற்றிருந்தனர்.) புதிய அரசியல் நிர்ணய சபையில் போதிய ஸ்தானம் பெறாமல், மற்றக் கட்சிகளுடன் கூடிப் பணியாற்றவும் விரும்பாமல் இருந்த கம்யூனிஸ்ட்கள் அந்தச் சபையையே கலைத்து விட்டனர்!

அதோடு ஓர் உள்நாட்டுப் போர் தொடங்கிற்று. இது மூன்றாண்டுக் காலம் நடைபெற்றது. மற்றக் கட்சிகளுக்கிருந்த பெரிய குறைபாடு அவை தங்களுக்குள் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டிருந்ததே யாகும். திறமையான தலைவர்களில்லாமையும் ஒரு குறை. இச்சமயத்தில் ருஷிய காலனிப் பகுதிகளிலிருந்த மக்களின் ஆதரவைப் பெறுமுகமாகப் புதிய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு காரியம்



லெனின்

செய்தது. அதாவது அக்காலனிகள் சுதந்திரப் பிரகடனம் செய்ய அநுமதித்தது. உள்நாட்டுப் போர் கம்யூனிஸ்ட்களுக்குச் சாதகமாகவே முடிந்தது. போர் முடிந்ததுதான் தாமதம், கம்யூனிஸ்ட் சர்க்கார் முன்பு தானே சுதந்திர வாழ்வு அநுமதித்த காலனிகளின்மீது படையெடுத்தது. ருஷியாவின் தென் பகுதியில் உள்ள பெரிய முஸ்லிம் காலனிகளை வென்று தன்னாட்சியின்கீழ் கொண்டு வந்தது. ஆனால் மேற்கிலிருந்த காலனிகள் ஐரோப்பாவின் உதவியைப் பெற்றுத் தமது சுதந்திரத்தைக் காத்துக் கொண்டன.

மொத்தத்தில், உலகிலேயே மிகப் பெரிய நாடு கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ருஷிய சாம்ராஜ்யத்தின் பரப்பளவு எண்பத்தைந்து லட்சம் சதுர மைல்களாகும். கச்சாப் பொருட்கள் பெருமளவில் கிடைக்கும் பகுதி இது. கம்யூனிஸ்ட் ஆட்சித் தொடக்கத்தில் அதன் மக்கட் தொகை பதினைந்து கோடி. (இப்போது இருபத்திரண்டு கோடி.) அப்போது அது ஐரோப்பாவைவிடப் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது. எனினும், ஜப்பான் தவிர மற்ற ஆசிய நாடுகளைவிட முன்னேற்றம் கண்டிருந்தது. கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டவுடனே ஆட்சியாளர்கள் பொருளாதாரம் முழுவதையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். உலகிலேயே தலைசிறந்த முற்போக்கு நாடாக ருஷியாவை மாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு வேறு பல மாறுதல்களும் செய்தனர்.

சோஷலிஸத்தின் குறிக்கோள்களில் ஒன்று சமத்துவம். இதை வெகுவாக அமுல்படுத்தினர். அமுல்படுத்தினர் என்பதைவிட அமுக்கி நெரித்தனர் என்பது பொருந்தும். இதனால் முன்பு சலுகை பெற்றிருந்த வகுப்பினர் அச்சலுகைகளை இழந்ததோடு மட்டுமின்றி, ஏனையோருக்குரிய உரிமைகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. அவர்கள் கல்வியோ, வேலையோ பெற முடியாமல் போயிற்று.

சமத்துவப் பிரசாரத்தில் முக்கியமான அம்சம், வெற்றி வாய்ப்பளிக்கும் அம்சம், பெண்கள் விடுதலை. இன்று வேறெந்த நாட்டையும்விட ருஷியாவிலேயே நடைமுறையில் பெண்கள் ஆண்களுக்கு மிகவும் சமமாயுள்ளனர். அதாவது, அநேகமாக எல்லாப் பெண்களுமே உழைத்துச் சம்பாதிக்கின்றனர்!

புரட்சிக்கு முன்பு ருஷியாவில் பெரும் எழுத்தாளர்களும் விஞ்ஞானிகளும் இருந்தது உண்மை. ஆனால் முக்கால்வாசி மக்கள் எழுத்தறிவு பெறவில்லை. கம்யூனிஸ்ட் ஆட்சியினர் பதினைந்தே ஆண்டுகளில் ஜனத்தொகை முழுவதையும் படிப்பாளியாக்கினர். உயர்தரப் படிப்பையும் வெகுவாக விஸ்தரித்தனர். ஸயன்ஸும், தொழிற் கல்வியும் முன்னேற எவ்வளவோ செய்துள்ளனர். இன்று ஸயன்ஸில் மிகவும் முன்னணியில் உள்ள நாடுகளில் ருஷியாவும் ஒன்று.

வைத்திய சேவையிலும் சிறப்பாக நிற்பது ருஷியா. பொருளாதாரம் முன்னேற முன்னேற, சமூக நலப்பணிகள், பென்ஷன், பிரசவ கால உதவி முதலியவற்றை அரசாங்கம் விஸ்தரித்துள்ளது. சங்கீதம், சினிமா, நாடகம், விளையாட்டு முதலியவற்றுக்குச் சக்தி வாய்ந்த முறையில் சர்க்காரின் ஆதரவு தரப்படுகிறது.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக மிகுந்த பிரயாசை செய்யப்பட்டுள்ளது. ருஷிய ஆட்சி ஏற்பட்டு முதல் பத்தாண்டுகளில் இத்திசையில் எதுவும் செய்யப்படாவிடினும், 1928லிருந்து 'திட்டங்கள்' தொடங்கின. அதற்குப்பின் இன்றளவும் திட்டங்கள் தொடர்ந்துள்ளன. திட்டங்களின் மிக முக்கியமான இலட்சியம் நிலக்கரி, உருக்கிரும்பு, இயந்திர உற்பத்தி, மின்சாரம், பெட்ரோல் முதலிய கனரகத் தொழில்களை விஸ்தரிப்பதே. இந்த இலட்சியத்தில் வெகு வெற்றிகரமாக முன்னேறியுள்ளது ருஷியா. இன்று உலகிலேயே இரண்டாவது பெரும்

தொழில் நாடாக உள்ளது அந்நாடு. ஆண்டுக்குப் பத்து கோடி டன் உருக்கிரும்புக்கு அதிகமாக உற்பத்தி செய்கிறது. ஆனால் மக்கள் தினசரி வாழ்வில் பயன் செய்து கொள்ளும் துணிகள், மரச் சாமான்கள், வீட்டு வசதி, போக்குவரத்து இவை இரண்டாம் பட்சமாகவே கருதப்படுவதால், இவற்றில் போதிய முன்னேற்றமில்லை. இந்தத் திட்டங்களுக்கு ஏராளமான முதலீடு தேவைப்படுகிறது. மக்கள் பயனுக்கிக் கொள்ளும் பொருட்களைக் குறைத்து, அதன் மூலமே திட்ட அம்சங்களுக்குப் பணம் திரட்டப்படுகிறது. திட்டங்களுக்காக மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏறக்குறைய சரிபாதி மட்டத்துக்குக் குறைத்தனர். 1914ல் மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த நிலையில் இருந்ததோ அதற்கும் கீழே இருந்தது 1950ல் அவர்களின் தரம். ஆனால் 1950க்குப் பிற்பாடு சிறுகச் சிறுக உயர்ந்திருக்கிறது.

1930ல் எல்லா விவசாயப் பண்ணைகளையும் ஒன்று சேர்த்துப் பெரிய கூட்டுறவுப் பண்ணைகளைச் சர்க்கார் அமைத்தது. இதை விவசாயிகள் எதிர்த்தனர். அவர்களில் லட்சக்கணக்கானவர் நாடு கடத்தப்பட்டனர்; அல்லது கொல்லப்பட்டனர். முடிவில் மற்றவர்களும் அரசாங்கத்துக்கு அடிபணிந்தனர். கூட்டுறவுப் பண்ணைகள் ஒரு நாளும் நல்ல முறையில் நடக்கவில்லை. இன்றும் அங்கு உற்பத்தி குறைவாகவே உள்ளது. உணவு விநியோக நிலை திருப்திகரமாக இல்லை.

சமீப காலமாக, சர்க்கார் விரும்பியபடி உற்பத்திச் சரக்குகள் பெருகிவிட்டபடியால், இனி மக்கள் விரும்பும் பண்டங்களையும் உற்பத்தி செய்யலாம் என கம்யூனிஸ்ட்கள் முயற்சி எடுத்துள்ளனர். என்றாலும் தேசத்துக்கு மையமாக ஓரிடத்தில் திட்டம் போட்டு மக்களின் தேவைகளுக்கேற்பப் பொருள் தயாரிக்கப் பார்ப்பது நடைமுறையில் வெற்றிகரமாக இல்லை. எனவே, தனித்தனி ஆலைகள், கடைகளின் நிர்வாகிகளே எந்தப் பொருள்களை உற்பத்தி செய்யலாமென்றும், அவற்றுக்கு என்ன விலை வைக்கலாம் என்றும் முடிவு செய்வதற்கு இப்போது ஓரளவு சுதந்திரம் அனுமதிக்கப்படுகிறது. இது 'மார்க்கெட் சோஷலிஸம்' எனப்படுகிறது.

முதலில் கம்யூனிஸ்ட் ஆட்சியினால் பொருளாதார சமத்துவம் ஏற்படுத்த முடியும் என்று நம்பப்பட்டது. இதன்படி, தொழில்களிலும் சரி, அரசியல் நிர்வாகத்திலும் சரி ஏறக்குறைய அனைவருக்கும் சமமான சம்பள விகிதங்களை வழங்க முயற்சி எடுத்தனர். ஆனால் விரைவிலேயே இம்முயற்சி தோல்வி கண்டது. சமத்துவக் கொள்கை என்பதையே ஸ்டாலின் கண்டிக்கும் அளவுக்குச் சில ஆண்டுகளில் நிலைமை முற்றியது. அந்தஸ்தைப் பொறுத்தும், ஒவ்வொருவர் செய்யும் வேலையின் விளைவைப் பொறுத்துமே இன்று பலதரப்பட்ட ஊதிய விகிதங்கள் அளிக்கப்படுகின்றன. சிறப்பாக உழைப்பதற்குத் தூண்டுதல்கள் அளிக்கப்படுகின்றன. இப்போது ருஷியாவில் சம்பள விகிதங்களில் பெருத்த ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பழைய பணக்கார ஆட்சி வர்க்கத்தினரின் இடத்தில் இப்போது ஒரு 'புதிய வர்க்கம்' எழுந்துள்ளது. (கம்யூனிஸத்தை நீத்த மிலோவன் ட்ஜிலாஸ் 'புதிய வர்க்கம்' என்றே ஒரு நூல் எழுதியுள்ளார்.)

சமூக, பொருளாதார சீர்திருத்தங்களில் கம்யூனிஸ்ட்கள் வெற்றிகளும் கண்டுள்ளனர்; தோல்விகளும் கண்டுள்ளனர். இத்துறையில் அவர்கள் செய்துள்ள நற்பணிகள் எவை உண்டோ, அவை மற்ற நாடுகளுக்கும் ஓர் உதாரணமாக விளங்கி, அவையும் சமூகநல சேவை மேற்கொள்ளவும், சமத்துவத்துக்கு முயலவும் தூண்டியுள்ளன.

ஆனால் அரசியல் என்று எடுத்துக் கொண்டால், கம்யூனிஸ்ட் முறை முன்னேற்றத்தைக் காட்டவேயில்லை. அது கன வேகமாகப் பின்னோக்கிச் செல்லுவதாகவே உள்ளது. ஜனநாயகத்தை அனுமதிக்கும் உத்தேசமே லெனினுக்கு இருந்ததில்லை. அரசியல் நிர்ணய சபையை நிர்மூலமாக்கிய கையோடு அவர் 'கேடட்' எனப்படும் அரசியல் சாஸன ஜனநாயகக் கட்சியின் தலைவர்களுக்கு மரண தண்டனை விதித்தார். அப்போதைக்கு மற்ற சோஷலிஸ்ட் கட்சிகளை விட்டு வைத்திருந்தாலும், பிற்பாடு அக்கட்சிகளின் தலைவர்களும் கொல்லப்பட்டனர். 1924ல் லெனின் மரணமடைந்தபின் பதவிக்கு வந்த ஸ்டாலினின் கீழ் அரசாங்கத்தின் கொடுமை மேலும் உக்கிரமாயிற்று. ஆளுகிற தனது கட்சியையே அவர் மிகவும் கொடுமைப்படுத்தி, தன்னிடமிருந்து மாறுபடும் தனது கட்சியாளர் அனைவருக்கும்கூட மரண தண்டனை விதித்தார். சட்டம் புறக்கணிக்கப்பட்டது; இரகசிய போலீஸ் தன் இச்சைப்படி ஆளத் தொடங்கியது. அரசியலும் பொருளாதாரமும் மட்டுமின்றி மக்கள் பண்பாட்டின் சகல அம்சங்களும்கூட சர்க்கார் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. விஞ்ஞானிகள் எந்தவிதமான கண்டுபிடிப்புகளைச் செய்யலாம் என்பதைக்கூடச் சர்க்காரே நிர்ணயிக்க முற்பட்டது. இது குறித்துப் பெரும் சர்ச்சை நடைபெற்றது. பல தலைமை விஞ்ஞானிகள் உயிரிழந்தனர். கடைசியில் அரசாங்கத்தின் முயற்சி கைவிடப்பட்டது. என்றாலும், இன்றுகூடச் சரித்திரம் எப்படி எழுத வேண்டும், தத்துவ ஆராய்ச்சி எப்படி நடக்க வேண்டும், சமூகநல சாத்திரங்கள் எப்படி உருவாக வேண்டும், இலக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்ப




ஸ்டாலின்

தெல்லாம் சர்க்காரின் கெடுபிடியிலேயே உள்ளன. இத்துறைகளில் சர்க்கார் வருக்க கொள்கைகளிலிருந்து விலகிச் செல்வதற்கு அநுமதி தரப்படுவதில்லை. பல்லாண்டுகளாக மதத்தை அழித்துவிட அரசாங்கம் முயன்று வந்திருக்கிறது; ஆயிரமாயிரம் பூஜாரிகளையும், ஆஸ்திகர்களையும் கொன்று குவித்திருக்கிறது; என்றாலும் இத்துறையில் அது முழு வெற்றி காண முடியத்தான் இல்லை.

பிரஜையின் அன்றாட வாழ்வு முழுவதையும் ருஷிய அரசாங்கம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. தனது நாட்டுக்குள் பிரயாணம் செய்வதற்கே அவன் பாஸ்போர்ட் வைத்திருக்க வேண்டும். வெளி நாட்டுக்குத் தப்பியோட முயன்றால் அதற்குத் தண்டனை மரணம். லெனினின் சகவாயிருந்த ட்ராட்ஸ்கி உள்படத் தப்பியோடுபவர்கள் துரத்தியடிக்கப்பட்டுக் கொலையுண்டிருக்கின்றனர். பெற்றோருக்கு எதிராகக் குழந்தைகளைத் தகவல் தரும்படி ஸ்டாலின் ஆட்சியில் தூண்டுதல் தரப்பட்டது. அரசாங்கத்தை ஆட்சேபிப்பவனது குடும்பம் முழுவதையும் ருஷியாவில் தண்டிக்கலாம். நீண்ட காலம் அந்நாட்டில் பலரிடமிருந்து கட்டாயத்தின் பேரில் மிகக் கடினமான உடலுழைப்பு பெறப்பட்டது. உழைப்புப் பாசறைகள் எனப்படும் கூடங்களில் லட்சோப லட்சம் மக்கள் பாடுபட்டனர்; இவற்றிலேயே லட்சக்கணக்கானவர் செத்து மடிந்ததும் உண்டு. அரசியல் எதிரிகளையும், கம்யூனிஸ்ட்களிலேயே மாறுபடுகிறவர்களையும், பூஜாரிகளையும், முன்பு சலுகை வர்க்கத்தினராயிருந்தவர்களையும், விவசாயத்தில் வெற்றி கண்ட பண்ணை முதலாளிகளான 'குலக்'களையும் மரண தண்டனை விதித்தோ, கட்டாய உடலுழைப்பின் மூலமோ கொன்று விடும் கொள்கையை ருஷிய சர்க்கார் பின்பற்றி வந்தது. இவ்வாறு உயிரிழந்தவர்கள் கோடிக்கணக்கில் இருப்பார்கள். சரித்திரத்திலேயே பரிபூரணமான கொடுங்கோல் சர்வாதிகாரம் என்பது ஸ்டாலின் கீழிருந்த கம்யூனிஸ சர்க்கார்தான். 1953ல் அவர் காலமடைந்ததிலிருந்து இந்நிலை பலவிதங்களில் மாறியுள்ளது எனினும், இன்றும்கூட சீனம் நீங்கலாக உலகிலேயே துளிக்கூட இளக்கமற்ற ஓர் அரசாங்கம் உண்டு எனில் அது ருஷிய சர்க்கார்தான்.

இம்முறையை மற்ற நாடுகளுக்கு விஸ்தரிக்கக் கம்யூனிஸ்ட்கள் முயலுகின்றனர். இந்த நோக்கத்துடனேயே 1919-ல் சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தை லெனின் நிறுவினார். அது வெற்றி பெறவில்லை. ஆனால் அதன் பிரசாரம் வெகுவான கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஜெர்மனியை வெற்றி கொள்ளக் கம்யூனிஸ்ட்கள் மிகவும் பிரயத்தனம் செய்தனர். இதன் விளைவாகவே கம்யூனிஸத்தை எதிர்க்கும் நாஜிப் புரட்சி ஏற்பட்டது. ஆனால் இதுவும் பலவிதங்களிலும் கம்யூனிஸ முறைகளையே பின்பற்றியது. இதன் முடிவே இரண்டாவது உலக யுத்தம். இந்த யுத்தத்துக்குப் பிற்பாடு ருஷியா, ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமாகப் பத்து நாடுகளைப் பிடித்துக் கொண்டு, அவற்றில் கம்யூனிஸ்ட் அரசாங்கங்களை அமைத்துள்ளது. போலந்து, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா, கிழக்கு ஜெர்மனி, வடகொரியா ஆகியனவே இந் நாடுகள். இதைத் தவிர யுகோஸ்லாவியா, அல்பேனியா, சீனம், வட வியட்நாம், க்யூபா ஆகிய ஐந்து நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியே சர்க்கார் அமைத்துள்ளது. கம்யூனிஸ்ட் நாடுகள் அனைத்துமாகச் சேர்ந்து உலகில் மூன்றில் ஒரு பங்காகும். இது மற்றப் பகுதிகளிலும் பரவுவதற்கு அச்சுறுத்துகிறது. இதை எதிர்த்து நடக்கும் மோதலே 'பனிப் போர்' எனப்படுகிறது. கடந்த இருபதாண்டுகளில் அரசியல் கொந்தளிப்புக்கு ஒரு பெருங் காரணமாயிருந்து வருவது இப்பனிப் போரே.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நடந்த புரட்சி உண்மையில் உலகினை ஆட்டிவைத்த நிகழ்ச்சிதான். மனித சமுதாய வாழ்வு முழுவதன் மீதுமே அது மாறுதல் விளைவித்துத்தான் உள்ளது. அது போதிக்கும் பாடங்கள் பல. இவற்றில் சில நாம் செய்யக்கூடிய பயனுள்ள காரியங்களைப் போதிக்கின்றன. ஆனால் மீதமுள்ள பெரும்பான்மையான பாடங்களோ நாம் என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதற்கே படிப்பினையாக உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியல் சுதந்திரங்களையும் பிரஜா உரிமைகளையும் விட்டுக் கொடுப்பதன் அபாயத்தை இப்புரட்சி நமக்கு எச்சரிக்கிறது. இவ்வுரிமைகளைத் தியாகம் செய்வதற்குப் பிரதியாக எவ்வளவோ லாபம் கிடைக்கலாம்; ஆயினும் உரிமை பறிப்பினால் ஏற்படும் ஆபத்து லாபத்தைவிடப் பெரியது என்பதை ருஷியப் புரட்சி உணர்த்துகிறது.



யாவரும் கேளிர்...!

கல்யாண சுந்தரி ஜகந்நாத்

''ரெண்டு இட்டிலி சாம்பார்''.

''பொங்கல் வடை சட்னி.''

''ஒரு ஸ்பெஷல் சாதா.''

''மூணு காப்பி.''

''சர்வர்! தண்ணி கொடுத்துத் தொலையப்பா!''

பல குரல்கள் பல்வேறு ஸ்தாயிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. ரேடியோ, ''மியாவ் மியாவ் பூனைக்குட்டி'' என்று ராட்சஸக் குரலில் அலறிக் கொண்டிருந்தது.

அவன் பின்னால் அந்தப் பெண் அடிமேல் அடி வைத்து நிதானமாக நாணத்தோடு ஹோட்டலுக்குள் நுழைந்தாள் — சேலைத் தலைப்பால் தோளையும் உடலையும் இழுத்து மூடி அதன் முனையைக் கையால் பற்றியபடி.

இலைப் பச்சைக் கைத்தறிச் சேலை கட்டி, ரோஜாப் பூ அச்சிட்ட சிவப்பு நிற ஜாக்கெட் அணிந்து வெட்ட வெளியில் தென்றலில் பறக்கும் பட்சியெனக் காட்சி தந்தாள் அவள்.

அவனது ஒரு கையில் துணிப் பை. அது நிறைய வேர்க்கடலை. நீல நிறச் சட்டை போட்டு வெள்ளை வேட்டி கட்டியிருந்தான். தோளில் ஒரு துண்டு. சீவாமல் இருந்த அவன் தலைமயிரில் ஒரு சிறு வைக்கோல் துண்டு தலை நீட்டிக் கொண்டிருந்தது. மற்றொரு கையில் பழைய காலத்துச் சிறிய டிரங்குப் பெட்டி.

ஹோட்டலில் ஜே ஜே என்று கூட்டம். ஒரு மேஜையாவது காலியில்லை. அவன் சுற்றுமுற்றும் ஒரு முறை பார்வையை ஓட்டினான்; பின்னால் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்த அவளது கையைப் பிடித்துக் கொண்டு நடக்கலானான். மேஜைகளின் இடைவெளி வழியாகப் புகுந்து புகுந்து உள்ளே சென்றான். எங்கேயும் இடம் காணப்படவில்லை. ஒரு மூலையை நாடிச் சென்றான். அந்தப் பெண் குனிந்த தலை நிமிராமல் ஒரு கையால் அவனையும் இன்னொரு கையால் சேலைத் தலைப்பையும் பற்றிக் கொண்டு அவன் பின் நடந்தாள்.

அப்பாடி! அந்த மேஜை காலி! இரண்டு நாற்காலிகள் எதிரும் புதிருமாக. மூன்றாவது நாற்காலியில் ஏதோ காகிதக் கட்டுகளும், ஒரு மேல் துண்டும் இருந்தன. அதன் எதிரே இருந்த நாற்காலியில் வயதான ஒரு மனிதர் தலை குனிந்தபடி சில காகிதங்களைக் கண்ணுக்கருகே வைத்துப் பார்ப்பதும் பிறகு அவைகளை மடித்து வைப்பதுமாக இருந்தார்.

அந்த வாலிபன் பெட்டியைக் கால் அருகில் வைத்துக் கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தான். பக்கத்திலிருந்த நாற்காலியில் அவளை

உட்காரச் சொன்னான். அந்தப் பெண் மிரண்டவள் போல் அங்கும் இங்கும் பார்த்து விட்டு, ''சுத்தியும் இத்தனை ஆம்பளைங்க இருக்காங்களே மச்சான். இவுங்க எதிரே ஒரு பொம்பளை நான் நாற்காலியிலே எப்படி உக்கார்றது?'' என்றாள்.

''சேச்சே! இந்தப் பட்டிக்காட்டுத்தனத்தை விட்டிடணும் புள்ளே! அங்கே பாரு. எத்தினி பொம்பளைங்க ஜம்முனு உக்கார்ந்திருக்காங்க!'' என்றான்.

அவன் எதிரே இருந்த மேஜையை ஒட்டி நாற்காலிகளில் இரட்டைப் பின்னல் போட்ட பெண்மணிகள் தங்கள் பர்ஸ்களை மடிமீது வைத்துக் கொண்டு, சிறிதும் அச்சம், நாணமின்றிச் சிரித்துப் பேசியவாறே ஸ்பூன்களால் உப்புமா, இட்டிலி போன்ற பலகாரங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த அந்தப் பெண் நிதானமாக நாற்காலி முனையைப் பிடித்து அதி ஜாக்கிரதையாக அதன் மீது அமர்ந்து முன்னுக்குச் சாய்ந்து கொண்டாள்.

சர்வர் பலகாரப் பெயர்கள் கொண்ட அட்டை ஒன்றை அவர்கள் முன் கொண்டு வந்து வைத்தான். ''எனக்குப் படிக்கத் தெரியாது. என்ன என்ன இருக்குதுன்னு நீங்களே சொல்லுங்க'' என்றான் அந்த இளைஞன் இலேசாகச் சிரித்தபடி.

''இட்லி, வடை, போண்டா, ஊத்தப்பம், உப்புமா, கிச்சடி, பொங்கல், பகாளாபாத், ஆனியன் ரவா, வெஜிடபிள் ஆம்லெட்.'' கடகடவென்று ஒப்புவித்தான் சர்வர்.

இத்தனையும் காதில் வாங்கிக் கொண்ட பின்னர், ''தோசை இருக்குதா?'' என்று கேட்டான் அவன். சர்வர் தலையசைத்து, ''இரண்டா?'' என்றான். ''மூணு கொண்டு வா இவனுக்கு'' என்றான் அவன். சரேலென்று மறைந்தான் சர்வர். தொலைவில் ''சாதா மூணு'' என்ற அவன் குரல் உரக்கக் கேட்டது.

''ஒரு தோசை என்ன விலை மச்சான்?'' என்றாள் அவள்.

''கால் ரூபா.''

''ரூபாயிக்கு நாலு தோசைதானு? இன்னு அக்குரமம்!'' என்று வியந்தாள் அவள்.

''பட்டண மாசத்துலே விலை எல்லாம் கூடுதலாத்தான் இருக்கும், புள்ளே!'' என்றான் அவன்.

''மச்சான், நீ ரெண்டுதோசை துன்னு.''

''எனக்கு வேணும். நீ துன்னு. உனக்குத்தான் தோசைன்னு ரொம்பப் பிடிக்குமே! அத்தை உனக்குத் தினம் தினமா சுட்டுத் தந்திருக்கா? எப்பனுச்சம்தானே உன் அத்தை உனக்குத் தோசை சுட்டுத் தருவா.''

''இருந்தா என்ன மச்சான்? நான் ஓர் அநாதைதானே? இத்தினி நாளு எப்படியோ என்னை வளர்த்துக் கட்டிக் கொடுத்தாங்களே. அதுவே பெரிசில்லையா?'' என்றாள் கொஞ்சம் நாணியபடி.

''அது சரி... ஆனு தன் சொந்த மகளா இருந்தா தீவிளிக்கு முந்திப் புருசன் வீட்டுக்கு அனுப்பியிருப்பாளா?''

''அவுங்க என்ன செய்வாங்க, பாவம்! அவுங்க மக குளிகுளிக்க இருக்குது. ஊருக்கு அவுங்க போக வேணுமா? அதுவுமில்லாமெ இன்னும் எத்தினி நாள்தான் அவங்களாலே என்னைப் பாத்துக்க முடியும்?''

''அவுங்க பாத்துக்கிறதா இருந்தாலும், நாம அவங்க பணத்துக்குக் கைநீட்டிக்கிட்டு இருப்போமா என்ன? இதுவரை அவுங்க உன்னைப் பாத்துக்கிட்டதுக்கு நன்னி இல்லாமெ போவலேன்னு வச்சுக்கோ. ஆனு இனிமேல் நம்ம ஒழைப்பு இருக்குது. இன்னொருத்தர் தர்மத்தை நாம ஏன் எதிர்பார்க்கணும்?''

''மெய்தான்!''

''இப்போ நம்முதுன்னு ஒரு வீடு இருக்குதில்லையா-என்னதான் கூரைக் கீத்தெல்லாம் பிய்ஞ்சு போயிருந்தாலும்?''

''இந்த வருஷம் கூரை மேய்ஞ்சிடுவோம் மச்சான். கொஞ்சம் சிக்கனமாக் குடித்தனம் செஞ்சால் போகுது.''

''தீவிளிப் பண்டிகைக்குத் தோசை சுடுவோம். எசமானைக் கேட்டு மூணு நாள் கூலி முன் பணமா வாங்கியாறேன், பண்டிகை கொண்டாட.''

''இப்படிப் பணத்தைக் கண்டபடி செலவழிச்சா எப்படி, மச்சான்? ஏதாவது நோய் நொடி வந்தா மருந்து மாயத்துக்குப் பணம் வேண்டாம்?''

''அட சரித்தான் உடு புள்ளே. மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமெ பூடுவானு? அரைப் படி அரிசி ஊறப் போட்டுத் தோசை சுடு. ஒரு ரூபாயிக்கு நான் மத்தாப்பு, பட்டாசு வாங்கியாறேன்.''

''அடெ, அதெல்லாம் எதுக்கு மச்சான்? நாம என்ன, கொழந்தைங்களா?''

''ஹி... ஹி... ஹி...சரி... நாம டபாசு சுடுவோமே!''

அந்தப் பெண் நமட்டுச் சிரிப்பும் நாணமும் குமிழியிட்டுத் தலைகுனிந்தாள். ஒரு கணம் கழித்து, ''ஆமாம், இன்னும் எவ்வளவு காசு இருக்குது மச்சான்?'' என்று கேட்டாள்.



தனது ஜேபியிலிருந்த கைக்குட்டையை எடுத்து முடிச்சை அவிழ்த்துப் பணத்தைக் கணக்கிட்டான் அவன்.

''பஸ் சார்ஜுக்கு ஒரு ரூபாய்!'' என்று கூறி, ஊர்ப் பயணத்துக்கான ரூபாயைக் கைக்குட்டையில் வைத்து முடிந்தான். பிறகு சில்லறையாக இருந்ததில் ஒரு ரூபாயைக் கணக்கிட்டு ஒதுக்கி, ''காப்பி பலகாரத்துக்கு மேலே ஒரு ரூபாய் இருக்கு'' என்றான்.

''அதோ இன்னொரு நாலணா சில்லறை இருக்குதே'' என்று எஞ்சியிருந்த சில்லறையைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

''அது உனக்குப் பூ வாங்க. போகும்போது வாங்கித் தாறேன்'' என்றான் அவன்.

வேண்டாம் என்று சொல்ல வாயெடுத்தவள், 'பூவேண்டாம்' என்று சொல்வது அச்சானியம் என்று வாளாவிருந்து விட்டாள்.

சர்வர் தோசைகளை வைத்து இரண்டு டம்ளரில் தண்ணீரையும் வைத்தான். ''இவளுக்கு ஸ்ட்ராங்கா ஒரு கப் காப்பி கொண்டு வா'' என்றான் இளைஞன்.

''எனக்குக் காப்பி வேண்டாம் மச்சான்!''

''இத பாரு, ஆம்பிளைப் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசக் கூடாது. தோசையைத் துண்ணுட்டுக் காப்பியைச் சாப்பிடு'' என்றவன் பையிலிருந்த வேர்க்கடலையைக் கொஞ்சம் எடுத்துத் தின்ன ஆரம்பித்தான்.

அந்தப் பெண் ஏதோ பெரும் தவறு செய்துவிட்டவள் போலத் தோசையைத் தின்ன ஆரம்பித்தாள். எதிரில் அமர்ந்திருந்த கிழவர் ஜேபியில் காகிதங்களை வைத்துக்கொண்டபடி தலை நிமிர்ந்து பார்த்தார். அவர் முகம் ஏதோ சோகத்தால் பாதிக்கப்பட்டதுபோல் இருந்தது. இளம் தம்பதியும் பரிவோடு அவர் முகத்தைப் பார்த்தனர்.

''உன் பேர் என்ன தம்பி?'' என்றார் கிழவர்.

''செல்வராஜுங்க. இவள் பெயர் வள்ளி.''

''அப்படியா? அருமையான பெயர்கள். என் மகள் பெயர் பாக்கியம். மாப்பிள்ளை பெயர் செல்வராஜ்'' என்றார் அவர் பெருமூச்செறிந்தபடி.

தோசை தின்றுகொண்டிருந்த வள்ளிக்குத் தொண்டையை அடைத்தது.

''இப்போ உங்க மகளும் மாப்பிள்ளையும் எங்கே இருக்காங்க?'' என்று ஆவலோடு கேட்டான் அவன்.

கிழவர் பெருமூச்சு விட்டார். ''அதெல்லாம் இப்பொழுது எதற்கு? இப்போது எனக்கு யாரும் இல்லை. அவ்வளவுதான்.''

சர்வர் காப்பி கொண்டு வந்து வைத்தான். கிழவர் குனிந்து எதிரில் நாற்காலியில் வைத்திருந்த மேல் துண்டை நிதானமாக எடுத்தார். குனியும்போது இலேசாக இருமினார். வள்ளி கணவன் பக்கமாகக் குனிந்து கண்களால் கிழவரைக் காட்டி ஏதோ ரகசியமாகச் சொன்னாள்.

''நாம் கொடுத்தால் சாப்பிடுவாரா?'' என்றான் செல்வராஜ், அவருக்குக் கேட்டும் கேட்காமலும்.

பிறகு எழுந்து நின்று கைகூப்பி, ''மன்னிக்கணுமுங்க. நீங்க பணக்காரங்க. நாங்க ஏழை. எங்களுக்கும் பெரியவங்க யாரும் இல்லை. இந்தக் காப்பியைத் தயவுசெய்து நீங்க சாப்பிடணும்'' என்று காப்பிக் கோப்பையைப் பணிவன்போடு கொடுத்தான்.

கிழவர் நிமிர்ந்து பார்த்தார். இளம் தம்பதியின் முகமோ அவரைக் காப்பி அருந்துமாறு பரிவோடு வேண்டுவது போலத் தோன்றியது. ''நீ சாப்பிடு தம்பி, நீ சாப்பிடம்மா'' என்றார் அவர். கணவனும் மனைவியும் இல்லாத சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ஒரே குரலாக, ''நாங்க பொறப்படும்போதே காப்பி சாப்பிட்டுட்டுத்தான் வந்தோம்'' என்றார்கள். ''இவளுக்குத் தோசைன்னு உசிரு. அதுக்காகத்தான் ஹோட்டலுக்கு இட்டாந்தேன்'' என்றான் செல்வராஜ்.

கிழவர் உவகையோடு காப்பி அருந்தினார். தம்பதிகள் மகிழ்ச்சியோடு அவர் காப்பி குடிப்பதைப் பார்த்தனர். சர்வர் பில் கொண்டு வந்து கொடுத்தான். கிழவர் அதையெல்லாம் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் புறப்பட்டதும், ''தம்பி! ஒரு சின்ன உதவி செய்வாயா?'' என்று கேட்டார்.

''என்ன சொல்லுங்க?'' என்றான் செல்வராஜ் புன்சிரிப்போடு.

''வேறே ஒன்றும் இல்லை!'' என்று ஆரம்பித்த கிழவர், ''நான் ஒரு லாட்டரி கம்பெனிக்கு டிக்கட் விற்கிறேன். பதினொரு டிக்கட் விற்றால் ஒரு டிக்கட் பணம் எனக்குக் கமிஷனாகக் கிடைக்கும். பத்துதான் விற்பனையாயிற்று. இன்னும் ஒரு டிக்கட் மிகுந்திருக்கிறது'' என்றார்.

கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். வள்ளி கண்ணால் விடுத்த ஆணையும் செல்வராஜ் மனத்தில் உதித்த எண்ணமும் ஒன்றாக இருந்தன. ''டிக்கட் எவ்வளவுங்க?'' என்றான் செல்வராஜ் கைக்குட்டையை எடுத்தபடி.

''அப்படி யொன்றும் அதிகமில்லை தம்பி, ஒரு ரூபாய்தான்'' என்றார் கிழவர்.

கைக்குட்டையில் கட்டியிருந்த ரூபாயை அவிழ்த்து எடுத்துப் புன்சிரிப்போடு அவரிடம் அதிவிநயமாக நீட்டினான் செல்வராஜ்.

''யார் கண்டார்கள்? அதிர்ஷ்டம் இருந்தால் உங்களுக்கும் பரிசு விழலாம். இதோ டிக்கட்!'' என்று கூறி ஜேபியிலிருந்து ஒரு டிக்கட்டை எடுத்துச் செல்வராஜிடம் கொடுத்தார் கிழவர். அவன் அதை மடித்துக் கைக்குட்டையில் வைத்து முடிச்சுப் போட்டு ஜேபியில் வைத்துக் கொண்டான்.

''நாளைக்கே லாட்டரி குலுக்குவார்கள். உங்கள் விலாசம் என்ன, தம்பி?'' என்றார் கிழவர், ஜேபியிலிருந்த சிறிய டைரியை எடுத்தபடியே.

விடிந்தால் தீபாவளி. ஹோட்டல் ஜகஜ்ஜோதியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. செல்வராஜும் வள்ளியும் ஹோட்டலுக்கு வந்தார்கள். கல்லாப் பெட்டியண்டை உட்கார்ந்திருப்பவர் அவர்களைப் பார்த்து இலேசாகச் சிரித்தார். அவர் எதற்குச் சிரிக்கிறார் என்று புரியாவிட்டாலும் செல்வராஜ் பதிலுக்குச் சிரித்தான். வள்ளி தலை குனிந்தவாறு நின்றாள். ''உன் பெயர்தான் செல்வ



தரத்
தேயிலைத்
தூள்களிலே
தனிப்பெருமை
வாய்ந்தது

லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ

குணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை
வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு
அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள். இந்த
ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள்
—உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள்
நிச்சயமாக இதை ரசித்து நீங்கள்
மகிழ்வீர்கள—ஆம்!—அப்படியே உங்கள்
விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத்
தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன்
கோல்டன் டஸ்ட் தனிப்பெருமை வாய்ந்தது.
தன்னிகரற்றது என்பது உண்மை.




லிப்டன் என்றாலே

நல்ல டீ

LIPTON

LHGC-4 TAM

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1967 நவம்பர் 24   1967 டிசம்பர் 18

சென்னையிலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை –1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்பெற்ற பாஸேஞ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

C. M. குட்டி
புரோப்ரைட்டர் : குட்டி டிராவல் சர்விஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை – 1

மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

மெஸர்ஸ் சுபேதார் & சன்ஸ்
66, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை -1

நாகப்பட்டினத்திலிருந்து

1967 நவம்பர் 25   1967 டிசம்பர் 19

நாகப்பட்டினத்திலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக்கொள்ளலாம்

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும் :

பின்னி & கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை–1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



''என்னங்க இது! ரேடியோ நிலையத்திலிருந்து அண்டா அண்டாவாகத் தண்ணீரைத் தூக்கிகொண்டு சமுத்திரத்தை நோக்கிப் போகிறார்கள்?''

''ரேடியோவில் நடக்கும் நாடகங்களில் நடிகர்கள் உணர்ச்சிவசப்பட்டு அழும் கண்ணீரய்யா!...வாரா வாரம் அதைக் கொண்டு சமுத்திரத்தில் கொட்டப் போறாங்க!''

ராஜா?'' என்று கேட்டார் அவர்.

''ஆமாமுங்க'' என்றான் செல்வராஜ்.

''நான்தான் அந்தக் கார்டு எழுதினேன்'' என்றார் கல்லாப் பெட்டிக்காரர்.

''முனிசிப்பு மகள் படிக்கச் சொல்லிச்சுங்க. இந்த ஹோட்டல் மானேஜர் எங்களை அர்ஜண்டா வரச் சொன்னதாக'' என்றான் செல்வராஜ் தயங்கிய படி.

''நான்தான் மானேஜர். உனக்கு லாட்டரியில் பரிசு விழுந்திருக்குது. உனக்கு அதைத் தரச் சொன்னார்கள்!'' என்று ஒரு கவரை மேஜை டிராயரிலிருந்து எடுத்து அவன் முன் நீட்டினார்.

''நீங்களே பிரித்துக் கொடுங்கள்'' என்றான் செல்வராஜ்.

மானேஜர் கவரைப் பிரித்தார். அதில் ஐந்நூறு ரூபாய்க்கு நோட்டுகள் கத்தையாக இருந்தன. கூடவே, ஒரு சிறிய கடிதமும் இருந்தது.

அவர்கள் இருவரும் தங்கள் கண்களைத் தாங்களே நம்பாமல் ஆச்சரியத்துடன் நின்றார்கள். பிறகு தனது ஜேபியிலிருந்த கைக்குட்டையை எடுத்து முடிச்சை அவிழ்த்து மடித்த லாட்டரி டிக்கட்டை மானேஜரிடம் தந்தான் செல்வராஜ். மானேஜர் அதைப் பார்க்காமலே மேஜையின்மீது ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, ''அந்தக் கடிதத்தையும் படி தம்பி'' என்றார்.

''எனக்குப் படிக்கத் தெரியாதுங்க. நீங்களே அதைப் படிச்சுச் சொல்லுங்க'' என்றான் செல்வராஜ்.

''ஆசீர்வாதம். இவ்வாண்டு உங்களுக்கு அதிர்ஷ்டப் பரிசு விழுந்திருக்கிறது. நீங்கள் நாளை தீபாவளியை என் வீட்டில்தான் கொண்டாட வேண்டும். தோசையும், பட்டாசும், மத்தாப்பும் தயாராக வைத்திருப்பேன். இனிமேல் ஒவ்வொரு தீபாவளியும் நீங்கள் இந்தக் கிழவனோடு சேர்ந்தே கொண்டாட வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போதே இருவரும் புறப்பட்டு வாருங்கள். துணிக்கடைக்குச்சாயந்திரம் போகவேண்டும்.

இப்படிக்கு
ராஜசிகாமணி''

ஒன்றும் புரியாமல் விழித்தனர் அத்தம்பதி.

''இதெல்லாம் என்ன மச்சான்?'' என்றாள் வள்ளி.

செல்வராஜும் அவளது அதே கேள்வியைக் கண்களில் தேக்கி மானேஜரைப் பார்த்தான்.

''அவர் மிகவும் நல்லவர்'' என்றார் மானேஜர்.

''அது சரிங்க, தோசைன்னா இவளுக்கு இஷ்டம்னு அவருக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான் செல்வராஜ்.

''ஓ! அதுவா? அவருக்கு ஆயிரம் கண்கள். ஆயிரம் காதுகள். அவருக்கு எல்லாமே தெரியும். எதுவுமே புரியும்'' என்ற மானேஜர், ''ஆனால் பாவம்! அவருக்கு உற்றார் தான் ஒருவருமே இடையாது!'' என்று முடித்தார்.

''ஆமாங்க. அவருகூடச் சொன்னாருங்க!'' என்றான் செல்வராஜ்.

''அவருக்கு மிகுந்த தெய்வ பக்தி. தமது ஒரே மகளையும் மருமகனையும் தலயாத்திரைக்காக ராமேசுவரம் அனுப்பி யிருந்தார். அவர்கள் திரும்பவில்லை. தனுஷ்கோடி புயலுக்குப் பலியாகி விட்டார்கள். அதோடு அவருக்கு வாழ்வே வெறுத்து விட்டது.''

ஒரு கணம் யாரும் பேசவில்லை.

''பாவம், தள்ளாத வயதிலே என்ன கஷ்டம் பாருங்க! பிழைப்புக்காக லாட்டரிச் சீட்டு விற்க வேண்டி யிருக்கிறது!'' என்றான் செல்வராஜ்.

மானேஜர் இலேசாகச் சிரித்தார். ''அவருக்குப் பிழைப்புக்குப் பஞ்சமில்லையப்பா! அவர் கொழுத்த பணக்காரர். இந்த ஊரிலேயே அவருக்குப் பெரிய பங்களா இருக்கிறது. எத்தனையோ பொதுநல ஸ்தாபனங்களுக்கு அவர் வாரி வாரி வழங்குகிறார்.! சரி சரி! நாம் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் உங்களுக்காக அவர் காத்திருப்பார். உடனே புறப்பட்டு அவர் வீட்டுக்குப் போங்கள்!'' என்றார் அவர்.

''அவரு வீட்டில் இருப்பாருங்களா?''

''அந்தத் துயர நிகழ்ச்சிக்குப் பிறகு பொதுவாக அவர் எங்குமே போவதில்லை. எப்போதாவது வெளியே வந்தால் இந்த ஹோட்டலுக்குத்தான் வருவார்.''

''உங்களுக்கு அவரை நல்லாத் தெரியுங்களா?''

''கேட்டாயே ஒரு கேள்வி! இந்த ஹோட்டலே அவருடையதுதானப்பா. அவர் பெரிய

லட்சாதிபதி. உங்களை அழைத்து வரக் கார் கூட அனுப்பி யிருக்கிறார். அதோ பார்!'' என்று வெளியே நின்றிருந்த ஒரு பெரிய காரைக் காட்டிய மானேஜரின் கண்களை நீர் மறைத்தது. அந்தக் காரைக் காணவிடாமல், நாத் தழதழத்தது பேசவே பேச விடாமல். கண்ணீர்த் திரையிலே ,மெவர் தோன்றினர். தனுஷ்கோடி புயல் இவர் உள்ளத்தை எவ்வாறு தாக்கி யிருக்கிறது என்பது அவருக்குத் தெரியாத விஷயமா? அருமை மகளும் மருமகனும் புயலுக்கு இரையாகிப் போன பின் இன்னொருவராயிருந்தால் பைத்தியம் பிடித்திருக்கும். ஆண்டவன்தான் விளையாடுகிறான் என்றால், இந்தக் கிழவரும் அல்லவா அவனுக்கு மேலாக விளையாடுகிறார்! வருஷா வருஷம் மகளையும் மருமகனையும் ஒத்த இளம் தம்பதியைத் தேடிப் பிடித்துத் தீபாவளி கொண்டாடுகிறாரே! என்ன மனப் பக்குவம் இருந்தால் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கொண்டு வாழ முடியும்? —இப்படி எண்ணம் ஓடவே, மானேஜர் மலைத்து உட்கார்ந்து விட்டார்.

தன்னைச் சமாளித்துக் கொள்ளச் சில நிமிடங்கள் பிடித்தன செல்வராஜுக்கும். ''அந்த லாட்டரி டிக்கட்டை அங்கேயே போட்டு விட்டீங்களே'' என்று மடிந்திருந்த டிக்கட்டை விரித்துச் சரிசெய்து அவரிடம் கொடுத்தான் செல்வராஜ். மானேஜர் அதை வாங்கிப் பார்த்து இலேசாகச் சிரித்துக் கொண்டே கிழித்துப் போட்டுவிட்டார்.

''அதென்னங்க? டிக்கட்டைக் கிழிச்சிட்டீங்க?'' என்றான் செல்வராஜ் ஆச்சரியமும் திகிலும் தோன்ற.

''அது போன மாதம் எங்கோ நடந்த உதவி நாடகம் ஒன்றின் டிக்கட், அப்பா!''

''என்ன?''

செல்வராஜ் மதிமிழந்தவன் போல் மானேஜரைப் பார்த்தபடி நின்றுவிட்டான்.

பக்கத்தில் விரல்களைக் கோத்து நின்ற வள்ளிக்கோ ஒன்றுமே புரியவில்லை.

ஆண்டவனின் விளையாட்டை நினைவுபடுத்தும் இந்த விளையாட்டை யாரால்தான் புரிந்து கொள்ள முடியும்?

◆◆

பஞ்சாமிர்தம்

(௫௯)

கொக்கி

தஞ்சையிலிருந்து தரமான சாப்பாட்டு அரிசி சென்னைக்கு வரத் தொடங்கிவிட்டது.

— செய்தி

நல்லது; இதற்கு முன்னதாகவே அதனைப் பரிமாறுவதற்குத் தஞ்சாவூர் தலைவாழை இலையும் வந்து சேருமல்லவா?

ஃ ஃ ஃ

''தேச பக்தியுள்ள ஒரு பையனுக்கு அடையாளம், அவன் இருபத்தைந்து வயதுக்கு முன் மணந்து கொள்ளக் கூடாது!''

டாக்டர் சந்திர சேகர்

மக்களுக்கு இருபத்தைந்து வயதுக்குப் பிறகு தேச பக்தி ஏற்பட்டால் போதும் என்று இதற்கு அர்த்தம் செய்து கொள்ளலாமோ?

ஃ ஃ ஃ

''மத்திய மந்திரி சபையில் இந்திரா கோஷ்டி, மொரார்ஜி கோஷ்டி என்று முன்பு இரு கோஷ்டிகள்தான் இருந்து வந்தன. இப்போது அவை ஆறு கோஷ்டிகளாகப் பெருகி யிருக்கின்றன!''

— சுதந்திரா எம். பி. திரு மாரிசாமி

மந்திரி சபையில் கோஷ்டிப் பூசல் ஆறாகப் பெருக்கெடுத்துவிட்டது என்று இதைக் குறிப்பிடலாம்!

இந்தியாவுக்குப் பழச் செடிகளை அன்பளிப்புச் செய்த மலேசியப் பிரதமருக்கு ராஷ்டிரபதி ஜாகிர் ஹுசேன் விமானம் மூலம் முப்பது ரோஜாச் செடிகளை அனுப்பி வைத்தார்.

—செய்தி

இரு நாடுகளுக்கும் பொதுவான பழம் பெருமை இந்த அன்பளிப்புகள் மூலம் மலர்ச்சி பெறும் என்பதில் சந்தேகமென்ன?

ஃ ஃ ஃ

''சர்க்கரைப் பஞ்சத்தின் அநுபவம் எனக்கும் உண்டு. டெல்லிக்கு நான் விமானத்தில் செல்லும்போது எனக்கு அளிக்கப்பட்ட காப்பியில் சர்க்கரை போதவில்லை. பிறகு ஒரு ஸ்பூன் கொண்டுவந்து போட்டார்கள்.''

— நிருபர்களிடம் சென்னை முதல்வர்

ஒரு ஸ்பூன் சர்க்கரைக்குக் கூட மக்கள் இங்கு 'பறக்க' வேண்டியிருப்பதை இது உணர்த்தி விட்டது.

ஃ ஃ ஃ

ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளிடம் ஒரு சிறு தொகை வரியாக வசூலிக்கலாமென்று சர்க்காருக்கு மத்திய வைத்திய கௌன்சில் சிபாரிசு செய்திருக்கிறது —செய்தி

நோயாளிகளைச் சோதிப்பது, முதலில் அவருடைய சட்டைப் பையிலிருந்து இனித் தொடங்கும் என்பதுதான் இதன் அர்த்தமா?

ஃ ஃ ஃ

சதுரகிரி மலைக் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த பூசாரியைக் கரடி ஒன்று வழிமறித்துக் கடித்துவிட்டது.


—விருதுநகர்ச் செய்தி

பூஜை வேளையில் கரடி நுழைவதென்றால் என்ன என்பது அர்த்தமாகிவிட்டது.



சென்னை
ஸ்டார்
ஸ்ரீ கிருஷ்ணா
புவனேஸ்வரி
கிருஷ்ணவேணி
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர்
பிலிம்ஸ்
விவசாயி
டைரக்ஷன்· M.A.திருமுகம்
கதை , தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர்
ELEGANT

சூரியனில் களங்கம்



சந்திரனில் களங்கம் இருப்பதாகப் பொதுவாகச் சொல்லி வருகிறோம். சூரியனிலும் களங்கங்கள் தோன்றுவது உண்டு. 'ஸன் ஸ்பாட்' என்று இவற்றைச் சொல்வார்கள்.

சாதாரணமாகச் சூரியனின் மேல் பரப்பு ஒரே போலத்தான் இருக்கும். ஆயினும் சிற்சில சமயங்களில்அங்கு சக்திவாய்ந்த ஏதோ ஓர் இயக்கம் ஏற்பட்டு விடுகிறது. அப்போது சூரிய மண்டலத்தில் புயல் ஏற்படும். இப்புயல்களின் போது சூரியனிலிருந்து முப்பதாயிரம் மைல்கள் வரை நாக்கை நீட்டிக்கொண்டு தீவெள்ளம் கொந்தளிப்பதும் உண்டு. இச்சமயத்தில் ஏற்படுகிற வாயுக்களின் பரவலால் சூரியனில் களங்கமிருப்பதாகத் தோன்றும். சூரியக்கொந்தளிப்பால் ஏற்படுகிற மின் அதிர்ச்சியின் ஒரு சிறு அம்சம் ஒன்பது கோடி மைல்கள் தாண்டியுள்ள பூமண்டலத்தையும் தாக்குகிறது.

மனிதனும் ஒரு சின்னஞ்சிறு மின்சாரக் கலம்தான். ஒரு வால்ட் மின் சுமையில் நாற்பதினாயிரத்தில் ஒரு பங்கு மின் சக்தி மனிதனின் மத்திய நரம்பு மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. கபாலத்திலும், தோள் பட்டைகளின் இடையிலும், முதுகுத்தண்டின் அடியிலும் இம்மின்சாரம் இறுக்கமாகப் பதிகிறது. ஆகவே மனிதனுக்கென ஒரு 'மின்சார வயல்' உண்டாகிவிடுகிறது. சூரியப் புயலில் ஏற்படும் மின்சாரக் கொந்தளிப்பின் ஒரு சிற்றலை மனிதனின் மின்சார வயலைப் பாதிக்கிறது. இதனால் மனிதனின் போக்குகளும் மாற்றங்கள் அடைகின்றன. சூழலில் பாஸிடிவ் மின்னணுக்கள் அதிகமாகும் போது மனிதனுக்கு உற்சாகம் குறைகிறது; எரிச்சலும் அலுப்பும் அதிகமாகிறது; மூக்கடைப்பு உண்டாகிறது; தலைவலி ஏற்படுகிறது. நெகடிவ் அணுக்கள் அதிகரித்தால் இதற்கு மாறாக உற்சாகமும் ஆரோக்கியமும் உண்டாகின்றன.

மனித குலத்தின் சரித்திரத்தில் சில சமயங்களில் வீர உணர்ச்சி அதிகமாகிறது. சில சமயங்களில் கலக உணர்ச்சி பொங்குகிறது. வேறு சில சமயங்களிலோ எல்லாவற்றிலும் மந்தம் காண்கிறது. இவ்வாறு உலகம் முழுவதிலும் பொதுவான சில தன்மைகள் ஏற்படுவதற்கு சூரியப் புயல்கள் குறிப்பிடத்தக்க ஒரு காரணமாயிருக்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் தெரிகிறது. நான்கு ஆண்டுகளில் சூரிய களங்கங்களின் போது 28,642 பேர்கள் மீது ஏற்பட்ட மாறுதல்களை அமெரிக்காவின் ஸிராக்யூஸ் சர்வகலாசாலையைச் சேர்ந்த இரு வைத்திய நிபுணர்களும் ஒரு சித்தப் பண்பு நிபுணரும் ஆராய்ந்ததில் இம்முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

சூரியப் புயல் ஏற்படும்போது போக்குவரத்து விபத்துக்கள் எழுபது சதவிகிதம் அதிகரித்தனவாம். தொழிற்சாலைகளில் இருபது சதவிகிதம் விபத்துக்கள் கூடினவாம். தற்கொலைகள் மிகுந்தனவாம். நோயாளிகளுக்கு வலி இரட்டிப்பாகியது. நரம்புத் தளர்ச்சி வெகுவாக ஏற்பட்டது. சூரியப் புயலினால் பாஸிடிவ் அணுக்களே பெரும்பாலும் நம்மை எட்டுவதுதான் இதற்கெல்லாம் காரணம்.

சூரியனை ஆரோக்கிய தேவதையாகக் கருதியதோடு, நம் அறிவைத் தூண்டுமாறு ஆதவனில் உறையும் சக்தியைத் தினமும் மும்முறை பிரார்த்தித்த முனிவர்களின் தீர்க்க திருஷ்டியை என்னென்பது?

அடிப்படை: 'ஸன்டே ஸ்டான்டர்'டின் ஸ்ரீ டேவிட் கன்ஸ்டன் எழுதிய கட்டுரை

விண்வெளிக் கிருமிகள்!



"விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளும் ஒருவன் தன் பயணத்தை முடித்துக் கொண்டு வந்தபின் தன் மனைவியை முத்தமிடுவானாகில் அவனோ அவன் மனைவியோ அல்லது இருவருமேயோ இறந்துவிடக் கூடும்."

இப்படிக் கூறுபவர் ஏப்பைசாப்பையானவர் அல்ல; விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் டாக்டர் ஆர். வில்சின் என்பவர்.

காரணம் என்ன தெரியுமா?

விண்வெளிப் பயணத்தின் பொழுது, வெகு நேரம் வான வெளியில், உலகுக்குப் புறம்பான வெளிச் சூழ்நிலையில் சுற்றும்படி நேரிடுகிறது. திரும்பும் பொழுது பூமியின் நோய்க்கிருமிகளை எதிர்த்துச் சமாளிக்கும் ஆற்றல் விண்வெளிப் பயணியிடம் வெகுவாகக் குறைந்துவிடும். அதோடு விண்வெளியில் அவனைச் சில கிருமிகள் பற்றியிருக்கக் கூடும். அவை புவியில் உள்ளவர்களின் உயிரைக் குடிக்கும் ஆற்றல் பெற்றவை. —ரா. வீ.



மறைந்த கால்

ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் வடக்கே திரிவேணி சங்கமத்தில் தீர்த்தமாடச் சென்ற போது அருகில் நின்ற ஒரு பைராகி, திரிவேணி சங்கமத்தின் கீர்த்தி பற்றிப் பேசி வந்தார். அவரிடம் ஆண்டவன் ஸ்வாமிகள், ''இதற்குத் திரிவேணி சங்கமம் எனப் பெயர் வந்தது, கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய மூன்று நதிகளும் சங்கமிப்பதால் எனக் கூறினும்! கங்கையும் யமுனையும்தானே தெரிகிறது. ஸரஸ்வதி எங்கே?'' என்று கேட்டார்.

அதற்குப் பைராகி, ''ஸ்வாமி! பெண்கள் ஜடை போட எத்தனை கால்களாகக் கேசத்தைப் பிரிக்கிறார்கள் ?'' என்று கேட்டார்.

''ஏன் ? மூன்று கால்களாகத்தான்.''

''ஜடை பின்னியபின் உங்களுக்கு எத்தனை கால்கள் தெரிகின்றன ?''

''இரண்டு கால்கள்தான்.''

''அப்படியானால் அந்த மூன்றாவது கால் எங்கே?''

''மற்ற இரு கால்களுடன் அதுவும் பின்னிப் பிணைந்திருக்கிறதப்பா !''

''ஸ்வாமி! அதே போல் தான் மூன்றாவது நதியும் கங்கை யமுனையுடன் ஏதோ ஓர் இடத்தில் பின்னிப் பிணைந்து கலந்து வருகிறது.'' — ஒரு சாதாரண பைராகியின் ஞானத்தைக் கண்டு மெய்சிலிர்த்தாராம் ஸ்ரீமத் ஆண்டவன். இதை அவரே கோவையில் ஒரு பிரவசனத்தில் தெரிவித்தார். (இத்தகவலைத் தெரிவிப்பவர் ரங்கநாயகி ராகவன்.)

வாணங்களின் வயது

விண்வெளி பற்றிய ஆராய்ச்சி செய்யும் யுகத்தில் இருக்கும் நாம் வாணம், வெடிகளின் வயதைப் பற்றித் தீபாவளியின் போது தெரிந்து கொள்வோம்.

வாணம், வெடி, இவைகளைப் பற்றிய முதல் ஐரோப்பியக் கையெழுத்துப் பிரதியின் காலம் கி. பி. 1432. இந்தக் கலை பற்றிய அச்சிட்ட முதல் புத்தகம் 1529ல் வெளி வந்துள்ளது. துப்பாக்கியைக் கண்டுபிடித்த பாதிரியார் பெர்தால்டு ஸ்குவார்ட்ஸ் வாணம் வெடிக் கலையைப் பதினான்காம் நூற்றாண்டிலேயே கண்டு பிடித்திருந்தாலும், ஐரோப்பாவில் பதினேழாம் நூற்றாண்டில் தான் தேசிய விழாக் காலங்களின் மகிழ்ச்சி ஆரவாரங்களை வெளியிட வாண வேடிக்கைகள் வழக்கத்துக்கு வந்தன.

சீனாவில் வாணங்களின் கண்டு பிடிப்பு இவைகளுக்கு முற்பட்டதாக இருந்தது. சூ இன மன்னரான யாங் - டி வாண வகைகளை அறிமுகப்படுத்தினார். இது ஏழாம் நூற்றாண்டாக இருக்கலாம். கந்தகம், வெடியுப்பு, கரி இவைகளின் 'கலவையைக் கொண்டு வெடிக்கும் பொருள்களைத் தயாரிப்பதற்கு கி. பி. 1000த்திலேயே இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இந்தியாவில் வாணம், வெடி முதலியவை எப்போது தோன்றின என்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. நம் இதிகாச புராணங்களில் வாணவேடிக்கைகள் பற்றிக் குறிப்பு உள்ளது. ஆனால் சரித்திரச் சான்றின்படி பதினைந்தாம் நூற்றாண்டே இங்கு வாணம் வெடிகளுக்கு ஆரம்பம் என்று தெரிகிறது.

1443ல் இரண்டாம் தேவராயரின் ஆட்சியின் போது விஜய நகர சாம்ராஜ்யத்துக்கு வந்திருந்த பாரசீக யாத்ரீகர் அப்துல் ரசாக் விழாக் காலங்களில் வாண வேடிக்கைகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

1504க்கும் 1505க்குமிடையே இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்த இத்தாலிய யாத்ரீகரும் எழுத்தாளருமான லுடோவிகோ டி வர்த்தமா என்பவர் விஜய நகர வாசிகள் வாணம் வெடிகளைச் செய்வதில் வல்லவர் என்று குறிப்பிடுகிறார்.

கி. பி. 1421 முதல் 1472 வரை காஷ்மீரை ஆண்ட ஜெயினுலாப்தீன் என்ற முஸ்லிம் அரசர் வாணங்கள் செய்யும் முறைகளைப் பற்றிப் பாரசீக மொழியில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார். தம் நாட்டில் வாணங்களை 1466ல் அறிமுகப்படுத்தியவர் இவர்.

1516ல் இந்தியாவில் தங்கி இருந்த போர்த்துகீசிய யாத்ரீகர் ஒரு குஜராத்தி மணவிழாவினைக் கண்டு பாட்டு, ஆட்டம் இவற்றோடு ஏராளமான வெடிகளும் ஆகாச வாணங்களும் மணமக்களை மகிழ்வித்தன என்று வர்ணித்திருக்கிறார்.

கௌதுக சிந்தாமணி என்பது ஒரு வடமொழி நூல். இதை எழுதியவர் 1497 முதல் 1533 வரை ஒரிஸ்ஸாவை அரசாண்ட பிரதாபருத்ர தேவர் என்பவர். இந்நூலின் ஒரு பகுதியில் வாண வகைகளை எப்படித் தயாரிப்பது என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி வாண வகைகளைத் தயாரிப்பதற்கான பொருள்கள்: கந்தகம், வெடியுப்பு, கரி, உருக்கு, இரும்புத்தூள், மூங்கில் குழாய், திரி, உப்புகளில் ஐந்து வகை, ஆமணக்கு எண்ணெய் எடுத்தபின் தங்கிய புண்ணாக்கு, பாதரசம், சுயம், பசுவின் சிறுநீர், வர்ணங்களுக்குச் சில வகை கனிஜங்கள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. 'ஆகாச பைரவ கல்ப' என்ற வடமொழி நூலில் தீபாவளிப் பண்டிகையின்போது மன்னர் வாண வேடிக்கைகளைக் கண்டு மகிழும் காட்சி சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இது 15, 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்.

கமலாகர பட்டர் என்பவரால் எழுதப்பட்ட நிர்ணய சிந்து என்ற வடமொழி நூலில் தீபாவளிப் பண்டிகையில் மூதாதையர்களின் ஆவிகள் தாங்கள் வாழ்ந்த இவ்வுலகத்துக்கு விஜயம் செய்து திரும்புவதற்கு வாணங்களின் ஒளி அவர்களுக்கு வழி காட்டின என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- ஜி. என். தாஸ்

அட்டைப் படக் கதை

துணை நலம்



தி.சா.ராஜூ

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு எல்லாரும் மனைவியின் இல்லத்துக்குப் போவார்கள். நான் என் தங்கையின் வீட்டுக்குச் செல்லுகிறேன் — உடன் பிறவாத தங்கை.

திருச்சிராப்பள்ளி ஜங்ஷனின் உயர் வகுப்புக் கவுண்டரில் டிக்கெட் வாங்கும் போது அந்தக் கணக்கரே கூறினார். ''நீங்கள் அந்த ஊருக்குப் போவதற்கு மாயனூருக்கோ, மணவாசிக்கோ, எந்த ஸ்டேஷனுக்கு டிக்கெட் வாங்கினாலும் ஒன்றுதான். ஆனால் மணவாசி ஸ்டேஷனில் இந்த ரயில் நிற்காது.''

'மணவாசி, மணவாசி!' நான் முணுமுணுத்தேன். அந்த ஊரில் நெய்யப்படும் கைத்தறி ஆடைகள் அரபுக் கடைத்தெருவிலும் பாங்காக்கிலும் விற்பனையாகிறதே' அங்கே வேக ரயில்கூட நிற்காதா? என் மனம் அதிசயித்தது. கரகர ஓசையுடன் ஒலிபெருக்கி மூலம் ஏதோ அறிவிப்புத் தொடங்கிற்று.

டிக்கெட் கொடுப்பவருடன் நான் நிகழ்த்திய உரையாடலைத் தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கிராமவாசி ஒருவர் என்னை அணுகி என் கையிலிருந்த சிவப்பு டிக்கெட்டை மரியாதையுடன் நோக்கினார்.

''மலைப்பட்டிக்கா போவோணும்? பறங்கியம்மா சத்திரத்துக்கா?'' கண்களை இடுக்கிக் கொண்டே கேட்டார்.

நான் பதில் சொல்லவில்லை, சரியான பதில் தெரியாததால்.

அவர் என் பதிலை எதிர்பாராமலேயே தொடர்ந்து பேசினார். ''மாயனூர்லே இறங்கிக் கைகாட்டி மரத்துக்கு எதிர்த்தாற்போல் கம்பங்காட்டிலே உளுந்து போனீங்கன்னு கப்பி ரோடு வரும். அதில்லே ஒரு மைல் மேக்காலே நடக்கோணும். முனை திரும்பியதும் ஒரு வண்டிப் பாதை. அதிலே உளுந்து ரெண்டு கல் போனால் சோத்துக்கைப் பக்கம் பறங்கியம்மா சத்திரம். யாரைக் கேட்டாலும் சொல்லுவாங்க. வாசலிலே நிறையப் பசுமாடு கட்டியிருக்கும்.'' அவருடைய பேச்சிலே தாளம் தவறாத ஒலிநயம் இருந்தது.

''அங்கே போக வண்டியோ, டாக்ஸியோ கிடையாதா?'' நான் வினவினேன்.

தலைக் கட்டைச் சரிப்படுத்திக் கொண்டே அவர் பேசினார். ''எதுங்க? அந்தக் காட்டுப்பய மவன் கனவிலே எல்லாம் நடந்துதான் போவோணும்.''

எங்களுடைய உரையாடலைச் செவியுற்றுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் என்னிடம் வந்தார். 'மாயனூருக்கா ஸார். நீங்கள் மத்த இடத்துக்குப் போவது அப்புறம் இருக்கட்டும். சாயரட்சை ஆத்தங்கரைக்கு வந்துடுங்க. அந்த மணற்போக்கிலிருந்து சூரியன் மறைவதைப் பார்க்க வேண்டியது ரொம்ப அவசியம். அந்த மாதிரிக் காட்சிகள் உலகத்திலேயே மிக மிகக் குறைவு !''

படிகள் வழியாக இறங்கிச் சுரங்கப் பாதை மூலமாக நடந்தபோது என் மனம் நேபிள்ஸையும் பாரிஸையும் குறித்து எண்ணமிட்டது. அங்கெல்லாம் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு நிறையச் சுரங்கப் பாதைகள் அமைத்திருந்தார்கள். எவ்வளவு பரபரப்புடைய மக்கள் எண்ணிக்கை ! அத்தனை பரபரப்புக்குமிடையில் எவ்வளவு அமைதியான கலை வடிவங்கள்! ஈஃபெல் கோபுரம் ஒன்றே போதுமே! அதன் முன்பு எத்தனை தடவை உறைந்துபோய் நின்றிருக்கிறேன் !

அது பழைய நாளைய முதல் வகுப்புப் பெட்டி. குளியலறையில்கூட மின் விசிறிகள் பொருத்தியிருந்த அடையாளங்கள் இருந்தன. குளிக்க வசதியாக நீண்ட ரப்பர்க் குழாயும் இருந்தது. பொருட் செல்வத்தை வாழ்க்கை வசதிகளாக வகை செய்வதில் மேலை நாட்டினர்கள் நிகரற்றவர்கள்.

ரயில் மெள்ள நகரத் தொடங்கிற்று. அந்தப் பெட்டியில் வேறு யாருமே இல்லாதது என் சிந்தனை ஓட்டத்துக்கு மிகவும் உதவியாக இருந்தது.

கால் நூற்றாண்டுக்கும் அதிகமான இந்த இடைவெளியில் என் தனி வாழ்விலும் உலக சரித்திரத்திலும் எத்தனையோ மாறுதல்கள்! சமுதாய மதிப்புக்கள் நீக்கப்பட்டு விட்டன. சமூக வாழ்வே சினங் கொண்ட கடலாகக் கொந்தளிக்கிறது. என்றாலும், ஆங்காங்கே சில உயர்ந்த கோபுரங்கள், கலங்கரை விளக்கங்கள் — என் தங்கை எல்லியாளுவைப் போல. அவர்களை ஒத்தவர்களது வாழ்க்கைதான் மனிதனுக்கு உயிர்க் குலத்

தின் மீதுள்ள நம்பிக்கையை மேலும் மேலும் துளிர்க்க வைக்கிறது. வண்ண மலர்கள் பூத்துக் குலுங்க உதவியாக இருக்கிறது.

2

வட்டாரத்திலிருந்து பார்க்கும்போது தொலைதூரத்தில் அலைகடலின் காட்சி. சமுத்திரத்தின் இடையேயும் சிற்சில பாறைகள் தலைதூக்கி நிற்கின்றன. கடலைத் தொடும் வானத்தின் நிறம் எப்போதும் ஒரே மாதிரி இராது. சில சமயங்களில் கரும் பச்சை, இளஞ்சிவப்பு, வெண்ணீலம் என்று மாறி மாறி ஒளிரும் வானம் திடீரென்று வெளுக்கும். பற்பல சிவப்புத் திட்டுக்கள், அன்னச் சிறகுகளைத் தூவினாற்போல் பஞ்சுப் பொதிகள் ஜரிகை விளிம்புடன் கருமுகில். அந்தத் திரையை விலக்கிக் கொண்டு கதிரவன் முகத்தைக் காட்டும் போது அந்த வெள்ளைக்காரச் சிப்பாய்கள் தாங்கள் வாழ்வது பாசறையில் என்பதைக்கூட மறந்து விடுவார்கள். தங்களுடைய ஆடைகளைக் கழற்றி எறிந்து விட்டு அரைக் கைச் சட்டையுடன் கடற்கரை மணலில் உருளுவார்கள்.

"ஓ மை ஸன் ஷைன்.
மை ஒன்லி ஸன் ஷைன்..."

அதுதான் அவர்களுடைய காயத்ரி.

ஆணும் பெண்ணும் இன பேதமின்றிக் குறை உடையில் நீர்க் கரையில் உலாவுவதும், கடலலைகளைத் துழாவுவதும், கட்டிப் பிடித்துக் களிவெறி கொள்வதும், எட்டி நின்று இருபொருள் வசனங்களில் ஏசிக்கொள்வதும் எளிதில் விவரிக்க முடியாத காட்சிகள். மதுப்புட்டிகள் உருளும். முட்டை ஓடுகளும், பழத் தோல்களும், சாக்லெட், சிகரெட் காகிதங்களும் சிதறிக் கிடக்கும். கதிரவன் மறைந்ததும் அவர்கள் தங்கள் பில்லெட்டுகளை நோக்கி ஓடுவார்கள். உடனடியாகக் குளிர் மிகுந்து உடலை வதைக்கும் விசித்திரமான தட்பவெப்ப நிலை அங்கு நிலவிற்று.



அவர்கள் விலகிச் சென்றதும் அங்கு இன்னொரு கூட்டம் வரும். அனைவரும் அந்த வட்டாரத்தின் எளிய மக்கள். கடற்கரையில் சிதறிக் கிடக்கும் ரொட்டித் துணுக்குகள் காகிதத்தில் ஒட்டியிருக்கும் சாக்லெட் கரைசல், எரிந்து அணைந்து போன சிகரெட் துண்டுகள், பழத் தோல்கள், காலவே மிகுந்திருக்கும் கனிரச டப்பாக்கள் ஆகியவற்றை நாடி வருவார்கள். அந்தக் குழுவில் பார்வைக்கு மிகவும் அழகான மதலைகள், பருவக்கன்னிகள், முதியவர்கள், எல்லோரும் இருப்பார்கள். ஆனால் அனைவ



ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: திருநெல்வேலி-6.
மத்திய அலுவலகம்: 61-B, உஸ்மான் ரோடு, தி.நகர், மதராஸ்-17 போன்: 442916.
31.3.1967 அன்று அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 500000 சீட்டில் ஈடுபடுத்திய தொகை 230 லட்சம். மொத்த ஆஸ்திகள்: 123 லட்சம்.

தீபாவளியா... போங்கலா

கவலைப் படாதீர்கள்! உங்களுக்காக நாங்கள் சேமிக்கிறோம்

காரண்டி செய்த லோன்:
கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29-10-66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC. I/ED(s)-66 பாரா 2 (1) (f)ன் சப்கிளாஸ் (X)ன் படி வாங்கப்படுகின்றன.

தவணை	வட்டி விகிதம் ரூ. 300லிருந்து ரூ. 5000வரை	ரூ. 5000க்கு மேல்
ஒரு வருடம்	$8\frac{1}{2}$%	9%
இரண்டு வருடம்	9%	$9\frac{1}{2}$%

தொழில் விபரம்

தினசரி, மாதம் மூன்று முறை, மாதம் ஒருமுறை உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 24 ஆபீஸ்களில் நடத்தப்படுகின்றது.

கம்பெனி நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர்
ஸ்ரீ AR. ராமசுவாமி
டைரக்டர்கள்:
ஸ்ரீ M.A.M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி
மத்திய அலுவலக மானேஜர்:
ஸ்ரீ K.A. ராம் பி.ஏ., பி.எல்.

கடந்த மூன்று வருடங்களின் ஆதாயமும் டிவிடெண்டு விவரமும்:

	வரி கொடுப்பதற்கு முன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்டு விகிதம்
1964-65	41825-20	14295-70	12%
1965-66	61908-72	25170-72	13%
1966-67	79686-41	27686-41	13%

பொறுப்புகள்: 31-3-1967

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	1,02,966
ரிசர்வ் நிதி	ரூ.	31,458
டெபாசிட்டுகளும் கடன்களும்		11,20,295
சீட்டு இதர வகை பொறுப்புகள்	ரூ.	110,83,428
மொத்தம்	ரூ.	123,38,147

ஒவ்வொரு மாதமும் புதிய சீட்டு M குரூப் ரூ. 25,000 முதலுடன் ஆரம்பமாகிறது!
மாதம் ரூ 1250 வீதம் 20 தவணைகள்
ஏலங்கள் வழக்கம்போல் எங்கள் திருச்சி கிளையில் நடைபெறும்
தணிக்கை செய்யப்பட்ட பாலன்ஸ்ஷீட்டுகள் சேர விரும்புகிறவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
எமது கிளையுடன் தொடர்பு கொள்ள புதிய டெலிபோன் டைரக்டரியைப் பார்க்கவும்.

அனுமதித்த தேதி 30-10-67

AR. ராமசுவாமி மானேஜிங் டைரக்டர்

எங்கள் புரசைவாக்கம் திண்டுக்கல் சேலம் கிளைகள் விரைவில் துவங்குகிறது

PARAMOUNT

ருமே பிச்சைக்காரத் தேவதைகள். இரண்டாவது உலகப் போர் அவர்களை அத்தகைய கீழ் நிலைக்குத் தாழ்த்தி யிருந்தது.

படபட வென்று தட்டெழுத்துப் பொறியை இயக்கிக் கொண்டிருந்த என்னைச் செங்கோடனின் வரவு தடை செய்தது. படைத்தலைவர் மது அருந்துவதற்கு முன்பு தந்த செய்திகள் மேஜையின் மேல் குட்டெழுத்தில் வரையப் பட்டு நிற்கின்றன. இடதுபுறம் மைப் புட்டி. கீழே மேஜைக்குக் கீழ் கணப்புச் சட்டி சாம்பல் பூத்துக் கிடக்கிறது. வேகமாக டைப் செய்யும் போதே விரல்கள் குளிரில் மரத்துவிடும். அவ்வப் போது அவற்றைக் கணப்பில் காய்ச்சிக் கொள்ள வேண்டியிருந்தது.

''குட்மார்னிங் ஸார்!'' பணிவான குரலில் கூறுகிறான் செங்கோடன்.

நான் பதிலுக்கு இரண்டு விரல்களை உயர்த்துகிறேன். ஒரு பழைய பத்திரிகையை எடுத்துக் கொண்டு கூடாரத்தின் வெளிச்சமுள்ள மூலைக்குப் போய் நின்று கொண்டு படிப்பது போல் பாவனை புரிகிறேன். செங்கோடன் கயிற்றுப் பாய் விரித்திருந்த தரையைச் சுத்தம் செய்து விட்டு மேஜையடியில் இருந்த குப்பைக் காகிதங்களைத் தனது தகர டப்பாவில் கொட்டிக் கொள்கிறான். பிறகு மேஜையின் மேல் இருப்பவற்றைத் துடைத்து வைக்கிறான்.

மதுப் புட்டியைத் தழுவி நிற்கும் மங்கை ஒருத்தியின் உருவப் படத்தில் சொக்கிப் போய் நிற்கிறேன் நான். எத்தனை வழுவழுப்பான காகிதம்! மனிதப் பிறவி எடுத்திருப்பதே அந்த மதுவை அருந்துவதற்காகத்தான் என்று அந்த விளம்பரம் உறுதியாகக் கூறுகிறது.

ஏதோ சத்தம் கேட்டு என் சிந்தனை கலைகிறது. மேஜையின் மேலிருந்த மசிப் புட்டி உருண்டு கயிற்றுப் பாயைக் கறை யாக்குகிறது. அது கக்கிய மசியினால் எனது குட்டெழுத்துக் குறிப்புக்களெல்லாம் நாசமாகி யிருக்குமோ! நான் பரபரப்புடன் மேசையை நோக்கி விரைகிறேன். ஒரு வெற்றுக் காகிதத்தில் மைப் புட்டி கருங் குழம்பைச் சிதறி யிருக்கிறது. செங்கோடன் அதை உற்றுப் பார்த்துக் கொண்டே பிரமை பிடித்தாற் போல நிற்கிறான். மூன்று சிகரங்களையுடைய மலைத் தொடர், அதனிடையில் அருவியைப் போல ஓர் இடைவெளி, மலைச் சரிவில் மரங்களைப்போல் சில கோடுகள், கீழே புதர்களை ஒத்த சிறு துளிகள். அடுத்துத் தரை மட்டத்தில் அலைகடல், உயர வானத்தில் சிறு புட்கள்—சிறிய மசி தானாகவே ஓர் ஓவியமாக உருவெடுத்து விட்டது.

''மடையா! இட் ஈஸ் ய காஸ்ட்லி இங்க்.''

செங்கோடன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்கிறான். ''ஸார், தமிழுங்களா?'' அவனுடைய முகத்தில் கனிவுப் புன்னகை. தமிழ் வசவுகூட அவனுக்கு இனித்ததோ?

நான் அருவருப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறேன். மேஜையின்மீது மசி பரவிக் கிடந்த அந்தக் காகிதத்தைக் கசக்கி எறிவதற்காக எடுக்கிறேன். ''ஸார், ஸார், அதை என்னிடம் கொடுங்கள்.'' செங்கோடன் கெஞ்சுகிறான். அந்தக் காகிதத்தை அவன் முன்பு விசிறிவிட்டு டைப் செய்வதில் மூழ்குகிறேன். நல்ல வேளையாகக் குட்டெழுத்துக் குறிப்பு பாழாகவில்லை. ஒரு கையால் துடைப்பத்தையும், இன்னொரு கையால் தகர டப்பாவையும் ஏந்திய செங்கோடன் கூடாரத்தின் ஒரு மூலையில் தயங்கி நின்று என்னைப் பார்த்துவிட்டு நெட்டுயிர்ப்புடன் அங்கிருந்து வெளியேறுகிறான்.

3

அது ஒரு பள்ளிக்கூடக் கட்டடம். போர்க் காலமானதால் எங்களுடைய மெஸ்ஸாக மாறியிருந்தது. இந்தக் கிரேக்கர்களே கலையுணர்ச்சி மிக்கவர்கள். அந்தப் பள்ளியின் வகுப்பறையிலிருந்த கரும் பலகையை இரு சின்னஞ் சிறு தேவதைகள் தூக்கிக் கொண்டு நின்றார்கள். சுவர்களில் சிறுவர் சிறுமியரின் அழகோவியங்கள். கதவுகளின் கைப் பிடிகளில் எல்லாம் அழகிய மனித முகம். கூந்தலை விரித்த இளம் பெண்ணின் உருவம் பல இடங்களில் எதிர்ப்பட்டது.

பளிங்குத் தட்டில் சாம்பேயினை ஏந்திப் பணியாள் என்னிடம் வருகிறான். தம்ளரில் அரைக்கால் பங்கு மதுவை ஊற்றிக் கொண்டு மிகுதியை சோடாவினால் நிரப்புகிறேன். மூலையில் இடப்பட்டிருந்த காம்ப் ஸ்டூலில் அமருகிறேன். 'மெஸ் வெய்ட்டர்' அந்தத் தாலத்தை எதிர்ப்புறத்தில் நின்று கொண்டிருந்த அதிகாரிகளிடம் கொண்டு போகிறான். காப்டன் ராபர்ட்டின் முகம் மாறுகிறது. 'டேக் இட் எவே.'' அவன் உறுமுகிறான். தாலத்தில் முட்டைப் பொரியலும், சோடாவும், மதுவும் நிறைய இருக்கின்றன. என்றாலும் அவர்களுக்கு அது வேண்டாம். ஏனென்றால், அவைகளை நான் தொட்டு விட்டேன்.

நானும் ஒரு 'கிங்ஸ் கமிஷன்ட்' அதிகாரி தான். எனது சளியாத உழைப்பினாலும், கூர்மையான அறிவினாலும் துணைத் தளபதியின் பர்ஸனல் ஆபீஸராக இருக்கிறேன். ஸெக்டர் கமாண்டர்களுக்கான உத்தரவை எல்லாம் நானே பிறப்பிக்கிறேன். என்றாலும் நான் ஒரு 'நிக்கர்', கறுப்பன், இந்தியன்—அடிமை நாட்டைச் சேர்ந்தவன்.

மாட்டிறைச்சிக் கோப்தாவையும், குளியலறைக் காகிதத்தையுமாவது என்னால் பொறுத்துக் கொள்ள முடிகிறது. ஆனால் இந்தப் பொடியன்கள் ராபர்ட்ஸனும், நிக்கல்ஸனும் என்னைப் பார்க்கும் முறை, என்னை விலக்கியிருக்கும் வகை, இவற்றை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நல்ல தொழில்கள் இருக்க இங்கே ஏன் வந்தேன்?


இடையே ஒரு கையில் துடைப்பமும், தகர டப்பாவும் ஏந்திய செங்கோடனின் உருவம் என் மனக் கண் முன்பு தோன்றி மறைந்தது. நான் மட்டும் அவனை எப்படி மதிக்கிறேன்?

ஐரோப்பியர்களுக்குள்ளேயே கிரேக்கர்கள் நிறக் கர்வம் மிகுந்தவர்கள்தான் என்று எண்ணுகிறேன். இந்தச் சின்னஞ் சிறு தீவும் கிரீஸ் நாட்டின் ஒரு பகுதிதானே! வீதியில்

ஒரு குதிரைப் பந்தயக்காரர் கார் விபத்தொன்றில் இறந்து விட்டார். எனவே, இன்ஷியூரன்ஸ் கம்பெனி அவர் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதாக இருந்தது. விபத்தில் அவர் இறந்த செய்தியை அவர் மனைவிக்குத் தெரிவிக்கும் பொறுப்பு ஒரு நிர்வாகியிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்ஷியூரன்ஸ் கம்பெனி நிர்வாகி மாண்டவருடைய மனைவியிடம் கீழ்க்கண்டவாறு கூறினர்:

''அம்மா உங்கள் கணவர் சற்று நேரத்துக்கு முன் ஒரு பெரிய கார் விபத்தில் ஒரு லட்சம் ரூபாய் ஜெயித்திருக்கிறர்''.

— ஆர். சலாமுல்லா



யமனிடம் வெற்றி

செல்லும்போது இந்த ஊர்க்காரர் எவரும் என்னை இழிவாகப் பார்ப்பதில்லை.

அன்று அப்படித்தான் அந்தப் பெண் எல்லியானு பக்கத்திலிருந்த சுனையிலிருந்து இரு வாளிகளில் நீரை எடுத்துக் கொண்டு நடந்து வந்தாள். ஒப்பனை யில்லாத கிரேக்க சிலை. சற்றே உயர்ந்த காலணி, திறந்த கணுக்கால், முழங்கால்கள். அவை ஆப்பிளின் நிறச் சிவப்பு. மேல் துடை வரையில் மூடியிருந்த அரைக்கை கௌன். தலையில் பச்சை நிறக் குட்டை. கண்ணாடிக் கன்னம், நீலக் கரு விழிகள், மாதுளைச் செப்பினுள் முத்தாரப் பல் வரிசை. வலுவான இரண்டு கைகளிலும் வாளிகளை ஏந்திக் கொண்டு எதிரே நடந்து வந்தாள். இறுக்கமான உடையிலே அவளுடைய அங்க வளைவுகள் கிளுகிளுப்பை உண்டாக்கின. தொலைவில் அவளைக் கண்டதுமே எனக்கு ஏனே விக்டர் ஹ்யூகோவின் கோஸெட்டின் நினைவு வந்தது.

சிலுசிலு வென்று காற்றடித்தது. பிறகு அதன் வேகம் மிகைப்பட்டது. நான் அவளை நெருங்கும் போது அவளுடைய தலையில் அணிந்திருந்த பச்சை நிறக் குட்டை காற்றில் படபடத்துத் தரையில் விழுந்தது. நான் அதைக் கையில் எடுத்து அவளிடம் தர முயன்றேன். கனி வாயினுல் அவள் கெஞ்சினுள். தலையைச் சாய்த்துக் கொண்டாள். 'ப்ளீஸ்!' பொன்னிறக் கூந்தலுடைய அவளுடைய தலையில் அந்தக் குட்டையைப் பொருத்திக் கழுத்தில் சுருக்கும் போது என் விரல்கள் தாமரை மலரைத் தீண்டின. நாசி மனோரஞ்சிதத்தை முகர்ந்தது. வியனர்டோவின் ஓவியத்தைப் போன்ற அந்த உருவத்தைப் பார்த்தவாறு வெகு நேரம் சிலையாகி நின்றேன். அவளுடைய தந்தை ஒரு ஹோட்டல் வைத்திருந்தார். உயர்ந்த வகை மதுவும் ருசிமிக்க உணவுகளும் அங்கு கிடைக்கும். சனிக்கிழமை இரவுகளில் 'லேட் நைட்' டான்ஸூம் உண்டு. ப்ரெஞ்ச் சாக் துகள் தூவிய பளிங்குத் தரையில் எல்லியானுவின் இடுப்பை வளைத்துக் கொண்டு எத்தனை முறை ஃபாக்ஸ்ட்ராட் ஆடியிருப்பேன். அவளுடைய கடற்பஞ்சு உடல் என்மீது சாய்ந்த நிலையில் வால்ட்ஸ் இசைக்கு ஏற்ப அவளுடைய விழிகள் அசையும் போது வேறு எச்சுவை பெறினும் வேண்டேன் என்று நான் எண்ணியதுண்டு. அவளது மலர் மணம் வீசும் மூச்சுக் காற்று என்னை வானத்தில் பறக்கச் செய்திருக்கிறது.

ஆனல் இந்தியர்களாகிய நாம்தான் இந்த மாதிரி நேரங்களில் உணர்ச்சி வசப்பட்டுவிடுகிறோம். மேலை நாட்டினர் இவையனைத்தையும் இயந்திர கதியில் செய்கிறார்கள். உணர்ச்சிகளுக்குத் தெய்வத்தன்மை போர்த்தி அதை ஒழுக்கம் என்று கூறும் வழக்கம் அவர்களுக்குக் கிடையாது. சோர்வு மிகுந்திருக்கும்போது ஒரு கோப்பை தேநீர் அருந்துவது போல, ஒருதரம் 'வில்ஸ்' இழுப்பது மாதிரி, அவர்களுக்குப் பெண்ணின்பம் வெறும் நரம்பூக்கி, 'ஸ்டிமுலண்ட்'—அவ்வளவுதான். அது சரியா தவறு என்று தீர்மானிக்க என்னிடம் தராசு மில்லை. ஆனல் அது ஒரு வாழ் முறை; நமக்குப் புதியதான ஒன்று.

போர் நிலைமை வெகு கடுமையா யிருந்ததால் கேளிக்கைகளும், உயர்தர வசதிகளும் குறைந்து போயின. படையினருக்காவது வயிறு நிறைய உணவு கிடைத்து வந்தது. ஆனல் அங்கு வாழ்ந்த குடிமக்களுக்கு அன்றாட உணவே பிரச்னையாக ஆகிவிட்டது. ஒரு முழுத் துண்டு ரொட்டி, ஒரு பாக்கெட் சிகரெட், ஒரு சாக்லேட் பார் ஆகியவைகளைக் கொடுத்து ஓர் இராணுவக்காரன் அந்த நாட்டின் எந்தச் செல்வத்தையும் நாட விழையலாம். நாம் மிக உயர்ந்ததாகக் கருதும் மேற்குல மங்கையரின் பெண் நலம் உள்பட. அந்த நிலை எந்த நாட்டுக்கும் வந்துவிடக் கூடாது என்பதுதான் இறைவனிடம் என் இதயபூர்வ மான பிரார்த்தனை.

இப்போதெல்லாம் ஆல்பர்ட் சாலையும், கடற்கரையும் சந்திக்கும் மூலையில் செங்கோடனை அடிக்கடி பார்க்கிறேன். அவனைச் சுற்றிக் குழந்தைகள் கூட்டம். தனது ஹாவர் ஸாக்கிலிருந்து உலர்ந்த பழங்களையும் பிஸ்கட்டுகளையும் எடுத்து அவர்களுக்கு வழங்கினன். அவன் எரிந்து மிகுந்துபோன பாதி சிகரெட் துண்டுகளுக்காக முதியோர் கூட்டம் ஒன்றும் அவனைச் சூழ்ந்தது. அவனது தொழில் முறை வகையில் கிடைத்த முகாமில் கழிவாக எறியப்பட்ட உணவுப் பொருள்களை யெல்லாம் அவன் அவ்வாறு விநியோகிக்கத் தொடங்கினன். இதற்கு மாறுக அவன் பெற்ற சம்மானம் மிகவும் கொஞ்சம். அவர்களது குழந்தைகளைக் கட்டி முத்தமிடுவான். முதியோர்களை நாட்டுப் பாடல் பாடச் சொல்லி நாட்டியம் ஆடுவான். சிறுவர்களுக்குப் பற்பல வேடிக்கை


நிலவும் நிழலும் நேசமுடன்
இணைந்த நெசவோ ராயல்
பிரின்ஸஸ். புல்வெளிகளை
நெளிந்துபாயும் மலை அருவியோ
ராத் ராணி. மேனியெங்கும்
சிந்திப்பாயும் மின்னலோ ஏ1.
எழிலோவியம்!
கண்கவர் ஆடைகளுக்கு பின்லே.
பின்லே




ஓவல்டின்

ஒப்பற்ற 'ஒலிம்பிக்' பானம்

'ஒலிம்பிக்' தெம்பை உங்களுக்குத் தருவதற்கென சக்தி செறிந்து வருகிறது.

மற்றெந்த உணவு பானத்தையும் விட அதிக மால்ட் அடங்கப்பெற்று, சக்தி செறிவூட்டப்பட்டது ஓவல்டின். மால்ட் என்பது தெம்பு தரும், இயற்கையின் ஒப்பற்ற ஊட்டப் பொருள்களில் ஒன்றாகும். அதிக மால்ட், பால், வைட்டமின்கள், புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், யாவும் அடங்கிய ஓவல்டின், ஆட்ட வீரர்களுக்குக் கிடைக்கும் அதே 'ஒலிம்பிக்' தெம்பை உங்கள் குடும்பத்திற்கும் அளிக்கும்.
அருந்துங்கள் ஓவல்டின் – உடல்நலத்திற்கு ஓவல்டின், வலிமைக்கு ஓவல்டின், தெம்புக்கு ஓவல்டின்.



*சக்தி செறிவிக்கப்பட்ட ஓவல்டின், 1932 முதல் நடத்தப்பட்டுவரும் 7 ஒலிம்பிக் ஆட்ட விழாக்களிலும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பானமாக விளங்கிவருகிறது.

ஒவ்வொரு துளியிலும் ஊக்கம் துள்ளும்

ஓவல்டினைப் பாரதத்தில் ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனம், லண்டனிலுள்ள ஏ வாண்டர் லிமிடெட்டின் லைசென்ஸ் பெற்றுத் தயாரிக்கிறது

ஏகபோக விநியோகஸ்தர்கள்: வோல்டாஸ் லிமிடெட்.

காட்டுவான். மண்ணினால் பல சிற்றுரு வங்கள் செய்து வழங்குவான்.

அந்த ஆண்டு குளிர்காலம் வெகு கடுமை யாக இருந்தது. மரங்கள் அனைத்தும் மொட்டையாக நின்றன. புல்லும் பூண்டும் முளையிலேயே கருகி விட்டன. எங்கு பார்த் தாலும் வெண்மை. தூய வெள்ளை. வானத் தில் பூப்பூவாகப் பனித் துகள்கள் — நாரை இறகுபோல. கூடாரத்துக்கு வெளியே சென்று திரும்பினால் உடலின் மேல் வெண் மலர்கள் பூத்திருக்கும்.

கிறிஸ்துமஸ்ஸுக்கு முதல் நாள் என்று நினைவு. தெருவெல்லாம் பனித்திரள். ஸ்னோ பூட்ஸ் இல்லாமல் வீதியைக் கடக்கவே முடியாது. ஆல்பர்ட் சாலையின் மூலையில் பெரிய கூட்டம் கூடியிருந்தது. செங்கோடன் வழக்கமாக நிற்கும் இடம். அங்கே உயிர் பெறத் துடிப்பது போல ஒரு சிலை நின்றது. முழு ஆள் உயரத்துக்குப் பனித் தூளினாலே சமைக்கப்பட்ட அந்த வடிவம் இறக்கை இல் லாத தேவதையைப் போல் காட்சி யளித் தது. செழுமை மிகுந்த பெண்ணுருவம். இரு கைகளிலும் நீர்வாளிகள், தலையிலே துணிக் குட்டை. கண்களிலே கனிவுணர்ச்சி. அது எவருடைய உருவம் என்று எனக்குத் தெரிந்தது. அதைச் செய்தது யார் என்பதி லும் எனக்குச் சந்தேகம் இருக்கவில்லை. நகரம் முழுவதும் அந்தச் சிலையைப் பார்த் துப் புகழ்ந்தது. ஒரே நாளில் செங்கோடன் மலைச் சிகரப் புகழைத் தொட்டு விட்டான். நகரத்து மேயரே எங்கள் முகாமுக்கு வந்து அவனைக் கண்டு பாராட்டினார். அதற்குப் பிறகு நானும் கூட அவனுடைய கையைப் பிடித்துக் குலுக்கினேன். 'ரொம்ப சந் தோஷமுங்க. எல்லாம் பெரியவங்க ஆசீர்வாதம்.'

போரின் போக்குத் திசை மாறிற்று. நாங்கள் அந்தத் தீவை விட்டு வேறிடம் சென்று இன்னும் முக்கியமான கேந்திரத் தைக் கைப்பற்றும்படி ஆயிற்று. கப்பல் மூலமாகத்தான் புறப்பட்டோம். அங்கே பெரிய துறைமுகம் ஏதுமில்லாததால் எங்கள் மரக்கலம் தொலைதூரத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அதற்குக் காவலாக இரண்டு பாம்பர் ஃபைட்டர்கள் வானத்தில் பறந்து காவல் புரிந்தன. மோட்டார் படகுகளின் மூலம் நாங்கள் கப்பலை அடைந்தோம். பல படகுகள் இந்தப் பணியில் ஈடுபட்டிருந் தன. கடல் அமைதியின்றிப் பொங்கிய வாறு இருந்தது. எங்களுடைய இரு படகுகள் திசை மாறிக் கடற் கண்ணியில் மோதிச் சுக்கலாயின. அந்த விபத்தில் மரண மடைந்தவர்கள் பதினெட்டுப் பேர். அவர் களில் ஸ்வீப்பர் செங்கோடனும் ஒருவன் என்று அன்றிரவு 'ரோல் காலில்' தெரிய வந் தது. கப்பலின் மேல் தளத்தில் உணவருந் தும் முன்பு எங்கள் பிரிகேடியர் இதைக் குறிப்பிட்டார். மரண மடைந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக நாங்கள் ஒரு நிமிஷம் மௌனம் காத்தோம். அதனிறுதியில் 'கலை ஞன் செங்கோடனின் ஆன்மா சாந்தியடைவ தாக' என்று எங்கள் தலைவர் தழுதழுத்த



ஏக பத்தினி

பறவை இனங்களில் அன்னம், வாத்து, கொக்கு, நாரை — இவை ஏகபத்தினி விரதமுடையனவாம்.... விலங்கினங்களில் உர்ராங் உடாங் என்னும் குரங்கு ஓர் ஆணும், பெண்ணு மாய் ஆயுள் முழுவதும் வாழ்க்கை நடத்துகின்றனவாம்.

ஆதாரம்: 'ஸயன்ஸ் டைஜஸ்ட்'
தகவல்: 'ரமன்'

குரலில் கூறினர். 'ஆமென்' என்று நானும் சொன்னேன். ஆனால் அப்போது என் நெஞ்சு கரகரக்கவில்லை.

4

பல ஆண்டுகளுக்குப் பின் எதிர்பாராத முறையில் மறுபடியும் எல்லியாலுவைச் சந்தித்தேன். இந்த இடைக்காலத்தில் உலக வரலாற்றிலும் இந்திய சரித்திரத்திலும் கணக் கற்ற மாறுதல்கள். இந்தியா தற்போது ஒரு சுதந்திர நாடு. வேறு எந்த நாட்டின் வீரர்களுக்கு மிடையே இந்தியப் படை யினன் தலை நிமிர்ந்து உலாவலாம். அவனை யாரும் கறுப்பன், அடிமை என்று இழிவு செய்ய மாட்டார்கள். அவனும் தன்னம் பிக்கையுடன் பணி புரிந்து வருகிறான் என்று எழுதவே எனக்குப் பெருமையாக இருக்கிறது.

ஓய்வு பெற்ற இந்தியப் படைத் தலைவர் ஒருவரை ஐ. நா. ஸ்தாபனம் பணி புரிய அழைத்தது. அவருக்குத் துணையாக நானும் போய்ச் சேர்ந்தேன். அந்த நாட்டில் அலுவல் நிமித்தம் ஓர் ஊருக்குச் சென்றபோதுதான் அவளைச் சந்தித்தேன். அதே கட்டுக் குலையாத உடல். இளமையின் பூரிப்பு சற்றே அடங்கி யிருந்தாலும் அவளைச் சூழ்ந்திருந்த காவி யத் தன்மை சிறிதுகூடக் குறையவில்லை. அன்றிரவு விருந்துக்குப் பிறகு நாங்கள் மனம் விட்டுப் பேசினோம். அப்போதுதான் அவள் என்னை வேண்டினாள். 'நான் இந்தியா செல்ல விரும்புகிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்ய முடியுமா?'

''இமை நாடுகள் முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டாயா?'' சிகரெட்டை உதிர்த் தவாறே வினவினேன்.

''அதற்காக அல்ல. நான் அங்கேயே நிரந் தரமாகத் தங்க விரும்புகிறேன். அது என்

கணவரின் நாடு!'' எல்லியாணுவின் முகம் பளபளத்தது. கண்களிலே பரவச உணர்ச்சி.

நான் மெய்சிலிர்ப்புக்கு உள்ளானேன். என் நாவு புரள மறுத்தது.

''மிஸ்டர் செங்கோடன் என்று உங்களுடன் ஒருவர் பணி புரிந்தது நினைவிருக்கிறதா?''

நான் தலையை அசைத்தேன்.

''அவருடைய குழந்தைக்கு நான் தாய்.'' எல்லியாணு தலை குனிந்து கொண்டாள். ''அவன் தற்போது ஸ்விட்ஜர்லாந்தில் படிக்கிறான். அவனுடன் நான் என் கணவரின் ஊரில் தங்க விரும்புகிறேன். இங்குள்ள இந்திய ராஜதூதர் இதுவரை சாதகமாகப் பதில் சொல்லவில்லை.''

என் கண் முன்பு திலகவதியும், கண்ணகியும் எதிர்ப்பட்டனர். உயர்குலப் பெண் தன்மை என்பது உலகெங்கும் ஒரே மாதிரியாகத்தானிருக்குமோ?

எனது தலைவரின் மூலம் அவளுக்கு இந்த உதவியைப் புரிவது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. பாரத அரசாங்கத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு எல்லியாணுவுக்கு அனுமதி வாங்கிக் கொடுத்து விட்டேன்.

இந்தியாவில் தமிழ் நாட்டுக் கிராமமான மலைப்பட்டிக்கு வந்த பிறகு தனது அனுபவங்களை அவள் அவ்வப்போது எழுதுவாள். கிராம வாழ்க்கை, மக்களின் உயர் பண்பு, அவர்களுடன் தான் பழக நேரிட்டபோது எதிர்ப்பட்ட பிரச்னைகள் குறித்து எல்லியாணு அடிக்கடி எழுதுவது வழக்கம். அவ்வளவும் பதிலை எதிர்பாராத கடிதங்கள்.

தன் மகன் வீரேசன் இந்திய ராணுவத்தில் சேர்ந்திருப்பது பற்றியும் உயர் பதவி அடைந்திருப்பது குறித்தும் பல கடிதங்கள் வந்தன. ஒரு முறை என்னை அவளுடைய கிராமத்துக்கு வந்து வாழ்த்தும்படி கேட்டுக் கொண்டாள். எனக்குத்தான் அங்கு செல்ல ஒழிவே ஏற்படவில்லை. அவளுடைய தற்போதைய நிலையில் சந்திப்பதற்குரிய துணிவும் இல்லை என்று உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

5

மாயனூர் ஸ்டேஷனில் இறங்கியதுமே தென்மேற்கே சங்கரன் குன்றின் உருவம் தெரிந்தது. ஆகவே அந்தக் கிராமத்துக்குச் செல்ல யாரையும் வழி கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே ஒரு கைப்பையுடன் குறுக்குப் பாதையில் புஞ்சைக் காட்டின் வழியே நடந்தேன். கப்பி ரோடு வண்டி மண் பாதையும் எதிர்ப்பட்டது.

கிராமத்தில் தீபாவளிக் களை கட்டியிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பட்டாசு வெடிகள். இடை இடையே கந்தகக் குழல் வெடி. வானத்தில் நவச்சாரப் புகையின் நெடி வீசிற்று. மாடுகள் முன்னும் பின்னும் நகர்ந்து அகலமும் ஆழமும் மிக்க கிணறுகளிலிருந்து தோல்பறியில் தண்ணீரை மொண்டு வந்தன. புஞ்சை நிலம் கூட நெல்லை விளைவித்தது.

கிராமத்தின் எல்லையில் பால் பண்ணை. பல குழந்தைகளும், தாய்மாரும் அலுமினியக் குவளையுடன் நின்றனர். அவ்வளவு மாடுகளையும் கன்றுகளையும் ஒரு மிக்கப் பார்ப்பது இனிய காட்சியாக இருந்தது.

''வருக, வருக! அண்ணன் வரவேண்டும்'' என்று இலக்கண சுத்தமான தமிழில் எல்லியாணு என்னை வரவேற்றாள். முகத்தில் அதே தளதளப்பு. காதோரங்களில் சற்றே நரையோடிய கூந்தல். காவி நிறப் புடவையைச் சுற்று வட்டாரத்தினர் உடுத்துவதைப்போல் அணிந்திருந்தாள். கழுத்தில் சங்கிலி.

முன் கூடத்தில் பாய் விரிக்கப்பட்ட தரையில் உட்கார்ந்தேன். பாலும், நாரத்தம் பழங்களும், பன நுங்குகளும் வந்தன. ஒரு சிறு தட்டில் உப்பிட்ட வேர்க்கடலை.

''எல்லாம் அவருடைய தோட்டத்து விளைச்சல்.'' அவள் தளர்ந்தகுரலில் கூறினாள்.

''வழியிலே எல்லோரும் உன் புகழ் பாடுகிறார்கள். ஊராருக்கெல்லாம் மிகவும் உபகாரமாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். மிகவும் சந்தோஷமான செய்தி'' என்றேன்.

''அவர் பிறந்த மண்ணுக்கு நான் ஆற்ற வேண்டிய தொண்டு அது. பாராட்டுக்கு எதுவுமே இல்லை''—அவள் விடை யிறுத்தாள்.

வீட்டைச் சுற்றிப் பார்த்தேன். இந்திய முறையில் கட்டப்பட்ட வீடு. சகல மேனாட்டு வசதிகளுடனும் விளங்கிற்று. ஆனால் எளிமை சூழ்ந்திருந்தது.

''காப்டன் வீரேசன் நலமாயிருக்கிறானா? கடிதம் வருகிறதா?'' முன்னறையில் மாட்டியிருந்த பெரிய புகைப்படத்தைப் பார்த்து விட்டு வினவினேன். பனிமலைச் சாரலில் பலமான கம்பளி உடைகள் அணிந்திருந்தான் அவன். வீரேசனின் கண்களில் ஒரு கலைக் கவர்ச்சி இருந்தது.

எல்லியாணு அந்தப் படத்தைப் பார்த்தாள். அடுத்து அவளுடைய விழிகள் வானத்தை நோக்கி உயர்ந்தன. துடிக்கும் உதடுகள்.


படத்தின் கீழிருந்த நீண்ட மரப் பேழையிலிருந்து அரசாங்க இலச்சினை பொறித்த பட்டயம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். எதற்குமே கலங்காத அவளுடைய கரங்கள் இலேசாக நடுங்கியதைக் கண்டதும் என்னுடைய உள் நரம்புகளை யாரோ உலுக்கினாற்போல் இருந்தது.

அஸல்-உத்தர் போர்க்களத்தில் மார்பினால் ஊர்ந்து எதிரியின் பாதுகாப்புத் தளத்தைக் கைக்குண்டினால் தகர்த்து அதைக் கைப்பற்றிய பிறகு வீர மரணம் எய்திய காப்டன் வீரேசனின் புகழ் அந்த வண்ணக் காகிதத்தில் வடிக்கப் பட்டிருந்தது.

''என் கணவர் தந்த செல்வத்தை அவருடைய தாய்நாட்டின் பாதுகாப்புக்கே காணிக்கையாகத்தந்து விட்டேன். அதைவிட எனக்கு வேறு என்ன பாக்கியம் வேண்டும்?'' விழிக் கடைகளில் பனித்த நீரைச் சுண்டியவாறே எல்லியாணு வினவினாள்.

சங்கரன் குன்றின் சந்தியாகாலப் பூஜை மணி ஒலித்தது. வாசற்புறம் யாரோ வந்த காலரவம் கேட்டு அவள் அந்த அறையினின்று வெளியே ஏகினாள்.

நான் சுற்று முற்றும் பார்த்துவிட்டு அந்த வீர மங்கை மிதித்த மண்ணைத் தலையில் தரித்துக் கொண்டேன்.



கல்யாணத் தேர்தல்!

மீரா

எத்தனை மூடி மறைத்தாலும் விஷயம் வெளியே பரவிவிட்டது — கடோத்கசா மில்லில் ஒரு மானேஜர் பதவிக்கான ஆள் தேர்வு அன்று.

'இண்டர்வ்யூ' என்பது ஒரு விசேஷமல்ல. ஆனால் அதை நடத்தப் போகும் நபர் ஒரு பெண்ணும். அதுதான் விசேஷம். மில் முதலாளியின் மகளாம். பெயர் அமலாதேவியாம். அமெரிக்கா சென்று உயர் கல்வி கற்று முந்தா நாள் விமானத்தில் வந்தவளாம். அரசல் புரசலாக விஷயத்தைக் கேள்விப்பட்டு இண்டர்வ்யூவுக்கு ஒரு 'க்யூ' வரிசையே வந்து நின்று விட்டது.

டையும், ஸ்லாக்கும், பாண்டும் என்ன... ஷார்க்ஸ்கினும், டெரிலினும், டெரிகாட்டும் என்ன என்ன.... பாண்ட்ஸூம், ஹேஸலினும், விஜேனியாவும் ஏந்தாலும் என்ன என்ன....என்ன..... !

பெண்ணுக்காக மட்டும் அல்ல இத்தனை ஆர்ப்பாட்டமும். அந்தப் பெண் ஒரு 'மிஸ்'ஸாகவும் இருந்ததால்தான் ஆண் உள்ளங்கள் இத்தனை ஆட்டமாக ஆடின.

வந்திருந்த அத்தனை 'அப்டுடேட்' இளைஞர்களையும் சுற்றி ஒரு நோட்டம் விட்ட நாத்தாச்சாரியின் நெஞ்சம் சுருங்கியது. நாற்பது வயதை எட்டிக் கொண்டிருக்கும் வேளையிலும் கல்யாணம் ஆகவில்லை என்பதற்காக அவர் இளைஞர் ஆகிவிடுவாரா? தலை நரைக்கு 'டை' செய்து கொண்டுதான் வந்திருந்தார். இருந்தாலும் வயதுக்கான முகச் சுருசுருப்பை அவரால் மறைக்க முடியவில்லையே. கோட்டும், சூட்டும் அவரிடம் கிடையாது. பக்கத்து வீட்டு உயர் வக்கீலின் கறுப்புக் கோட்டை இரவல் வாங்கி ஷெர்வாணி போல் மாட்டிக் கொண்டு வந்திருந்தார். பைஜாமா இருந்தால் பொருந்துமே என்று நினைத்து வருந்தியவர் வேஷ்டியையே 'இரண்டு குழல் கால்' ஜாடையிலாவது இருக்கட்டும் என்று மூலகச்சம் வைத்துக் கட்டிக் கொண்டிருந்தார். ஏதோ முடிந்தவரை கோலம் செய்து கொண்டுதான் வந்திருந்தார் நாத்தாச்சாரியார். தம்மால் முடிந்தவை எல்லாம் தான் செய்து விட்டார்.

இருந்தாலும் இத்தனை 'டிப்டாப்'களுக்கு நடுவிலே அவர் அமலாதேவியின் கண்களில் படுவாரா? ஆளைப் பார்த்துத்தானே வேலை கொடுக்கும் காலமாக இருக்கிறது! யோக்கியதைக்காகவா வேலை கிடைக்கிறது. ...? நாத்தாச்சாரி இளைஞர்களைச் சுட்டெரிப்பது போல் முறைத்துப் பார்த்தவண்ணம் மனத்துக்குள் அவர்களைச் சபித்துக் கொட்டினார். 'பி. ஏ.வாம், எம். ஏ.வாம் இவனுகள்; அந்தக் காலத்து மெட்ரிகுலேஷனுக்கு உள்ள ஒரு சத்து இந்தப் பயல்களிடம் உண்டா ! 'வி. ஏ. டி—காட்' என்று சரியாக உச்சரிக்கத் தெரியாத பசங்கள் எல்லாம் எனக்குப் போட்டியாக வந்துவிட்டார்கள். இங்கேயோ அல்லி தர்பார் நடக்கிறது... பொம்மனாட்டிக் குட்டிக்கு என்ன தெரியும்? சே...சே...சே!'

நாத்தாச்சாரி எத்தனை நேரம் சிந்தனையில் மூழ்கி இருந்தாரோ! பியூன் ஓர் அதட்டல் போட்ட பிறகுதான் நனவுலகத்துக்கு வந்து உள்ளே பாய்ந்து ஓடினார் நாத்தாச்சாரி.

உள்ளே மிஸ் அமலாதேவி. நாத்தாச்சாரியின் உள்ளத்திலே ஒரு வீணை மீட்டப்பட்டது. ஆஹா, எத்தனை அழகு! பெண்களைக் கண்டு பேதலிக்காத அவர் உள்ளம் முதல் முறையாகப் பேதலித்தது !

''ஐ..ஆம் ஸாரி, மிஸ்டர்... நீங்கள் நிற்பதைப் பார்க்கவில்லை. உட்காருங்கள்'' என்றாள் அமலாதேவி முத்துப் பல் தெரிய.

''ஓ, யெஸ்...! எஸ்.... யூ ஆர் ஸாரி..... ஐயேம் ஸாரி....!'' நாத்தாச்சாரி குழறினார் மயக்கத்தில்.

அமலா கலகலத்தாள். ''வேடிக்கையாகப் பேசுகிறீர்களே! நாத்தாச்சாரி என்ற உங்கள் பெயர் கொஞ்சம் 'ஓல்டா'க இல்லை.....?''

''நோ.... நோ.... யார் சொன்னது ? என்னை மிஸ்டர் நாத்தம் என்றுதான் பந்து மித்ரான் எல்லாம் கூப்பிடறது வழக்கம்.'' நாத்தாச்சாரியின் உடல் வெடவெடத்தது.

''என் மிஸ்டர், நாத்தம்! ஏன் உடம்பு நடுங்குகிறது. காப்பி வேண்டுமானால் கொஞ்சம் வரவழைக்கட்டுமா ?''

''வேண்டாம், வேண்டாம். நான் காப்பி குடிப்பதே இல்லை. கொஞ்சம் மோர் தீர்த்தம் இருந்தால்....'' என்று சொல்லிக் கொண்டே போன நாத்தாச்சாரி நாக்கைக் கடித்துத் தம்மை அடக்கிக் கொண்டார்.

அமலாதேவி தம்மைக் கர்நாடகம் என்று எண்ணிக் கொண்டிருப்பாளோ !

''அதாகப்பட்டது நான் சொல்ல வந்தது என்னன்னு... இந்த அறையே மோர் தீர்த்தம் போலக் குளிர்ச்சியாக இருக்கிறது.....!''

நாத்தாச்சாரி விழிப்பதைக் கண்டு கலகலவென - நகைத்த அமலாதேவி ''நீங்கள் இத்தனை சுவாரசியமான மனிதராக இருப்பீர்கள் என்று நினைக்கவே இல்லை'' என்றாள்.

''நீங்கள் இத்தனை யௌவன ஸ்திரீயாக இருப்பீர்கள் என்று நானும் நினைக்கவே இல்லை....'' என்று உளறினார் நாத்தாச்சாரி. பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டார். ''மன்னிக்கணும். ஹி....ஹி....''

''நோ.... நோ... மன்னிப்பு எதற்கு? உண்மையைச் சொன்னீர்கள். இதில் தவறு இல்லையே....! ஐ லைக் யுவர் இன்னொஸென்ஸ்.''

''ஐ லைக் யுவர் இன்டெலிஜென்ஸ்......!'' தாத்தாச்சாரி வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

''ஸரட்! உம்.... உங்களுக்கு எத்தனை குழந்தைகள்.....?''

''ஹி...ஹி....! ஒன்றுகூட இல்லே.....!''

''அடாடா! ராமேசுவரம் போய் வருவது தானே ?''

''வந்து... வந்து.... விவாகம் ஆன பிறகு தம்பதி சமேதராகப் போய் வந்தால் உத்தமம்னு படறது.....

அமலா துள்ளி எழுந்தாள். ''என்ன! உங்களுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லையா? நீங்கள் பிரம்மச்சாரியா?...'' தாத்தாச்சாரியும் பயத்துடன் எழுந்தார். ''மன்னிக்கணும். அது நான் தெரிந்து செய்த குற்றம் இல்லே..... செய்து கொண்டு விடணும் என்கிற அபிப்பிராயம்தான்.... ஆனால் ஏதோ வேளை வராததினால், இன்னும் ஆகவில்லே......''

அமலா உட்கார்ந்தாள். ''மன்னிப்பு எதற்கு? நீங்கள் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறீர்கள். ஐ லைக் யுவர் ப்ராங்க்னெஸ் வெரி மச்.......''

தாத்தா நாணத்துடன் தலையைப் பூமிப்புறம் கவிழ்த்துக் கொண்டார்.

''சரி, நீங்கள் போகலாம்.....''

தாத்தாச்சாரி மறுபடியும் துணுக்குற்றார். ''என்னதுன்னு! இண்டர்வ்யூ முடிந்துவிட்டதா ?......''

''ஓ....!''

''இந்த மானேஜர் பதவி....?''

''கடிதம் வரும்......!''

தாத்தாச்சாரி கோணிக் கொண்டே எழுந்து சென்றார். வெளியே இன்னும் நின்ற இரண்டு இளைஞர்கள் அவரைக் கண்டு ஏளனமாக நகைத்துக் கொண்டனர்.

ஒரு வாரம் ஓடியது. தாத்தாச்சாரியை நோக்கிப் பதவி ஓடி வந்தது. எதிர்பார்த்த மானேஜர் பதவியல்ல. ஆனால் கனவிலும் கருதாத பதவி.

தாத்தாச்சாரி காதலால் கசிந்துருகினார். அமலாதேவி நடத்தியது பதவிப்போட்டியல்லவாம். மணமகன் போட்டியாம். அவள் தேர்ந்தெடுத்தது தாத்தாச்சாரியையாம் !

'காத்திருந்தாலும் காத்திருந்தோம். லட்டு போல் இப்படி ஒரு பெண் கிடைக்க என்ன தவம் செய்துவிட்டோம்?' என்று பொங்கிப் பூரித்து மணமாலை சூட்டினார் தாத்தாச்சாரி.

ஜனதுவர்த்தியின் இனிய மணம். மல்லிகை குலுங்க நிற்கும் அமலா. தாத்தாவின் மனமே அவரைக் குத்தியது. அந்தக் குத்தலின் வேதனை தாளாமல் அவர் குமுறிவிட்டார்.

''அமலா! நான் அரைக் கிழவன். என் தலை முடி எல்லாம் நரை. .... ஏதோ' பதவிக்காக வேஷம் போட்டேனே தவிர கல்யாணத்திலே வந்து முடியும்னு நினைக்கலே. என்னை மன்னிப்பாயா?''

''மன்னிப்பா? நீங்கள் உண்மையைத்தானே சொன்னீர்கள்? எதற்காக மன்னிப்பது ?''

தாத்தா விம்மினார். ''அமலா...அமலா... என்ன இருந்தாலும் நீ 'யங் கர்ல்', என்னுடன் நீ ஜோடி சேர்ந்திருப்பது ரொம்ப அநீதம்!''—விக்கி விக்கி அழத் தொடங்கினார்.

..''போதும்! நிறுத்துங்கள். நாளும் கிழமையுமாக நீங்கள் அழுவது. இதோ பாருங்கள். நானும் உங்களுக்கு ஜோடிதான். கல்யாணத்துக்காகப் போட்ட வேஷம். பல் பொய்... முடி பொய்... அத்தனையும் மேக்கப். அமெரிக்கா போய் வந்தது பொய். கிராமத்தில் இருந்தேன். நானே பொய்தான். என் பெயர் அமலாவும் அல்ல.... குஞ்சம்மா! இப்போது மனம் சமாதானப்பட்டுதா?''

''ஐ லைக் யுவர் ஓல்ட்னெஸ் வெரி...இ.... வெ.... வெரி.... வெரிச...'' என்று 'மச்'சை முடிக்கச் சக்தி இன்றித் திணறிக் கொண்டே நின்றார் மிஸ்டர் தாத்தம்.



வட்ட மேஜை

* வெறுப்பில்லை!
* வழி செய்வார்களா?
* ஆத்ம நாகமும் நெஞ்சக்கிளர்ச்சியும்
* ருக்மிணி விஜயம்
* திருஷ்டி சுற்றவும்!
* கதாசிரியையாக வரட்டும்!

கல்கி 22-10-67 இதழில் 'என்ன சேதி?' பகுதியில் 'பாராட்டுக்குரிய பண்பு', 'எதிர்பாராத நிகழ்ச்சி' என்ற இரு குறிப்புகளைப் பிரசுரித்திருப்பது, நமது மதம், ஆசார வழிபாட்டு முறை இவைகளில் இன்றைய தமிழக அரசினருக்கும் ஆளும் கட்சியினருக்கும் யாதொரு வெறுப்பும் இல்லை என்பதைத் தெள்ளெனத் தெரிவித்து — மக்களில் ஒருசில சந்தேகப் பிரகிருதிகளின் மனக் குழப்பத்தைப் போக்க உதவி புரியும்.

தமிழக அரசும், ஆளும் கட்சியினரும், தமிழை வளர்த்திடலைத் தமது குறிக்கோட்களில் ஒன்றாக ஏற்றிருப்பினும் பிற மொழிகளிலும், குறிப்பாக வடமொழியிலும், இவர்களுக்கு வெறுப்பில்லை என்பதை ஊகித்திடற்கும் ஒரு சான்று தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னம் உதயசூரியன். ''திராவிடம்'' என்ற சொல்லைத் தமிழ் என்ற பொருளில் வைணவச் சமய நூல்களிலும் மதத் தலைவர்களும் உபயோகித்துள்ளதைக் காண்கிறோம். 'உதய, சூரிய' இவ்விரண்டும் வடமொழிச் சொற்கள். இப்படித் தமது கட்சியின் பெயரிலும் அதன் சின்னத்தின் பெயரிலுமே வடமொழிச் சொற்களை ஏற்றிருப்பதிலிருந்தே அம்மொழியில் இக்கட்சியினருக்கு வெறுப்புக் கிடையாது என்பதும் அம்மொழியில் பற்றுள்ளவர்பால் இவருக்கு ஒரு தோழமை மனப் போக்கு உண்டு என்பதும் எனது ஊகம்.

சென்னை — 34 ஸ்ரீ ஹரி

என். ஜி. ஓ.க்களுக்கு அரசினர் பஞ்சப் படியை உயர்த்தி அளிப்பதென அறிவித்ததை மகிழ்ச்சியுடன் வரவேற்கும்போதே கீழ்க் கண்ட கோரிக்கையைத் தெரிவிக்கிறேன்:

1. இரண்டு மாதங்களுக்கு முன்பு கேரள அரசினர் ஈட்டிய விடுப்பு (Earned leave) இருந்தும் விடுப்பு எடுக்க விருப்பமில்லாத என். ஜி. ஓ.க்களுக்கு அந்த மாதத்துக்கான சம்பளத் தொகையை அந்த என். ஜி. ஓ. வினருக்கே அளிக்க உத்தரவு அளித்திருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அதே போல் தமிழக அரசினரும் ஈட்டிய விடுப்புக்குப் பதில் சம்பளத் தொகையை அளித்தால் விருப்பமுள்ள என். ஜி. ஓ.க்கள் கடன் வாங்குவதிலிருந்து விடுபடுவார்கள். அவர்களுக்கு இந்தத்தொகை போனஸ்போலக் கிடைக்கும்.

2. ஆங்கில, தமிழ் தட்டெழுத்தர்களுக்கு விசேஷப் படி 30 வருடங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. இப்போது இந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பார்களா?

3. தமிழ் தட்டெழுத்துக்கான விசேஷ ஊதியம் ஓர் அலுவலகத்தில் ஒருவருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை எல்லோருக்கும் கிடைக்க வழிசெய்வார்களா?

காட்பாடி சூர்யநாராயணன்

கல்கி 22-10-67 இதழில் வெளியான ''ஆத்ம நாகம்'' முருக பக்தர்களை மட்டுமல்லாது மற்றோரையும் உணர்ச்சி வசப்படச் செய்கிறது. கணவரைப் பிழைப்பின் காரணமாக வெளியூர் அனுப்பிவிட்டு நெஞ்சம் சூன்ய உணர்வில் தவிக்க வாழும் பெண்களின் மனநிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார் ஸ்ரீமதி லட்சுமி சுப்ரமண்யம் தமது ''நெஞ்சக் கிளர்ச்சி''யில்.

இளையாங்குடி வி. மதி

நீதான் ருக்குவா! சமத்து. ஒன் போட்டோவைக் கல்கிலே பார்த்தேன். எங்காத்துக்கு ஒரு நாள் வாயேன். இந்தத் தீபாவளி உனக்கு நல்ல 'லக்கி' தீபாவளி. என்ன, பிரைஸ் அடிச்சுட்டியே!

ஒங்க தாத்தா போல நல்ல பேரெடுத்து, எல்லாருக்கும் நல்ல பொண்ணு நடந்துக்கோ. பெரிய தாத்தா ராஜாஜி இருக்காரோல்லியோ, அவர் கிட்ட நம்ம காந்தித் தாத்தா கிட்டே இந்திரா காந்தி இருந்தாப் போலே சமத்தா இரு!

ஐயப்பன் அருளாலே, காமகோடி பெரியவா ஆசீர்வாதத்திலே வியாதி வக்கே இல்லாம நீ நன்னா இருக்கணும்.

எங்கே கன்னத்தைக் காட்டு ஒண்ணே ஒண்ணு.......

பிரியமுள்ள
சென்னை—33 பானு

கல்கி 22-10-67 அட்டைப்படம் கண்டேன். குழந்தை ருக்குவின் தேனொழுகும் கன்னல் மழலை மொழியையும் கேட்டேன். மேலே ஒன்றுமே படிக்கத் தோன்றவில்லை. குழந்தையையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது. முதல் காரியமாகக் குழந்தைக்குத் திருஷ்டி சுற்றிப் போடச் சொல்லுங்கோ. வேறுவிதமான படங்களையே பார்த்துக் கொண்டிருந்த வாசகர்கள் குழந்தைப் படத்தைப் பிரசுரித்த கல்கியை மனமாரப் பாராட்டுகிறார்கள்.

மதுரை மு. கனிமுத்து

ருக்குவும் தன் தாத்தாவையும் மாமாவையும் அன்னையையும் போல் பெரிய கதாசிரியையாக வருவாள் என நம்புகிறேன்.

சென்னை—5 என். ராகவன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.


பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
ஃபேஸ் பவுடர்
POND'S
சொப்பன
சுந்தரியின்
வதனப் பொலிவை
உங்களுக்கு அளிக்கும்!
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச்சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. யில் இணைக்கப்பட்டது)
P. 5768

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி



